தொண்டன்

சிறுகதைத் தொகுதி

ரூ. 1/4

தொண்டன் பிரசுராலயம்

தொண்டன்

சிறுகதைத் தொகுதி

பன்னிரண்டு கதைகள்

894.8113

2205

தொண்டன் பிரசுராலயம்

வேளுக்குடி P. O.,

தஞ்சை ஜில்லா

பதிப்புரிமை] 1943 [விலை 1-4-0

முதற்பதிப்பு, நவம்பர், 1943

இக்கதைத் தொகுதியில் இடம் பெற்றிருக்கும் கதைகளில் சில, பத்திரிகைகளில் வெளி வந்தவை. அப்பத்திரிகாசிரியர் களுக்கு எங்கள் நன்றி.

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், ஜி. டி., சென்னை

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	அவள் — 'அகிலன்'	... 1
2.	கடமை — ஆர். ஆறுமுகம்	... 11
3.	மறைந்த கடிதம் — 'குகப்பிரியை'	... 28
4.	கழுமரம் — பி. கோதண்டராமன் எம். ஏ., பி. எல்.	... 40
5.	ஏழைப் பையன் — ஆர். ஷண்முகசுந்தரம்	... 49
6.	சிற்பியின் மனைவி — ஆர். சுப்பையா	... 55
7.	என் தீபாவளி — கே. எம். ஷெரீப்	... 61
8.	தங்கம்மா — ஆர். திருஞானசம்பந்தம்	... 69
9.	தியாகம் — 'நீலன்'	... 79
10.	சிதைந்த சிற்பம் — கு. மா. பாலசுப்ரமணியம்	... 87
11.	லட்சியச் சிதைவு — 'வல்லிக்கண்ணன்'	... 95
12.	தாயுள்ளம் — ரா. வெங்கடாசலம்	... 103

பதிப்புரை

உலகில் எந்தப் பக்கம் நோக்கினாலும், வாசகர்கள் "சிறு கதைகளைத்தான் அதிகமாக வரவேற்கிறார்கள்." இதற்குக் காரணம் என்ன என்று நாம் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. பெரும்பாலானவர்களின் ஆர்வம் எந்த வழியில் செல்லுகின்றதோ அவ்வழியே நின்று அவர்களின் ஆவலைப்பூர்த்தி செய்வதுடன் கலைக்கும், சமூகத்திற்கும் அதன் வாயிலாகத் தொண்டாற்ற முயற்சிப்பதுதான் சிறந்த முறை. எனவே, வீழ்ச்சியுற்றிருக்கும் நம்நாட்டு மக்களை உணர்வடையச் செய்ய சிறு கதை இலக்கியம் நம்மிடையே அதிகமாகத் தேவைப்படுகிறது. இதை உணர்ந்தே நம் நாட்டுச் சஞ்சிகைகளும், பிரசுராலயங்களும் சிறு கதை வளர்ச்சி அடைய வழி தேடி வருகின்றன. எழுத்தாளர்களை உத்சாக மூட்டிப் புதுப்புதுக் கருத்துக்கள் நிறைந்த சிறு கதைகளை எழுதும்படி தூண்டுகின்றார்கள். எழுத்தாளர்கட்கு இதனாலெல்லாம் ஒருவித திருப்தி. 'நாம் நாட்டிற்கும் மொழிக்கும் ஏககாலத்தில் தொண்டாற்றுகிறோம்' என்ற பூரிப்பு.

சிறு கதை என்றால் எப்படி இருக்கவேண்டும்? அதற்கு இலக்கணம் என்ன என்பதை எல்லாம் தமிழர்கள் புரிந்துகொள்ளாத காலம் ஒன்றிருந்தது. ஆனால், இன்றைய தமிழ் நாட்டிலே இலக்கணம் வழுவாதபடி அரிய கருத்துக்கள் நிறைந்த கதைகளை சிருஷ்டிக்கும் சிறு கதை ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கில் தோன்றி விட்டனர். சிறு கதை எழுதுவதில் மற்ற எந்த நாட்டிற்கும் இன்று தமிழ்நாடு தாழ்ந்ததாக இல்லை. இதனால் தமிழ் மொழி ஓரளவு புத்துயிர் பெற்றிருக்கின்றது என்று

கூடச் சொல்லலாம். வாசகர்களின் படிப்பார்வம் அதி கரிக்க அதிகரிக்க ஆசிரியர்கள் எழுதி எழுதிக் குவிக்கின் றார்கள். வாசகர்கட்கும் ஆசிரியர்கட்கும் ஏற்பட்டுள்ள பரபரப்பைக்கண்டு புதுப்புது பிரசுராலயங்கள் தோன் றிக்கொண்டே யிருக்கின்றன. இந்த முறையில் தமிழர் களின் கலைப்பசிக்கு முடிந்தவரை உணவளிப்பதென்ற நோக்கத்தோடு தோன்றியுள்ள எங்கள் பிரசுரா லயம் முதன் முயற்சியாக தமிழ்நாட்டின் சிறு கதை சிருஷ்டிக் கர்த்தாக்களில் பன்னிருவர்களைக்கொண்டு இந்தச் சிறுகதைத் தொகுதியை உருவாக்கியுள்ள தென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளு கிறோம். இதில் இடம் பெற்றிருக்கும் பன்னிரண்டு கதை களும் பன்னிரண்டு வைரமணிகள் என்றே சொல்ல வேண்டும். அவ்வளவு சிறப்பு வாய்ந்தவைகள். வெறும் பொழுது போக்கிற்காகமட்டும் படிக்க வேண்டிய கதைக ளல்ல. ஒவ்வொரு தமிழன் இதயத்தின் அடிப்பாகத்தி லும் பதிந்திருக்க வேண்டிய முக்கிய கருத்துக்களைக் கொண்டவைகள்.

‘ அவள் ’

ஊழல் மலிந்த தாசி ஒருவளின் வாழ்க்கையைச் சித்தரித்துக் கூறும் சிறந்த கதை. தங்கமணி பரிதாபகர மான தன் வாழ்க்கையைச் சொல்லும்பொழுது இம் மாதிரி ஒரு சமூகம் இன்னும் இருந்துதான் ஆக வேண் டுமா? என்ற கேள்வி நம்மையும் அறியாமல் நம்மனத் திலே எழுந்து ஊசலாடுகின்றது. மிகத்திறம்பட இதைச் சித்தரித்திருக்கிறார் இளைஞர் ‘அகிலன்.’

“......எத்தனை நாளாக அப்பா இந்தக்
காரியம் செய்ய நினைத்திருந்தாய்?...”
“......அம்மா, நான் என்ன செய்வேன்?
எத்தனை நாளைக்கு இந்த அவமானத்தைச்
சகித்துக் கொண்டிருப்பேன்?.........”

இப்படித் தாயும், மகனும் பரிமாறிக்கொள்ளும் மொழி களைப் படிக்கும்பொழுது நம் உள்ளம் உருகி விடுகின்றது. ஆனால், வாயில் காப்போன் முதல் தன் கடமையில் பிற

மூாமலிருக்கும் ஒரு நாட்டு மன்னனின் தாய், தன் கடமை யில் நின்றும் தவறி விடுகின்ருள் என்பதை நினைவுறுத்தும் 'கடமை' என்னும் கதையைப் படித்து முடித்ததும் 'ரணஜித் செய்தது சரிதான்' என்ற முடிவிற்கு வருகின் ரேம். தன் அழகிய நடை ஓட்டத்தில் இதை திரு. ஆர். ஆறுமுகம் எழுதியிருக்கிருர்.

இன்றைய தமிழ் நாட்டுப் பெண் எழுத்தாளர்களிலே தலே சிறந்து விளங்கும் 'குகப்ரியை' அம்மாள் வரைந் துள்ள 'மறைந்த கடிதம்' என்னும் கதையில் ஒரு வாழ்க் கைச் சம்பவம் நகைச்சுவையுடன் கூறப்பட்டிருக் கிறது.

மதவெறி பிடித்தால் மனிதன் எப்படி எல்லாம் மாறி விடுகின்ருன் என்பதை சரித்திர ஆதாரத்தோடு திரு, பி. கோதண்டராமன் எம். ஏ., பி. எல்., எழுதியுள்ளார். யோக நிலேயை மேற்கொண்டுள்ள இவர், மக்களெல் லோரும் ஒரே குலமாக வாழவேண்டு மென்பதை அடிப் படையாக வைத்துக்கொண்டு 'கழுமரம்' என்ற கதை யைச் சிருஷ்டித்துள்ளார்.

தெருவில் காணும் சோக பிம்பங்களே நாம் 'சோம் பேறிகள்' என்று அலட்சியம் செய்து விடுகின்ரேம். அவர்களேப்பற்றி சிறந்த ஆசிரியர்கள் தங்கள் பேனு முனேயால் தீட்டும்பொழுது வறுமையின் சோக உருவைக் கண்டு நம்மையும் அறியாமலே அழுகைகூட வந்து விடு கின்றது. 'ஏழைப் பையன்' என்ற கதையை எழுதி யுள்ள திரு, ஆர். ஷண்முகசுந்தரத்தின் கற்பனே நம்மை அந்நிலேயில் ஆழ்த்தி விடுகின்றது.

'காதல் மகத்தானது. கொல்லவரும் நமனுடன் போர் புரியும் ஆற்றல் படைத்தது' என்று சொல்லிக் கொள்ளப்படுவதை நாம் அறிவோம். ஆனல், வாழ்க் கைக்குக் காதலி எத்தனே உற்ற துணேயாக யிருக்கின்ருள் என்பதை 'சிற்பியின் மனேவி' என்ற கதையில் திரு, ஆ. சுப்பையா எடுத்துக் கூறும்பொழுதுதான் கலாவதி போன்ற வீராங்கனேகள் காதல் வேகத்தில் செய்யும் தீரம் மிகுந்த செய்கைகள் நமக்கு நன்கு புலனுகுகின்றன.

'என் தீபாவளி' தொழிலாளிகளின் தொல்லைகளைப் படம் பிடித்துக் காட்டும் சிறந்த சித்தரிப்பு.

நல்லசாமிக்கவுண்டரைப் போன்ற நல்ல மனிதர் களையும், தங்கம்மா போன்ற தங்கமான பெண்மணிகளை யும் கிராமத்தில் வாசம் செய்யும் ஒவ்வொருவரும் பார்த் திருக்கலாம். ஆனல் திரு. ஆர். திருஞானசம்பந்தம் தனது 'தங்கம்மா' என்ற கதையில் இவர்களை நம் முன் கொண்டுவந்து நிறுத்தும்பொழுதுதான் இம்மாதிரி மனுஷர்களின் உயர்வும், கிராமத்தின் வனப்பு மிகுந்த தோட்டம், துரவுகளும் நமக்கு ஞாபகத்திற்கு வரு கின்றன.

தியாகச் சிந்தை கொண்டவர்கள் தமிழர்கள். தமிழ் மன்னர்கள் அதற்கு முன்னணியில் நின்றிருக்கின்ருர்கள். ஆனல், மார்த்தாண்டனைப் போன்று சகோதர வாஞ்சை யால் தனது பதவியையே துறந்தவர்களைக் காண்பது மிக வும் துர்லபம். 'தியாகம்' என்ற கதையில் காதலின் மகாத்மியத்தையும், தியாகத்தின் பெருமையையும் இணைத்துக் கூறப்பட்டிருக்கிறது.

கலையையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கடைப் பிடித்து வாழும் எண்ணிறைந்த கலாமூர்த்திகள் நம் தமிழ் நாட்டிலே வாழ்ந்திருக்கின்ருர்கள். அவர் களின் கைத்திறனை இன்றும் நாம் கண்டுகளிக்க முடிகின் றது. தான் கண்ட ஒரு சிற்பத்தைப்பற்றி அதைத் தயாரித்தவனின் வம்ச வழியில்வந்த ஒருவன் சொல்லிய தாக திரு, கு. மா. பாலசுப்ரமணியம் கற்பனை செய்திருக் கும் 'சிதைந்த சிற்பம்' என்னும் கதையைப் படிக்கும் பொழுது நாம் எங்கெங்கோ, எப்பொழுதெல்லாமோ பார்த்த சிற்பச் சின்னங்கள் நம் கண்முன் தோற்ற மளித்து ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்வதுபோல் இருக் கின்றது.

லட்சியப் பித்துப் பிடித்த தோழர்களை மட்டுமல்ல, சகோதரிகளிலும் எத்தனையோ பெயர்களை நாம் சந்தித் திருக்கின்ருேம். ஆனல், 'வல்லிக்கண்ணன்' தம் கற்ப

னைக்குக் கொண்டு வந்திருக்கும் சாரதாவைப் போன்ற லட்சியப் 'பித்துக்குள்ளி'களை நாம் காண்பது அரிது தான். என்னவானுலும் பெண்மணி தானே? அவள் இலட்சியமெல்லாம் சின்ன பின்னமாக்கப்பட்டு விடுகின்றது, பெண்மைத் தன்மையால். இதுதான் 'லட்சியச் சிதைவு.'

தாயுள்ளத்தைப்பற்றி சொல்வதற்கு தாய்மார்கள் தான் லாயக்குள்ளவர்கள் என்னும் எண்ணத்தை உதறித் தள்ளும்படி அமைந்திருக்கின்றது 'தாயுள்ளம்'. இதை எழுதிய திரு, ரா. வெங்கடாசலம் தாயன்பு எத்தனை மகத்தானது என்பதை நன்கு விளக்கிக் கூறியுள்ளார்.

இப்படி அருமையான கதைகளை எழுதும் ஆற்றல் தமிழர்கட்கு இருப்பதை உணர்ந்து ஒவ்வொரு தமிழ் மகனும் உண்மையிலேயே பெருமை அடைய வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆசிரியர்கள் உள்ளம்களிக்கவும், எங்கள் முயற்சி பலன் அளிக்கவும் தமிழர்கள் இப்புத்தகத்தை வரவேற்பார்களாக.

பதிப்பாசிரியர்

அவள்

" அகிலன் "

சுடுகாட்டை நோக்கிப் புறப்பட்டேன் - வாழ்க்கையின் இறுதி முடிவைத் தேடிக்கொண்டல்ல; ஒருநாள் மாலைப் பொழுதின் சில மணி நேரத்தை அங்கே கழித்துத் 'திரும்பி வருவோம்' என்ற எண்ணத்துடன்தான் !

மயானக்கரை ஆற்றையடுத்தாற்போல் இருந்ததால் எங்கே பார்த்தாலும் சாம்பல் மூடிய மணற்குவியல்கள் திட்டுத் திட்டாய்க் காட்சி யளித்தன. அவைகளினூடே அங்கங்கே முழங்கால் - முழங்கை எலும்புகளும், மார்புக் கூடுகளும், மண்டையோடுகளும் சிதறிக் கிடந்தன. தெற்கு மூலையொன்றில் இப்போதுதான் புதிதாக வந்த ஒரு பிணம் மெதுவாக எரிந்துகொண்டே தன்னுடைய புகைப் படலத்தை அந்தப் பக்கம் பூராவும் பரப்பிக் கொண்டிருந்தது. அந்தப் புகையோடு சேர்ந்துவந்த காற்று 'இதுதான் மனித தேகத்தின் கடைசி நாடகம்' என்று சொல்லுவதுபோல் தன்னுடைய ஒவ்வொரு அணு விலும் அந்த உயிரற்ற சடலத்தின் துர்நாற்றத்தைச் சுமந்து வந்தது.

" நடை முறையிலே, சிலருக்குப் பொதுவுடமை யென்றால் சிம்ம சொப்பனமாக யிருக்கிறது; சிலர் அதையே பேரின்ப வாழ்க்கையென்று போற்றிப் புகழ்கிறார்கள்; இன்னும் சிலருக்கோ அது ஒன்றிலுமே அடைய முடியாத பகற்கனவாகத் தோன்றுகிறது— ஆனால் அவர்களுக்கெல்லாம் சாவு தனது செங்கோலாட் சியை நடத்தும் இந்த மயானப் பொதுவுடமை உலகத் தைப் பற்றிக் கொஞ்சமேனும் கவலையே இருப்பதில்லை " என்று எனக்குள் எண்ணிக்கொண்டு என் காலடியில் தட்டுப்பட்ட ஒரு மண்டை ஓட்டை உற்றுப் பார்த்தேன்.

என்ன பயங்கரம்! கண்கள் இருக்கவேண்டிய இடங்களில் இரண்டு பெரிய பெரிய துவாரங்கள்; மூக்கிற்குப் பதிலாக அங்கேயும் ஒரு விகாரமான ஓட்டை; முகவாய்க் கட்டையில் கீழுதட்டைக் காணவே காணோம்- அந்தக் காட்சியை என்னால் சகிக்க முடியவில்லை.

நான் மேலே நடந்தேன்; என் நினைவு என்னுடன் தொடரவில்லை. அந்த மண்டை ஓட்டைச் சுற்றிச் சுற்றி வட்டமிட ஆரம்பித்தது..................இது யாருடைய மண்டை ஓடாக இருக்கலாம்?

இதற்குப் பதில் எப்படிச் சொல்வது? எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்வது? ஆனால் பாழாய்ப்போன நெஞ்சு இதையெல்லாம் லேசில் விட்டு விடுகிறேனென்கிறதா?

தன்னுடைய அர்த்தமற்ற ஆராய்ச்சிக்காக அந்த மண்டையோட்டை நோக்கிக் கேள்வி அம்புகளைச் சொரிந்தது என் மனம்:

"ஏ மண்டை யோடே! நீ யார்? எந்த ஊர்? என்ன சாதி? என்ன குலம்? என்ன கோத்திரம்?...... நீ ராவ் பகதூரா? திவான் பகதூரா? ராஜாசகேபா? ......ஏழையா? பணக்காரனா?......பிச்சைக்காரனா?...... அது சரி, நீ என்னென்ன எண்ணி, என்னென்ன கனவுகள் கண்டு, எத்தனை யெத்தனை மன மாளிகைகள் எழுப்பினாய்?......உண்மையைச் சொல்! உன்னுடைய சகோதர சமூகத்திற்காக உனது வாழ்நாளில் ஒரு மூச்சையாவது நீ ஆண்டவனின் பெயரால் செலவு செய்திருக்கிறாயா? ஒருவேளை, நீ பெண்பிள்ளையோ என்னவோ! யார் கண்டார்கள்? இருந்தாலும் இருக்கலாம்......அதிலும் எந்த வகையைச் சேர்ந்தவளோ? பணத்திலே பிறந்து வளர்ந்து, பணத்திலே வாழ்ந்து, பணத்திலே கால்நீட்டிய பணக்காரப் பிரபுவின் மகளோ, இல்லை தெருத் தெருவாய்த் திரிந்தலைந்து நாள்பூராவும் உழைத்து, நாயினுங் கேடாக வாழ்க்கை நடத்துகிறானே அந்தப் பாட்டாளியின் மகளோ?.........உனது இன்ப துன்பம், இதய ஓலம், அனுபவ ரகசியம் இவற்றையெல்லாம் ஒன்றுகூட ஒளிக்

காமல் நீ இந்த உலகத்தில் வேறு யாரிடமாவது மனம் விட்டுச் சொல்லியதுண்டா? அல்லது அவை யாவுமே உன் உடம்பைப்போல் மண்ணோடு மண்ணாய்ச் சாம்ப லோடு சாம்பலாய் மடிந்துபோய் ஒன்று கலந்து விட்ட னவா?.........சுத்த சூன்யம்!.........எவ்வளவுதான் உன்னைத் துருவித் துருவிக் கேள்விகள் கேட்டாலும், கொஞ்சங் கூட உனக்கு என்மேல் இரக்கமே இல்லை......கேள்விகளில் ஒன்றிற்கேனும் உன்னிடமிருந்து பதிலைக் காணோம்...... ஆனால், இதுமட்டும் உண்மை; இதை யாருமே மறுக்க முடியாது: நீ ஒரு இறந்துபோன மனித ஜன்மத்தின் மக்கிப்போன மண்டையோடு! நீயும் இன்னும் சிறிது காலத்தில் இருந்தவிடம் தெரியாமல் போகப்போகிறாய்; ....ப்பூ! இவ்வளவுதானே உன் வாழ்க்கை!"

ஆரம்பமான இடம் எதுவோ அதே இடத்திற்கு ஒரு முடிவும் காணாமல் அலுத்துச் சலித்துப்போய்த் திரும்பி வந்தது என் மனம்.

மன மயக்கத்தின் காரணமோ, அல்லது பிண வாடையின் விளைவோ, தெரியவில்லை; இருந்தாற்போலிருந்து திடீரென்று என் தலை சுழன்றது. உலகமே நிலை தடுமாறி என் கண்ணெதிரே மிதப்பதுபோல் உணர்ந்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் அருகிலிருந்த ஒரு நாணற் புதரை நாடி ஆயிரம் ஆயிரம் எண்ணங்களை ஒரே சமயத்தில் எண்ணிக்கொண்டே ஸ்மரணையற்றுக் கீழே விழுந்தேன்.

அதன் பிறகு நடந்ததெல்லாம் பகற்பொழுதின் அரைத் தூக்கத்தில் தோன்றிக் கலையும் சிறு கனவைப் போல் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது.

அந்த மண்டையோடு உருண்டுகொண்டே என் பக்கத்தில் வந்து "இப்போது என்னைப் பாருங்கள்!" என்றது இனிமையான குரலில்.

உற்று நோக்கினேன்; என் கண்களை என்னால் நம்பமுடியவில்லை - அங்கே மண்டையோட்டிற்குப் பதிலாக ஒரு அழகிய இளம் யுவதி என் முகத்தில் தன் பார்வையைப் பதித்தவாறே உட்கார்ந்திருந்தாள். அவளது

பார்வையிலிருந்து என் விழிகளை அகற்ற எனக்குப் போதிய தைரியம் எழவில்லை. பிசாசைப் பற்றிய கதைகளில் நான் படித்த மோஹினியின் ஞாபகம் எனக்கு அப்போது வந்தது.

"நீ என்ன மோஹினியா?" என்று கேட்கலாமா என நினைத்தேன்; ஆனால் அவளது தோற்றந்தான் என்னுடைய வாயை அடைத்து என்னைப் பயத்தால் ஊமையனாக்கி விட்டதே!

அவளுடைய அணியழகையும், உடை யழகையும், அவளிடமிருந்து வீசிக் கொண்டிருந்த சுகந்தத்தின் இனிமையையும் அனுபவித்துக்கொண்டே சில நிமிடங்கள் மெய்ம்மறந்து விட்டேன்.

மறுபடியும் அவள் தன்னுடைய குயில் போன்ற குரலில் பேச ஆரம்பித்தாள்.

"இவ்வளவு நேரம் என்னைப்பற்றி நீங்கள் வீண் ஆராய்ச்சி செய்து மண்டையை உடைத்துக் கொண்டீர்களே என்று உங்களிடம் என் கதையைச் சொல்ல வருகிறேன்; ஆனால் ஒன்று........." என்று அரை குறையோடு நிறுத்தினாள்.

"என்ன?" என்று கேட்பதுபோல் முகத்தை உயர்த்தினேன்.

"நான் என் கதையைச் சொல்லிக்கொண்டு போகும் சமயத்தில் அதற்குத் தகுந்தாற்போல் சிற்சில இடங்களில் என் உருவம் மாறிக் கொண்டுவரும்; அதைக் கண்டு நீங்கள் பயப்படக் கூடாது."

இதைக் கேட்டதும் எனக்குப் புதிதாக ஒன்றும் பயம் தோன்றவில்லை. ஏனென்றால், ஒரு மனிதன் ஒரு சமயத்தில் எவ்வளவு தூரம் பயப்பட முடியுமோ அவ்வளவு தூரம் ஏற்கனவே அந்த "மோஹினி"யைக் கண்டமாத்திரத்தில் நான் பயந்திருந்தேன்!

ஆகையால் 'உண்டு - இல்லை' என்று ஒரு பதிலும் சொல்லாமல் அவளிடம் மௌனம் சாதித்தேன்.

அவளும் என் பதிலை எதிர்பாராமல் தன்னுடைய கதையை ஆரம்பித்தாள்:

"நான் ஒரு கோவிலுக்கு அடிமைப்பட்ட தாசி வயிற்றுப் பெண் - தாசியின் வயிற்றில் பிறந்தேனென்றால் 'தகப்பன் யார்?' என்று என்னைக் கேட்கக்கூடாது தெரியுமா? என்னுடன் கூடப் பிறந்தவர்கள் ஒருவருமே இல்லை. என்னுடைய பத்தாவது வயது வரையில் எனக்கு இவ்வளவுதான் தெரியும்: எங்கள் வீட்டிற்கு அடிக்கடி பல 'பெரிய மனிதர்கள்' வருவார்கள். அவர்களிடமெல்லாம் என் தாய் என்னைப்பற்றி மிகவும் அக்கரையோடு பல விஷயங்களை விவாதிப்பாள் - 'நம்முடைய பெண் தங்கமணியை (அதுதான் என்பெயர்) என்னைப்போல் துரதிருஷ்டசாலியாக வைக்கக்கூடாது. தகுந்த இடத்தில் விட்டு அவளுக்குப் பாட்டும் நாட்டியமும் சொல்லிக் கொடுக்கச் சொல்லவேணும். ஒரு காலத்தில் அவளுடைய பாட்டி ஒரு பெரிய ஜமீனையே தன் கைக்குள் வைத்திருந்ததுபோல் இவளுக்கும் அப்படிப் பட்ட வல்லமை வரும்படி செய்யவேணும்' என்றெல்லாம் அவர்களிடம் கூறிக்கொண்டிருப்பாள்.

எனக்குப் பதினைந்து வயதானபோது என் குரல் சங்கீதத்தில் நன்றாகத் தேர்ச்சி பெற்றிருந்தது. அத்துடன் வீணையும் நடனமும் நன்றாகக் கற்றிருந்தேன். முதல் முதலாக - ஆமாம், அதுதான் கடைசித் தடவையும் - எனது நடனம் எங்கள் ஊர்ச் சிவன் கோவிலிலேயே ஆரம்பமாகி அரங்கேற்றப்பட்டது. அதற்கு என் தாயார் எங்கெல்லாமோ அழைப்பு அனுப்பியிருந்தாள்; கூட்டமென்றால் கூட்டம் சொல்லிமுடியாது. நாலா பக்கங்களிலிருந்தும் சனங்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். அத்தனை பேருக்கும் மத்தியில் என்னுடைய நடனத்தை வெற்றிகரமாக முடித்து வீட்டிற்குத் திரும்பிவந்தேன்.

அடுத்த நாளையிலிருந்து என் வீட்டிற்கு வந்து செல்லும் பிரபுக்களின் எண்ணிக்கை தினந்தோறும் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆனால் முன்போல் அவர்களெல்லாம் இப்போது என் தாயாரைத் தேடிக் கொண்டு வரவில்லை. என்னுடைய சங்கீதக் கச்சேரிகளை

வெளியூர்களில் நடத்துவதற்கும், வெவ்வேறு நகரங்களின் ஆடரங்குகளில் என் நடனத்தைக் கண்டு களிப்பதற்கும், இன்னும் என்னென்னவோ பற்பல விபரீத காரணங் களுக்குமாக என் இருப்பிடத்தைச் சூழ்ந்து என்னேரமும் மொய்த்துக் கொண்டிருந்தார்கள்.

என்னுடைய தாயாரின் கனவு நனவாகியது ; எதிர் பார்த்ததற்கு அதிகமான பிரமுகர்கள் எனக்குப் பழக்க மானுர்கள் ; எதிர்பார்த்ததற்கு அதிகமான வரும்படியும் கிடைத்துவந்தது.

இந்தச் சமயத்தில்தான் ஒரு கோடீஸ்வரர் எனது வாழ்க்கையில் குறுக்கிட்டார். அவருக்கு வயது ஐம்ப துக்கு மேலிருந்தாலும் என் தாயாரின் வேண்டுகோளை என்னுல் மறுக்க முடியவில்லை. 'ஆளையும் அழகையும் பார்த்தால் நாம் இந்தக் குலத்திலேயே பிறந்திருக்க வேண்டாமே!' என்று வேதாந்தம் பேசினுள். அதுவு மல்லாமல் அந்த மனிதர் இருந்தது பற்றியும் எனக்கு ஒரு விதத்திலும் குறைவு ஏற்படவில்லை. - அவரிடமிருந்துதான் என் தாயார் எனக்கு எல்லா வழிகளிலும் 'சுதந்திரம்' வாங்கித் தந்திருந்தாளே !

நீங்கள் கேட்கலாம், 'பொழுதை இந்தமாதிரியே சார மில்லாமல் ஓட்டிக் கொண்டிருந்ததில் நீ என்ன இன்பத் தைக் கண்டாய்' என்று. ஆனுல் அந்த வயதில் இந்த விதமான கேள்வி என்னிடம் எழுவேயில்லை. என்னுடைய தாயாரின் போதனைகள் இடைவிடாமல் என்னிடம் பணத் தின் பெருமையைப் பற்றியும் எனது அப்போதைய மதிப் பைப் பற்றியும் ஞாபகமூட்டி வந்ததால் எனக்கு அந்த வாழ்க்கையே மிகவும் திருப்திகரமாயிருந்தது. என்னை யொத்த மற்ற பெண்களிலிருந்து நான் எவ்வளவு தூரம் மாறிப்போயிருக்கிறேனென்பதும் என்னுடைய செயல் கள் எவ்வளவு தூரம் பாபகரமான இயந்திரச் செயல்கள் என்பதும், எனக்கு என் தாய் உயிருடன் இருக்கும் வரையில் தோன்றவேயில்லை. - ஆனுல் அந்தோ! எனது நாற்பதாவது வயதில் அவளும் மறைந்தாள். என்னைச் சனியனும் தொடர்ந்தது."

[அந்த 'மோஹினி' இப்போது மோஹினியாக இல்லை; அவளிடமிருந்து கம கமவென்று வீசிக்கொண்டிருந்த வாசனைத் தைலங்களின் வாடை இப்போது நின்று விட்டது. அவளது கருத்தகேசத்தின் ஊடே அங்கங்கே நரை மயிர்கள் விழுதோடியிருந்தன. சுருங்கிய நெற்றியுடனும், ஒட்டிய கன்னங்களுடனும், குழி விழுந்த கண்களுடனும், காட்சி கொடுத்தாள் அவள்.]

" அதற்குப் பிறகு என் வாழ்க்கையை என் கேட்கிறீர்கள்? துக்கமும், துயரமும், நாற்றமும் நிரம்பிய பயங்கரச் சாக்கடை அது.

அந்தப் பணக்காரக் கிழவன் சொல்லிக்கொள்ளாமல் என்னைவிட்டுக் கிளம்பிவிட்டார். மற்ற மனிதர்களும் என் இருப்பிடத்தை மிதிப்பதற்குக்கூட மனம் நடுங்கி அவர்களுடைய அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள். நான் கண்டும் கேட்டும் அறியாத நோய்கள் என்னைப் பட்டாளம் பட்டாளமாய்ப் படையெடுக்க ஆரம்பித்தன. இந்தப் பரந்த உலகத்திலோ கடைசியாக என்னிடம் உறவுகொண்டவை என்னுடைய இறந்த கால நினைவுகளும் அக்காலத்தின் செய்கையாலேற்பட்ட வினையின் நிழலுந்தான். அவைகள் இரண்டிற்கும் தினந்தோறும் நடந்துகொண்டிருந்த போராட்டத்தில் எனக்கு ஒரு நிமிஷம் போவது ஒரு யுகமாகத் தோன்றியது."

[இந்தச் சமயத்தில் தங்கமணியின் சுருங்கிய தேகத்தில் எங்கே பார்த்தாலும் வியாதியின் குறிகள். அவைகளிலிருந்து துர்நாற்றம் சகிக்க முடியவில்லை; ஈயைவிரட்டிக்கொண்டே தன் கதையில் ஈடுபட்டிருந்தாள் அந்த 'தாசிப் பெண்.']

"என்னுடைய பரம்பரைச் சொத்து, நான் தோன்றிச் சம்பாதித்தது, இன்னும் என் தாயாரின் வீடு வாசல் தோப்புத் துரவு அத்தனையும் இந்த தேகத்தைக் காப்பாற்றுவதற்காகச் செலவு செய்தேன். கணக்கற்ற வைத்தியர்

களின் கையில் என்னை ஒப்படைத்தேன். ஆனால் பாபத் தொழிலால் ஏற்றுக்கொண்ட சுமை வெறும் மருந்துகளின் உதவியால் மாத்திரம் ஒருவரிடமிருந்து விடை பெற்றுக் கொள்ளுமா? அதை யறியாது என்னுடைய கடைசிச் சல்லி வரையில் வைத்தியர்களுக்குக் கொடுத்த பிறகு என்னைப்பற்றி உன்னி உன்னியே காலங் கழித்தேன். கடைசியில் சாவு வந்து எனக்கு ஒரு வகையில் அவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை அளித்தது - இதுதான் என் கதையின் முற்பகுதி.''

'அப்படியானால் இன்னும் இதற்குப் பிற்பகுதி வேறு இருக்கிறதா?' என்று கேட்பது போல் ஆச்சரியத்தோடு விழித்துப் பார்த்தேன். அந்தக் கிழவியை - தங்கமணியை - அங்கே காணேம்; எங்கேயோ மாயமாய் மறைந்து விட்டாள். நான் முதல் முதலில் பார்த்த அந்தப் பழைய மண்டை ஓடுதான் அங்கே கிடந்தது.

''அதிக மொன்றுமில்லை; கொஞ்சந்தான் இருக்கிறது'' என்று பதிலளித்துவிட்டு மேலே பேசத் தொடங்கியது மண்டையோடு.

''நான் இறந்துபோன அன்று இரவு இந்த மயானத்தில் எனது சிதையின்மேல் ஒரு அதிசய சம்பவம் நிகழ்ந்தது. காலை யிளம் சூரியனைப்போல் முகமும், அதிலே கருணை ததும்பி வழியும் கண்களும், புன்னகை அரும்பி மலரும் வதனமும்கூடிய ஓர் இளைஞர் இங்கு சோதியின் மத்தியில் தோன்றினர். தன்னை மறந்த நிலையில் அவரது இளந்தளிர்ப் பாதங்கள் 'ஜல் ஜல்'லென்று சிலம் பொலி இசைக்க சாந்தத்தின் மோனத்தோடு சேர்ந்து நடனமாடின. கார்முகில் போன்ற அவரது முடியில் பிறைமதியும், பெரு நதியும் இடம்பெற்றிருந்தன. கரங்களில் மானும் மழுவும், உடுக்கையும், சூலமும் தாங்கியிருந்தார். வெண்ணீறு பூத்துப் புலித்தோல் போர்த்த செஞ்சோதி மேனியில் எங்கு பார்த்தாலும் அரவங்கள் இழைந்தன.

நடனத்தின் முடிவிலே அவர் மலரிதழ்களிலிருந்து சில மணிமொழிகள் உதிர்ந்தன.

'மகளே! எங்கும் நிறைந்த நாம் உன்னை இந்த உலகிற்கனுப்பி உனக்குக் கல்வியும், கானமும், நடனமும் கற்பித்தோம். மாசற்ற அழகையும் யௌவனத்தையும் உன்பால் சொரியச் செய்தோம். மற்ற மனிதர்களைப் போல் உனக்கு அறிவையும் அளித்து அவ்வறிவிற்கறிவாக அவ்விடத்தே ஓர் மூலையில் நாமும் அமர்ந்தோம்.

'இவ்வுலகத்தைக் கலைகள் நிறைந்த பூஞ்சோலையாக்க நினைத்து உன்பாலளித்த கலைச் செல்வங்களத்தனையும் நீ கண் தெரியாத காமக்கடலில் கொண்டுபோய்க் கொட்டி விட்டாய். உனது உடலையும், உயிரையும், உணர்ச்சியை யும் செம்பிற்கும், வெள்ளிக்கும், தங்கத்துக்கு மாக மாற்றி வைத்துக்கொண்டு விற்று அதனல் உன் வீட்டைத் தங்க மாளிகையாக்கிக் கொண்டாய். எங்கும் நிறைந்து உன்னுள்ளே மனச்சாட்சியாக நின்ற என்னை உன்னல் கணநேரம்கூட நினைத்துப் பார்க்கமுடியவில்லை.

'உன் குற்றத்தை ஆரம்பத்திலேயே உணர்ந்து என்னைச் சரணடைந்திருந்தால் உனது பிற்கால வாழ்க் கையே வேறுவிதமாக இருந்திருக்கும். ஆனல் நடந்ததை நினைப்பதில் பயன் என்ன?

'வினையின் விளைவை அனுபவித்துக்கொண்டு உன் னைப்போல ஆயிரம் ஆயிரம் உதாரணங்கள் இன்னும் உலகில் உழன்று கொண்டிருக்கின்றன. இவற்றைக் கண்டாவது எஞ்சிய மானிட சமூகம் விழிப்படைந்து தூய்மையான வழியில் என்னை வந்தடையட்டும்!'

"அதற்கப்புறம் அந்தப் பெருமான் திடீரென்று பேரொளியில் மறைந்துவிட்டார்" என்று சொல்லி, அந்த மண்டையோடும் திடீரென்று காரிருளில் மறைந்து விட்டது!

* * *

"சாமி.........சாமி" என்ற முரட்டுக் குரலொன் றின் அதட்டலைக் கேட்டு எனது மயக்கத்தினின்றும் திடுக்கிட்டெழுந்தேன். என் எதிரே ஒரு பருத்த ஆசாமி தலையில் கட்டிய பெரிய முண்டாசுடன் நின்றுகொண்

டிருந்தான். அவன் கையில் நீண்ட மூங்கிற் கழியொன் றிருந்தது.

"என்னப்பா, நீ யார்?" என்று கேட்கலாமா என்று நினைத்தேன். அதற்குள் அவனுடைய குரல் மறுபடியும் குறுக்கிட்டது.

"இந்த நேரத்திலே உங்களுக்கு சுடுகாட்டிலே என்ன சாமி வேலே?......காணற் புதரிலே படுத்துக் கவலே யில்லாமல் தூங்குறீங்களே!"

"நீ யாரப்பா? உனக்கு இங்கே என்ன வேலே?" என்றேன் கண்களைத் துடைத்துக்கொண்டே.

"பயப்படாதீங்க; இந்தக் காட்டிலே எனக்குப் பொணங்காக்கிற தொழிலுங்க......"

எனக்குக் கொஞ்சங் கொஞ்சமாக சுய நினைவு வந்தது.

"ஏன் சாமி! நீங்க நம்ப ஊருதானே?.........சரி, வாங்க போகலாம். மணி ஒம்பதுக்கு மேலே ஆச்சு"

மேலே வானத்தைப் பார்த்தேன்; பிறைச் சந்திரன் ஒருமேகத்திற்குள் ஒளிந்துகொண்டு சுடுகாட்டுக் காட்சி யைத் திருட்டுத்தனமாக அனுபவிப்பது தெரிந்தது.

"தங்கமணி சொல்லிய கதையில் அவளேப்பற்றியே தான் எல்லாக் குறைகளேயும் சொல்லிக்கொண்டாளே தவிர, அந்தமாதிரித் தொழிலுக்கென்றே ஒரு சாதியை ஏற்படுத்தி வைத்திருக்கும் ஆண்களின் கூட்டத்தைப் பற்றி அவள் ஒன்றுமே குறைகூற வில்லேயே!.......... பாவம், இவ்விதக் கொடிய குணத்திற்கு ஆளாகும் ஆண் கும்பல் ஒன்று உலகத்தில் இருக்கும் வரையில் அவளேப் போன்றவர்களுக்கு விமோசனமே கிடையாதென்பது அவளுக்குத் தெரியாது போலிருக்கிறது" என்று எண்ணிக் கொண்டு, அந்தப் பிணங் காக்கும் பேர்வழியுடன் எழுந்து நடக்கலானேன்.

[illegible] THE REGISTRAR OF BOOKS
10 FEB 1944
MADRAS

கடமை

ஆர். ஆறுமுகம்

1

"யார் அங்கே வருகிறது?" என்று உறுமினன் வாயில் காப்போன்.

"ஏன், நான்தான்" என்று பதிலளித்துக்கொண்டே அவன் பக்கத்தில் வந்து நின்றுன் புதிய மனிதன்.

"நான்தான் என்ருல், யார்? இந்த ஜாமத்தில் இங்கே உனக்கு என்ன வேலே?" என்று கேட்டுக்கொண்டே உடைவாளே உருவிவிட்டான் வீரன். அந்தக் கும்பிருட்டி லும் வாளின் பிரகாசம் பளிச்சென 'டால்' அடித்தது.

"நான் அரண்மனேக்குள் செல்லவேண்டும். ஓர் அவசரமான காரியமாக அரசனேச் சந்திக்க வேண்டும். என்னேத் தடுக்காதே!"

"உனக்கென்ன ஐயா, பைத்தியமா? இந்த அகால வேளேயில் அவரை எப்படிக் காண முடியுமென்று நினேத்து வந்தாய்? வந்த வழியே திரும்பிப் போ!"

"அவசரமான காரியம் என்கிறேன். அதையும் கவனி யாமல் தடுக்கிருயே. இதனுல் வரும் நஷ்டத்திற்கு நீ நாளேக்கு அரசர்முன் சரியான தண்டனே அடைய வேண்டி நேரிடும்."

"அது தலே போகிற காரியமாயிருந்தாலும் சரி; எனக்கு என் அரசர் இட்ட கட்டளேயைத்தான் நிறைவேற் றுவேன். நாளேக்கு அவர் முன்பு நீர் என்மீது குற்றம் சுமத்தினுலும் அவர் ஆராய்ந்தே எனக்குத் தண்டனே அளிப்பார். நீதிநெறி வழுவாத ஒரு ராஜ்யத்தில் உம்

முடைய மிரட்டலுக்கு நான் பயந்து பணிய வேண்டிய தேவையில்லை......"

"என் காலம் கடத்துகிறுய்? முடிவாக என்னதான் சொல்லுகிறுய்?"

"உம்மை உள்ளே அநுமதிக்க முடியாது."

"மீறிச் சென்ருல்?"

"இதோ என் கையில் துடித்துக்கொண்டிருக்கும் இந்த வாள் பதில் அளிக்கும்."

வந்த மனிதன் சற்று நிதானித்து ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து, விடியும் நேரம் சமீபித்துவிட்டதை உணர்ந்து சட்டென்று தன் விரலில் மாட்டியிருந்த ஒரு மோதிரத்தைக்கழற்றி அக்காவலாளியிடம் கொடுத்தான். வாளை உறையினுள் திணித்துவிட்டு அதை வாங்கி உற்றுக் கவனித்த வீரன், இருட்டில் சரியாய்த் தெரிந்துகொள்ள முடியாமல் அரண்மனை வாயிலின் முன் நின்ற தீபஸ்தம்பத்தின் அருகே சென்று பார்த்தான். வந்த மனிதனும் அவனைப் பின் தொடர்ந்தே வெளிச்சத்திற்கு வந்துவிட்டான். மோதிரத்தைக் கண்ட வீரன் திகைப்படைந்து பக்கத்தில் வந்து நின்ற மனிதன் முகத்தை நோக்கினுன். அவனும் புன்னகை புரிந்து நின்ருன். வீரன் மோதிரத்தைக் தன் இருகண்களிலும் ஒற்றிக்கொண்டு, தலை குனிந்து, அவனைத் தன் இரு காமும் கூப்பி வணங்கி, "மகராஜ், பிழையைப் பொறுத்தருள வேண்டும். மாறுவேடத்திலுள்ள தங்களைக் கண்டுகொள்ள முடியாமல் ஏதேதோ பேசிவிட்டேன்..." என்ருன்.

"பரவாயில்லை. உன்னுடைய ராஜபக்தி எனக்கு உவப்பை அளிக்கிறது. ஆனல் நான் வெளியில் சென்று வந்த விஷயத்தை யாரிடமும் தெரிவித்துவிடாதே. ரகசியமாய் இருக்கட்டும். கதவைத் திறந்துவிடு" என்ருன்.

மோதிரத்தை அவனிடம் அளித்துவிட்டு ஓடிச்சென்று கதவைத் திறந்துவிட்டு ஒதுங்கி வணக்கமாய் நின்ருன் வீரன். ரணஜித் சிங் வேகமாக நடந்து உள்ளே சென்று மறைந்தான்.

2

ரணஜித் வெளியே சென்றுவிட்டு வந்த மறுநாள் கொலுமண்டபத்தில் அவன் எப்போதும்போல் உற்சாக மாகக் காணப்படவில்லை. கொலுவும் சீக்கிரம் கலைக்கப்பட் டது. அன்று முழுதும் அவன் மனத்தை ஏதோ ஒரு கவலை வாட்டிக்கொண்டிருந்தது. வழக்கத்திற்கு விரோதமாக இரவில் அரண்மனை ஆடம்பரங்களெல்லாம் துரிதமாக நடந்து ஒடுங்கிவிட்டன. அவனது படுக்கை அறையில் அவ னுக்கு வேண்டிய மதுபானங்களை யெல்லாம் கொண்டு வந்து வைத்துவிட்டு அவன் கட்டளையை எதிர்பார்த்து நின்ற பணிப்பெண்களை யெல்லாங் கூட வெளியே போய் விடும்படி அனுப்பிவிட்டு, மதுவில் சிறிதும் அருந்தாமல் படுக்கையில் படுத்துவிட்டான். சற்று நேரத்திற்குப் பின்வந்த ஓர் அடிமைப்பெண் அவன் நித்திரை போய்விட் டான் என்று கருதிப் பிரகாசமாய் எரிந்துகொண்டிருந்த சரவிளக்குகளை மங்கலாக்கிவிட்டுச் சந்தடி செய்யாமல் போய்விட்டாள்.

அவனுக்கோ தூக்கம் கொள்ளவில்லை. படுக்கையி லிருந்து எழுந்து அறைக்குள்ளேயே குறுக்கும் நெடுக்கு மாக ஆழ்ந்த யோசனையுடன் உலாவிக்கொண்டிருந்தான். வெகுநேரத்திற்குப் பின் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவ னாய்ப் படுக்கை மீது போய் அமர்ந்து சாளரத்தின் வழியே வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். கோட்டை வாயிற் காப்பாளர் ஊதிய கொம்பொலி வெகு தூரத்தி லிருந்து காற்றில் மிதந்து வந்தது. நடுநிசி ஆகிவிட்டதை அதன் மூலம் அறிந்த அவன் ஏதோ ஒரு முடிவிற்கு வந்த வனாய் எழுந்து வெளியே செல்லத் தயாரானான்.

படுக்கை அறையை விட்டுக் கிளம்பிய அவன் ஒரு வரும் அறியாவண்ணம் பல கட்டிடங்களையும் காவல் வீரர்களையும் கடந்து நந்தவனத்திற்குள் பிரவேசித்து, தன்னை யாரேனும் கவனிக்கிறார்களாவெனத் திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணமே சென்று கொண்டிருந்தான். அந்தப்புரத்திற்கு வந்ததும் தன் அன்னையின் சயன அறை யை நோக்கி அடிமேல் அடி எடுத்து வைத்துக் கள்வனைப் போலப் பதுங்கிப் பதுங்கிச் சென்றான்.

அவளுடைய அறையில் பிரகாசமாய் எரிந்துகொண்டிருந்த தீபங்கள் சாளரங்களின் இடைவெளியில் தெரிந்தன. மூடப்பட்டிருந்த ஒரு கதவின் இடுக்கு வழியாக உள்ளே கவனித்தான் ரணஜித். அவன் தாய் மஞ்சத்தின் மீது அமர்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் திவான் லஜ்பத் ராய் வீற்றிருந்தான். அவர்கள் இருவரும் ஏதோ பெரிய துக்கத்தில் ஆழ்ந்திருந்தவர்களாகக் காணப்பட்டனர். அவள் திவானின் கையைப் பிடித்துக்கொண்டு, "நீங்கள் ஏன் இந்த விஷயத்தில் இவ்வளவு கோழைத்தனமாக நடந்துகொள்ளுகிறீர்கள்? நான் இருக்கும்போது உங்களுக்கு என்ன பயம்? அவனே சிறுவன்; இந்த ஆண்டு முடிவோடு பதினெட்டு வயதுதான் ஆகிறது. மேலும் அவன் ஓர் அறிவிலி. பின் காரியங்களை யெல்லாம் உத்தேசித்துத்தான் அவனுக்குக் கல்வியின் வாசனையைக் கூடக் காட்டாமல் வளர்த்தேன். அவனுக்கா நீங்கள் இப்படிப் பயப்பட வேண்டும்! அவன் நம் விஷயத்தில் தலையிடவே மாட்டான்" என ஆறுதல் கூறினாள்.

"ராஜ்கௌர்! நீ நினைப்பது தவறு. அவன் எத்தனையோ சந்தர்ப்பங்களில் நம் இருவரையும் சந்தேகத்தோடேயே கவனித்து வந்திருக்கிறான். கடந்த சில நாட்களாக அவன் நாம் இருவரும் சேர்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது அதனைத் தன் கண்ணாரக் காணவேண்டுமென்று பல விதமான முயற்சிகள் செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இங்கே வருவதற்குமுன் அவன் படுக்கை யறைக்கு அடிமைப் பெண் ஒருத்தியை அனுப்பி அவன் அயர்ந்து நித்திரை செய்கிறான் என்று தெரிந்து கொண்ட பின்பே வந்தேன்."

"அவனுக்காக இவ்வளவு முன் ஜாக்கிரதையா?"

"என்னதான் இருந்தாலும் அவன் அரசனல்லவா? அவன் கட்டளையை நிறைவேற்ற எத்தனையோ பேர் கை கட்டி நிற்கின்றனர்."

"அவன் இந்த உலகத்தையே வேண்டுமானாலும் கட்டியாளட்டும். நான் பெற்ற மகன்தானே! இன்னும் என்னைக் கண்டால் அவனுக்குப் பயந்தான்."

“ராஜ்கௌர், எனக்கு என்னவோ இந்த விஷயம் எவ்வளவு ஆபத்தைக் கொண்டுவருமோ என்று பயமாய்த் தான் இருக்கிறது. எதற்கும் நாம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. இப்பொழுது ரணஜித்தின் கண்காணிப்பு அதிகமாயிருக்கிறபடியால் இன்னும் சில நாட்களுக்கு நான் இந்தப் பக்கம் வராமல் இருப்பதே நலமென்று தெரிகிறது.”

“திவான், உங்களை ஒரு நாளைக்குக் காணுவிட்டாலும் என் மனம் என்ன பாடு படுகிறதென்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? இதனால் உயிருக்கே ஆபத்து நேரிட்டாலும் சரி; நீங்கள் இங்கே வராமல் நின்று விடாதீர்கள்... ஏன், என்ன யோசிக்கிறீர்கள்?”

“ஒன்றுமில்லை. நேற்று ரணஜித் மாறுவேஷத்தில் கோட்டையை விட்டு வெளியே போய்விட்டு வந்தானும். உனக்குத் தெரியுமா?”

“அவன் அடிக்கடி இவ்வாறு சென்று வருவது வழக்கந்தான். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? மேலும் அவனுடைய அதிகாரம் அந்தப்புரத்தில் செல்லாது.”

“நாம் எப்படிச் சொல்ல முடியும்? நம்மையும் அறியாமல் என்னென்ன காரியங்கள் நடக்கின்றனவோ?”

“அதெல்லாம் ஒன்றும் இராது. இன்னும் சில நாட்களில் அவன் போர்முனைக்குப் போய்விடுவான். அதன் பின் நம் ராஜ்யந்தான். ஏன் வீணுகக் கவலைப்படுகிறீர்கள்? நாளைக்கு இதே நேரத்திற்கு இங்கே வந்துவிடுங்கள்.”

திவான் லஜ்பத்ராய் விடைபெற்றுக் கொண்டு, தான் அணிந்து வந்திருந்த ‘கோஷா’ முக்காட்டை எடுத்துத் தலை முதல் பாதம்வரை மறைத்துக்கொண்டு ஒரு ஸ்திரீ போல வெளியே செல்லப் புறப்பட்டான். அதைக் கண்ட ரணஜித், திவான் வெளியே வந்து தன்னைப் பார்த்துவிடுவானே எனச் சந்தேகித்து, வெகு துரிதமாக அங்கிருந்து மறைந்து விட்டான்.

3

தன் தந்தை சர்தார் மான்சிங் இறந்ததும் ரணஜித் பட்டத்திற்கு வந்தான். அவன் தாய் ராஜ்கௌர் சிந்து மாகாணத்தில் பெரிய கௌரவம் வாய்ந்த குடும்பத்தில் பிறந்தவள். படிப்பில் அக்காலத்துப் பெண்களுக்கெல்லாம் மேம்பட்டு விளங்கியவள். என்னதான் இருந்தாலும் பெண்தானே! அரசியல் சம்பந்தமான காரியங்களில் ரணஜித்திற்கு நேரிடையாக எந்த உதவியும் செய்ய முடியவில்லை. திவான் லஜ்பத்ராய் ரணஜித்தின் தந்தை இறந்து போக இரண்டு வருஷங்கள் இருக்கும் போதுதான் திவானாக நியமிக்கப்பட்டான். அரசாட்சியில் நடக்கும் எவ்விதச் சிக்கலான விஷயங்களுக்கும் அவனுடைய யோசனையையே மான்சிங் கேட்டு அதன் படி நடப்பான். இப்போது அவன் காலமாகி விட்டபடியால், ரணஜித் பெயருக்கு மட்டும் அரசனாக இருக்கவேண்டுமென்றும், மற்ற ராஜீயக் காரியங்களையெல்லாம் திவானே இருந்து நடத்த வேண்டுமென்றும் ராணி ராஜ்கௌர் ஏற்பாடு செய்திருந்தாள். ஆனால், தான் நினைத்தது தவறு என்பதை ரணஜித் பட்டத்திற்கு வந்த ஒரு வருஷத்திலேயே அவள் உணர்ந்து கொண்டாள்.

ரணஜித் படிப்பு வாசனை அறியாதவன்தான். உருவத்தில் கூட அழகு இல்லாதவன்தான். அம்மை வடுக்கள் கறுப்புக் கறுப்பாக முகமெல்லாம் குழிகளை உண்டுபண்ணிவிட்டன. இவற்றோடு அவன் சப்பை மூக்கு இன்னும் அழகைக் குறைவுபடுத்திக் காட்டியது. சிலருக்குத் தாடி இருப்பதே ஒரு தனி அழகைத் தரும், அவனுக்கோ அதுவும் விகாரமாகக் காட்சி அளித்தது. அதிக உயரமும் இல்லை. அவனைப் பார்ப்பவர் எவருக்கும் அவையெல்லாம் குறையாகப் படுவதே இல்லை. காரணம்: அவன் விவேகி, தயாளன், நீதிநெறி தவறாதவன் எக்காரியத்தையும் அஞ்சாமல் செய்யும் தீரன், அவன் பதவிக்கு வந்த ஒரு வருஷத்திற்குள்ளாகவே எத்தனையோ சிற்றரசர்களை அடக்கி ஒடுக்கித்தன்வசப் படுத்திவிட்டான். அவன் தந்தையின் காலம் முதற்கொண்டே அடிக்கடி புகைந்து கொண்டிருந்த உள்நாட்டுக் கலகங்களையும்,

மதச் சச்சரவுகளையும் வெகு எளிதில் தீர்த்து வைத்துவிட்டான். இன்னும் நாட்டின் நன்மைக்காக என்ன என்ன காரியங்கள் செய்யவேண்டுமோ அத்தனையையும் வெகு சாமர்த்தியமாகக் கவனித்து வந்தான். இவற்றை யெல்லாம் கண்ட திவான், ரணஜித்திற்கு யோசனை சொல்வதையோ, அல்லது அரசியல் விஷயங்களில் தலையிடுவதையோ தானாகவே நிறுத்திக்கொண்டு விட்டான். ஆனால் ராஜ்கௌர் கட்டளைப் படி அரசாட்சியில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றித் திவான் அப்போதைக்கப்போது அவளிடம் போய்த் தெரிவித்து வருவது வழக்கம்.

மான்சிங் இறக்கும்போது ராஜ்கௌருக்கு 27 வயது தான். நல்ல அழகி. ராஜபோகத்தில் வளர்ந்த அவளுடைய கட்டு மஸ்தான தேகம் அவள் வயதை மிகக் குறைவாக எடுத்துக் காட்டியது. திவான் லஜ்பத்ராய்க்கும் அவளைவிட நான்கு வயது தான் அதிகமாய் இருக்கும். அவன் அரசாங்க விஷயங்களில் வெறும் யோசனை சொல்லும் திவானாகமட்டும் இருந்து விடவில்லை. சிறந்த போர் வீரன். எத்தனையோ முறைகளில் யுத்தகளங்களில் சேனைகளை நடத்தி வெற்றி பெற்றவன். அதனாலேயேதான் அவனுக்கு அந்தப் பதவி கிடைத்தது. அவனுடைய வீரச்செயல்களையெல்லாம் ஏற்கனவே தன் கணவன்மூலம் கேள்விப்பட்டிருந்தாள் ராணி ராஜ்கௌர். அவனுடைய அகன்ற மார்பும், தடித்த புஜங்களும், ஜ்வாலை வீசும் கண்களும், கம்பீரமான நடையும், இனிமையான பேச்சும் அவளை ஆகர்ஷித்தன. அவன் தன்னிடம் வந்து பேசும்போதெல்லாம், அவன் பேச்சில் கவனம் செலுத்தாமல், அவன் அங்க அமைப்புக்களையே பார்த்து மகிழ்ந்து மனம் விம்முவாள். இதற்காகவே அவன் ராஜீய வியவகாரங்களைப்பற்றித் தன்னிடம் வந்து அப்போதைக்கப்போது தெரிவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தாள்.

நாளடைவில் திவானும் அவளுடைய அந்தரங்க எண்ணத்தை அறிந்து கொண்டான். ரணஜித் சிறுவனாக இருந்தபடியால் ராணியின் நட்பு கிடைத்துவிட்டால், தானே சகல விஷயங்களிலும் அவனுக்குப் பிரதிநிதியாக இருந்து

ஆட்சி செலுத்தலாம் என்ற ஆவல் அவனை அடிக்கடி அவ ளிடம் சென்றுவரத் தூண்டியது.

மான்சிங் உயிரோடு இருந்த காலத்தில் ராஜ்கௌர் இந்திரபோகத்தை அனுபவித்து வந்தாள். அவர்கள் இரு வர் வாழ்க்கையிலும் அவன் சூரியனைப் போலவும், அவள் தாமரை போலவும் இருந்தார்கள். இப்போது அந்தச் சூரி யன் அஸ்தமித்ததும் தாமரையைப்போல மனங்குவிந்து போயிருந்தாள். திடீரென்று மற்றொரு சூரியன் அரண் மனையில் தோன்றியதும் அவள் முகம் மலர்ந்தது. ஆனால் இந்தச் சூரியனும் ஒரு சமயத்தில் அஸ்தமிக்கக் கூடியது தான் என்பதை அவள் நினைத்துப் பார்க்கவில்லை. அவளோ ஜ்வாலை விட்டு எரியும் தன் வாலிப நெருப்பிற்கு ஜீவன் ஊட்டும் தென்றலெனத் திவானைக் கருதினாள். அவனோ தன் மனோபீஷ்டம் நிறைவேற அவளை ஒரு கருவியாக்கிக் கொள்ள எண்ணினான். இருவருடைய கொள்கைகளும் மாறுபட்டிருந்த போதிலும் ஒருவர் நட்பை மற்றவர் பெறத்தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார்கள். அவர் கள் இருவர் முயற்சியையும் தடைசெய்ய அங்கே ஒரு வரும் இல்லை. அதனால் அவர்கள் கொண்டிருந்த எண்ண மும் கூடிய சீக்கிரமே நிறைவேறியது.

அவர்கள் என்னதான் ரகசியமாகத் தங்கள் நட்பை விருத்தி செய்து கொண்டிருந்த போதிலும் நூற்றுக்கணக் கான காவலாளிகளும் பணிப்பெண்களும் இருந்த அந்த அரண்மனைக்குள் அதை மறைத்து வைக்க முடியாமற் போய்விட்டது. முதல் முதலாக ஓர் இரவு ராணியிடம் அந்தரங்க விசுவாசமுள்ள தோழி ஒருத்தி, திவானும் ராணியும் மஞ்சத்தில் சல்லாபம் செய்து கொண்டிருந்த தைக் காண நேர்ந்தது. ராணி அந்த க்ஷணமே அவளுக் குத்தன் முத்தாரத்தை அளித்து அந்த விஷயத்தை எவருக் கும் தெரிவிக்காதிருக்குமாறு பயத்தாலும் நயத்தாலும் கேட்டுக்கொண்டாள். அவ்வளவுதான். அந்த அரண்மனை யிலுள்ள அத்தனை பேர் மனத்திலும் அது ரகசியமாகவே தான் இருந்தது! பின்னர் அரண்மனைச் சுவர்களைத் தாண்டி நகருக்குள்ளும் அந்தப் பரம ரகசியம் பரவி விட்டது.

அன்று வழக்கம்போல் ரணஜித் மாறு வேடத்தில் நகரைச் சுற்றி வரும்போது ஒரு வீட்டில் ஏதோ சச்சரவு நடந்து கொண்டிருந்த சப்தம் கேட்டது. மெதுவாய்க் கதவின் இடுக்கு வழியாகக் கவனித்தான். கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை. மனைவியின் நடத்தையில் சந்தேகங்கொண்ட கணவன் அவளைக் கண்டித்துக் கொண்டிருந்தான். "உன்மேல் தப்பிதம் இல்லை. அரசாட்சியிலேயே ஊழல் நடக்கிறது. ராணி திவானிடம் கள்ள நட்புக் கொண்டிருக்கிருள். இதை ஊர் முழுதும் அறியும். அப்படியிருந்தும் ரணஜித்சிங் அவளை என்னசெய்துவிட்டான். அரசன் எவ்வழியோ அவ்வழிதானே குடிகளும்! ஆனல் நான் அவனைப்போலப் பேடியல்ல. இன்னும் ஒருமுறை நீ அந்தப் பக்கம் செல்வதைக் கண்டால் அவ்வளவுதான்... ஜாக்கிரதை!" என்று எச்சரித்தான்.

ரணஜித் அதற்குமேல் அங்கே நிற்கவில்லை. நேரே அரண்மனைக்கு வந்து விட்டான்.

4

ரணஜித்திற்கு அச் சிக்கலான பிரச்னையை எப்படித் தீர்த்து வைப்பதென்று தெரியவில்லை.

'அவள் சொல்லுகிறபடி நான் சிறுவன் தான்; அவள் பெற்ற பிள்ளைதான். ஆனல் இந்த அவமானத்தை எப்படிச் சகிப்பது? ஊரெல்லாம் இது பரவி விட்டதென்று இப்போதுதானே தெரிகிறது! பிரதிதினமும் எத்தனையோ அக்கிரமங்களை விசாரித்துத் தண்டித்து வரும் நான், நான்கு வருஷங்களாக என் அரண்மனையிலேயே நடக்கும் அக்கிரமத்தை அறியாமல் இருந்து விட்டேனே. என்னிடம் தண்டனை பெற்றவர்களெல்லாம் என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பார்கள்? இதற்கு இன்றே ஒரு முடிவு கட்டிவிடவேண்டும்!' என்று தீர்மானித்தவனய்த் தன் காவலாளி ஒருவனைக் கூப்பிட்டுத் திவான் லஜ்பத்ராயை உடனே அழைத்து வரும்படி கட்டளை யிட்டான்.

திவான் வந்து வணங்கி, ரணஜித் காட்டிய ஆசனத்தில் அமர்ந்தான்.

"திவான், நீங்கள் நாளைக்கே காபூல் செல்லவேண்டும். எல்லைப்புறத்தில் ஆப்கானியர்கள் உபத்திரவம் அதிகமாகிக்கொண்டே வருகிறதென்று செய்தி வந்திருக்கிறது. அவர்களை அடக்க உங்களால்தான் முடியும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு புறப்படுங்கள். அதற்காகத்தான் கூப்பிட்டனுப்பினேன்" என்றான் ரணஜித்.

"திடீரென்று எப்படிச் சொல்ல முடியும்? இன்னும் சில நாட்கள்......" என்று தயங்கினான் திவான்.

"உம்முடைய பதில் ஒன்றும் இங்கே வேண்டாம். தாமதிக்காமல் செல்ல வேண்டும்!" என்று கோபமாய்க் கூறினான் ரணஜித்.

திவான் தலைவணங்கி மறு வார்த்தை பேசாமல் போய்விட்டான். அவன் சென்ற ஒரு நாழிகைக்கெல்லாம் அந்தப்புரத்திலிருந்து ஒரு வேலைக்காரி ரணஜித்திடம் வந்து அவன் தாய் அவனை அழைப்பதாகத் தெரிவித்தாள். அவனும் இதை எதிர்பார்த்திருந்தான்.

தாயை நமஸ்கரித்து நின்ற அவனை அவள் அமரும்படி சொல்லி, "ரணஜித், நம் திவானை உடனே எல்லைப்புறத்திற்குப் போகும்படி கட்டளை யிட்டதாக அறிந்தேன்..." என்றாள்.

"ஆம், அம்மா. அதற்கென்ன? உங்களுக்கும் தெரிந்ததுதானே, ஆப்கானியர்கள் அடிக்கடி அங்கே கலகம் விளைவித்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்களை அடக்கி விட்டு வருவதற்காகத்தான் அவரை அனுப்புகிறேன்."

"அதற்கு நீயே நேரில் சென்றுவந்தால் நல்லது. திவானால் என்ன செய்ய முடியும்? நீ வருகிறாயென்று தெரிந்தாலே அவர்கள் ஓடிவிடுவார்கள்."

"என்ன, இப்படிச் சொல்கிறீர்களே? அவர் எத்தனையோ போர்களில் வெற்றி பெற்றவராயிற்றே! கேவலம் இந்த ஆப்கானியர்களிடமா அவர் வீரம் பலிக்காமல் போய்விடும்?"

"இல்லை. அதற்காக நான் சொல்லவில்லை. திவானை அனுப்பி விட்டால் இங்கே ராஜீயக் காரியங்கள் கெட்டு விடுமே என்றுதான் நினைக்கிறேன்."

"அவரால் நடக்க வேண்டியது இங்கே ஒன்றுமில்லை, நான் எல்லைப்புறத்திற்கு இப்போது போகவும் சந்தர்ப்ப மில்லை. அரண்மனையில் சில சீர்திருத்தங்கள் உடனே செய்யவேண்டி இருக்கின்றன. ஆகையால் அவரே போய் வரட்டும்."

"அரண்மனையில் சீர்திருத்தங்களா? எனக்கு ஒன் றும் விளங்க வில்லையே?"

"அவற்றை நான் செய்த பின்பு எல்லாம் தங்களுக் குத் தெரியும், என்னை மன்னியுங்கள். நான் போய்வரு கிறேன்" என்று அவள் பதிலுக்குக்கூடக் காத்திராமல் உடனே போய்விட்டான்.

அன்று இரவும் வழக்கம்போல ஜாமத்தில் திவான், ராணியின் அந்தப்புரத்திற்கு வந்தான்.

"அவன் ஒரே பிடிவாதமாக நீங்கள்தான் போக வேண்டும் என்கிறான். என்ன செய்கிறது?" என்றாள் ராணி.

"போய்த்தான் தீரவேண்டும். அவன் கட்டளையை அவமதித்தால் என்ன நேரிடும் என்று உனக்குத் தெரி யாதா? ஒரு மாதத்திற்குள் திரும்பி விடுகிறேன். மேலும் அவன் நம்மீது சந்தேகம் கொண்டிருக்கிற இந்தச் சம யத்தில் நாம் இருவரும் பிரிந்திருப்பதே நலமென்று தெரி கிறது. நம் நட்பு நீடித்திருப்பதற்காகவே எனக்கும் இந்த எல்லைப்புறப் பயணம் கிடைத்திருக்கிறதுபோலும்!"

"அப்படியானால் உங்களுக்கு அங்கே போவதில் யாதோர் ஆக்ஷேபணையும் இல்லையா?"

"ஊஹூம்...இல்லை. ஆப்கானியர்கள் என் பெய ரைக் கேட்ட மாத்திரத்திலேயே அடிபணிந்து விடுவார் கள். காரியத்தை விரைவில் முடித்துக்கொண்டு திரும்பி விடுகிறேன். நேரமாகிறது. நான் சென்று வரட்டுமா?"

"ஏன் வந்ததும் போகிறேன் என்கிறீர்கள்? இன்றிரவை இங்கேயே கழித்து விட்டு........"

"இல்லை. இன்று வழியெல்லாம் காவல் அதிகமாய் இருக்கிறது. ஒரு சமயம் ரணஜித் நினைத்திருக்கிறபடி நம் இருவரையும் கையுங் களவுமாய்ப் பிடிக்க இதுவும் ஒரு சூழ்ச்சியோ, என்னவோ?"

அச்சமயம் சாளரத்தின் பின்பக்கம் ஏதோ சப்தம் கேட்டு ராணி திடுக்கிட்டாள். திவான் சற்றுத் தைரியத்தோடு கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து சுற்றிலும் பார்த்தான். நந்தவனத்திற்குள் செடிகளின் இடையே யாரோ ஓடுவது தெரிந்தது. உடனே திவான் உள்ளே போய், "ராஜகௌர், நான் நினைத்தது சரியாய்ப் போய்விட்டது. நாம் பேசிக்கொண்டிருந்ததை எவனோ மறைந்திருந்து கேட்டுவிட்டுப் போகிறான். அவன் ஓடுகிற வேகத்தைப் பார்த்தால் ரணஜித்திற்குச் செய்தியைத் தெரிவிக்கத்தான் போகிறான்போல் இருக்கிறது. ஆகையால் நான் இனித் தாமதிக்கக்கூடாது" என்று சொல்லிப் புறப்பட்டுவிட்டான்.

மறைந்து கேட்டுக்கொண்டிருந்தவன் ரணஜித் தான் என்ற உண்மையை அறிந்திருந்தால் திவான் மனம் என்ன பாடு பட்டிருக்கும்!

5

திவான் மறுநாளே ரணஜித்தின் கட்டளைப்படி ஒரு சிறு சேனையுடன் வடமேற்கு எல்லைப்புறத்தை நோக்கிப் புறப்பட்டுப் போய்விட்டான்.

அவன் சென்ற பதினைந்து தினங்களுக் கப்புறம் அங்கிருந்து வந்த செய்திகள் ராணிக்கு மிகுந்த பீதியை உண்டு பண்ணி விட்டன. ஆப்கானியர்களின் யுத்தம் மும்முரமாக நடக்கிறதென்றும், தன்னுடைய சேனையில் பாதிக்குமேல் அழிந்துவிட்டதென்றும், உடனே இன்னும் இரண்டு படைகள் உதவிக்குத் தரவேண்டுமென்றும் ரணஜித்திற்குத் திவான் ஓலை அனுப்பி யிருந்தான். ஆனால் ரணஜித் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை

ராணியே தன் மகனிடம் அதைப்பற்றிக் கேட்டபோது, "எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் யோசனை கூற வேண்டியதில்லை" என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டான். திவான் உயிரோடு திரும்பி வருவாரோ இல்லையோ என்ற கவலையே ராணியைப் பெரிதும் வாட்டியது. அதனால் அவள் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையாகப் படுத்துவிட்டாள். அரண்மனை வைத்தியர்கள் எவ்வளவோ முயன்றும் வியாதி சொஸ்தப்படவில்லை, ஆனால் ரணஜித் அதைப் பற்றிக்கூடக் கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

ஒரு தினம் நள்ளிரவில் அந்தப்புரம் சென்று ராணியின் படுக்கை யறையில் கவனித்தான். மற்றவர்கள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்க, பாங்கிமார்களில் ஒருத்தி மாத்திரமே ராணிக்கு விசிறிக்கொண்டிருந்தாள். எதிர் பாராத விதமாய் அரசன் வந்து அங்கே நிற்பதைக்கண்டு சடாரென விசிறியை நழுவவிட்டு அவனிடம் வந்து வணங்கி நின்றாள் அப்பாங்கி. சமிக்ஞை செய்து அவளை வெளியே வரும்படி சொல்லி மெதுவாக, "இப்போது எப்படி இருக்கிறது?" என்றான் ரணஜித்.

"மகாராஜ், உடம்பு நெருப்பாய்த் தகித்துக்கொண்டிருந்தது. இப்போதுதான் சற்றுத் தணிந்தது. தேகமெல்லாம் வேர்வை பொங்கி வடிந்தது. சற்றே விசுறும்படி சொன்னார்கள்........"

"சரி; வைத்தியர்கள் என்ன சொல்லுகிறார்கள்?"

"அவர்களுக்கு இது என்ன வியாதி என்றே தெரியவில்லையாம். ஒருவேளை மனக்கவலையால் உண்டாகிய அதிர்ச்சியாய் இருக்கலாம் என்று அபிப்பிராயப் படுகிறார்கள். அதற்கேற்றாற்போல ராணியாரும்......"

"என், என்ன தயங்குகிறாய்? ராணி யம்மையார் ஏதேனும் உன்னிடம் தெரிவித்தார்களா?"

"இல்லை, மகாராஜ். அவர்கள் சற்று முன்பு ஜுரத்தின் வேகத்தில் ஏதோ பிதற்றினார்கள்......"

"என் மறைக்கிறாய்? சீக்கிரம் சொல்."

"'திவான் வந்துவிட்டாரா? எப்போது வருவார், என் பிரபு?' என்று கேட்டார்கள். நான் ஒன்றும் விளங்காமல், 'அம்மா, அம்மா!' என்று கூப்பிட்டேன். அவர்கள் பதில் பேசாமல் அப்படியே அயர்ந்து விட்டார்கள்."

"உம். 'பிரபு'வா!" என்று சொல்லிவிட்டு ஏதோ யோசித்தான் ரணஜித். தோழி அவனையே பார்த்து நின்ருள். "இதோ இந்த மருந்தை ராணியார் எழுந்ததும் பாலில் கலந்து கொடுத்துவிடு, விடிவதற்குள் குணமாகி விடும். மருந்து சாப்பிட்டதும் உடம்பு எப்படி இருக்கிறதென்பதை அறிந்து என்னிடம் வந்து உடனே சொல். நான் அதோ நந்தவனத்தின் மத்தியிலுள்ள பளிங்கு மண்டபத்தில்தான் இருப்பேன். போ! மறந்து தூங்கி விடாதே" என எச்சரித்து விட்டுப் போய்விட்டான்.

தோழிப்பெண் உள்ளே சென்ருள். சிறிது நேரத்திற்கெல்லாம் ராணி கண்ணைத் திறந்து, "அடியே! கொஞ்சம் பால் எடுத்துக்கொண்டு வா. என் நாக்கு வறட்சியாய் இருக்கிறது" என்று சொல்லிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டாள். பாங்கி பாலை எடுத்து வரும் போதே அதில் ரணஜித் கொடுத்த மருந்தைக் கலந்துவிட்டாள். ராணியின் அருகில் வந்து, "அம்மா" என்ருள். அவளும் கண்ணைத் திறந்து, "என்னல் எழுந்திருக்க முடியவில்லை. அப்படியே வாயில் ஊற்று" என்ருள். தோழி அவள் வாயில் கிண்ணத்தை வைத்துப் பாலைப் பருகச் செய்தாள்.

"என்னடி, பாலில் ஏதோ வாசனை வீசுகிறதே?" என்று கேட்டாள் ராணி.

"ஆம், அம்மா. அதில் மருந்து கலந்து கொடுத்தேன்."

"மருந்தா! யார் கொடுத்தது?"

"மகாராஜா கொடுத்தாரம்மா?"

"யார் போய் வாங்கி வந்தது?"

"ஒருவரும் போகவில்லையம்மா! அவரே சற்று நேரத்திற்கு முன்பு வந்து கொடுத்துவிட்டுப் போனார். விடிவதற்குள் குணமாகி விடும் என்றார்."

"அடேயப்பா. இப்போதுதான் என் மனம் பூரிப் படைகிறது! இத்தனை நாள் என்னைக் கவனிக்காமல் இருந்த அவனுக்கு இன்றைக்காவது என் ஞாபகம் வந்ததே. என்னதான் இருந்தாலும் நான் பெற்றபிள்ளை யல்லவா? அவன் வந்தபோது என்னை ஏண்டி நீ எழுப்ப வில்லை?" என்று தோழியைக் கடிந்துகொண்டாள்.

சற்று நாழிகைக்கெல்லாம் அவள் தேகம் முழுதும் குளிரால் நடுங்க ஆரம்பித்தது. அதைக் கண்ட தோழி அருகிலிருந்த விலையுயர்ந்த சால்வையை எடுத்துப் போர்த் தினாள். நடுக்கம் படிப்படியாக அதிகமாகிக்கொண்டே தான் இருந்தது. தோழிக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. தூங்கிக்கொண்டிருந்த மற்ற இரண்டு பாங்கிமார்களையும் கூவி எழுப்பி அவர்களை ராணியின் உடம்பை அழுத்திப் பிடிக்கும்படி சொன்னாள். அதனா லும் நடுக்கம் அடங்கியதாகத் தெரியவில்லை. பாங்கி பயந்துவிட்டாள். உடனே அரசனிடம் போய்த் தெரி விக்க நந்தவனத்திற்குள் விரைந்தோடினாள். பளிங்கு மண்டபத்தில் இருந்தவண்ணம், 'இன்னும் ஒரு விவரமும் தெரியவில்லையே' என்று ஆவலாய்க் காத்துக்கொண் டிருந்த ரணஜித் அவள் வருகிற வேகத்தைக் கண்டு காரி யம் பலித்துவிட்டதென மனத்தில் சந்தோஷங்கொண் டான். ஆனால் அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல், "ஏன் இப்படி ஓடி வருகிறாய்? எப்படி இருக்கிறது உடம்பு?" என்றான் பதற்றமாய்.

"ஐயோ! வந்து பாருங்கள் ...." என்று மேல் மூச்சு வாங்கப் பதறினாள் அவள்.

ரணஜித் வேகமாய் ஓடிவந்து ராணியின் அறைக்குள் நுழைந்தான். பெண்கள் விலகி நின்றார்கள். தாயின் தலையைத் தன் மடியில் எடுத்து வைத்துக்கொண்டு அவள் முகத்தை நோக்கினான்.

“ரணஜித்!......ரணஜித்......எத்தனை நாளாக அப்பா இந்தக் காரியம் செய்ய நினைத்திருந்தாய்?” என்று நடுங்கிய குரலில் ராணி கேட்டபோது அவள் இரு கண்களிலும் நீர் பெருக்கெடுத்து வழிந்தது.

“அம்மா, நான் என்ன செய்வேன்? எத்தனை நாளைக்கு இந்த அவமானத்தைச் சகித்துக் கொண்டிருப்பேன்? நம் குலத்திற்கே பெரிய இழுக்கைத் தேடிவைத்து விட்டீர்களே!” என்று அவனும் கண்ணீர் பெருக்கினான்.

“இதற்குத்தானா திவானையும் என்னிடமிருந்து பிரித்தாய்?”

“ஆம், அம்மா.”

“அட பாவி! பெற்று வளர்த்த மகனே எனக்குச் சத்துருவாகி விட்டாயே! இதுதானா உன் தாய்க்கு நீ செய்யும் பிரதி பலன்?”

“அம்மா, என் கடமையைத்தான் செய்தேன்.”

“திவானிடமிருந்து ஏதாவது மேற்கொண்டு செய்தி வந்ததா?”

“வந்தது........”

“என்ன? சொல். இறக்கும்போதாவது என் பிரபுவைப்பற்றி நல்ல செய்தி கேட்டு என் காதுகள் குளிரட்டும்.”

“அம்மா, அவனை ‘என் பிரபு’ என்று தாங்கள் சொல்லும்போதே என் அங்கம் பதைக்கிறது.”

“அது கிடக்கட்டும். உன் எண்ணப்படிதான் நடந்து விட்டதே. இன்னும் என்ன! அவர் என்னைவந்து கடைசியாகக் காண முடியுமா?”

“காண்பார்; இந்த உலகத்திலல்ல!”

“ரணஜித், என் உயிர் ஊசலாடிக்கொண் டிருக்கும் போது விளையாடாதே! சொல்.”

"அவர் ரணகளத்தில் மாண்டு போய்விட்டார்."

"ஹா! உண்மைதானா?"

ரணஜித் தலையை அசைத்தான். ராணி மஞ்சத்திலிருந்து புரண்டு தடாலெனக் கீழே குப்புற விழுந்தாள். பாங்கிமார்கள் பதறி ஓடித் தூக்கி நிறுத்தினார்கள். மூக்கிலிருந்து ரத்தம் பெருக்கெடுத்து வடிந்தது. தலை தொங்கி விட்டது. கண்ணிமைகள் மூடிவிட்டன. ரணஜித்சிங் தன் கண்களை இரு கரங்களாலும் பொத்தியபடி விம்மிக் கொண்டே வெளியே போய்விட்டான்.

மறைந்த கடிதம்

"குகப்ரியை"

"அடே! தங்கவேலு! இங்கே வா! நான் சொல்கிறதைக் கேட்டு அப்படியே எழுது" என்ற குரலைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. எஜமான் பூவலிங்க நாடார் படுக்கப் போய் விட்டாரென்று நினைத்து மெதுவாக அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்தேன். சொல்லி வைத்தாற்போல அந்த சமயத்திலேயா அவர் என்னைக் கூப்பிடவேண்டும்?

"இதோ வந்துவிட்டேன்" என்று அந்த ரகஸ்யக் கடிதத்தை மேஜையின்மேல் வைத்துவிட்டு எழுந்திருக்க முயன்றேன். அவரோ என்னைக் கூப்பிட்டுக்கொண்டே தடதடவென்று உள்ளே நுழைந்து வந்து விட்டார்! ஐயோ. அந்தக் கடிதத்தை அவர் பார்த்துவிடாமல் இருக்க வேண்டுமே! மனதில் ஒரே திகில், கலவரம். நிலைமையைச் சமாளித்துக் கொள்வதற்காக எதையோ தேடுபவன்போல் பாசாங்கு செய்தேன்.

"என்னப்பா, என்ன தேடறே? பேனாவிலே மை இல்லையா? இந்தா என் பேனா. நான் சொல்வதைச் சீக்கிரம் எழுது" என்று பேனாவை நீட்டினார் முதலாளி. இந்த நெருக்கடியான கட்டத்தில்தான் டெலிபோன் மணியும் 'கண கண' வென்று அடித்தது. நான் ஒளித்துக்கொள்ள முயன்ற கடிதத்தைப் பழைய இடத்திலே திருப்பி வைத்து அதன்மேல் பாரம் வைத்துவிட்டு 'ரிஸீவரைக்' கையிலெடுத்தேன். மேஜையின் ஓரத்திலேயே தான் டெலிபோன் இருந்தாலும் முன் ஜாக்கிரதையாக அவர் என் நாற்காலியின் பக்கம் வராமலிருக்கும்படி நின்றுகொண்டு பேசினேன். அவர் பார்வை தப்பித் தவறிக்கூடக் கடிதத்தில் விழக் கூடாதல்லவா?

விஷயம் வேறென்றுமில்லை. "சென்னைக்கு விறகு வரத்து அடுத்த மாதம் முதல் குறைந்துவிடும். தேவையானால் இப்பொழுதே 'ஸ்டாக்' செய்துவிடு. படகு வருகிறது. எவ்வளவு தேவை?" என்று டெலிபோனில் கேட்டார் கடைக் கூட்டாளி குமரேச முதலியார்.

நான் விஷயத்தை எஜமானுக்கு விவரித்துச் சொன்னேன். முதலாளி சுழல் நாற்காலியிலேயே உட்கார்ந்து விட்டார். கடிதம்! அதை என்ன செய்து தொலைக்கிறது? விசிறியைத் திருப்பி விட்டார் அவர். அந்த விபரீதமான கடிதம் எழுந்து எழுந்து படுத்து என்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

இவ்வளவு தொல்லைகளுக் கிடையில் ஒரே ஒரு அசட்டுத் தைரியம். முதலாளி 'அரை போதையில்' இருந்தார். ஆகவே கொஞ்சம் நஞ்சம் பிசகு நேராமல் பார்த்துக் கொண்டால் சமாளித்து விடலாம். ஆனால் அவரோ அந்த சுழல் நாற்காலியை விட்டு எழுவதாயில்லை. நானும் எனக்கு தெரிந்த அகடவிகட சாமர்த்தியங்களெல்லாம் செய்து பார்த்து விட்டேன். அவர் சுருட்டுப் பிடிக்க ஆரம்பித்து விட்டார்.

'படக், படக்' என்று அடித்துக்கொண்டிருந்த என் நெஞ்சு சற்று ஓய்ந்தது. அரை மயக்கத்திலே சுருட்டும் சேர்ந்தால் தூங்கி விடுவார் சில சமயம். அப்படி நேரக் கூடாதா என்று ஏங்கிற்று என் மனம். ஆனால் விஷயங்கள் நம் இச்சைப்படி நடக்கின்றனவா?

முதலாளி தொண்டையைக் கனைத்துக்கொண்டார். "ஏய் தங்கவேல்! மொத்தமாய் 20,000 டன் கன்டிராக்ட் எடுக்கச் சொல்லு, தெரிஞ்சுதா? இதோ பார், நான் வாசகம் சொல்கிறேன். அதன்படி எழுது. கூட்டாளி குமரேச முதலியார் சொன்னதும் அதுதானே?"

"சொக்கலிங்க நாடாருக்கு! மொத்தமாக இருபதினாயிரம் டன் பிடித்துக்கொள்ளவும். இன்னும் விலை ஏறும். ஆனால், படகு வரத்துப் போக்கு ஜில்லா கலெக்டருக்கு எட்டாமல் பார்த்துக்கொள். வைக்கலும் கட்டை

யும் அனுப்பு. டன் இருபதினுயிரம், ஞாபகம் வைத்துக் கொள்........'' என்று சொல்லிக்கொண்டே போனவர் இடையில் எதையோ நினைத்துக்கொண்டவர் போல ''என்ன எழுதினுய்? வாசி'' என்ருர்; பிழைத்தேன்!

அந்தச் சமயத்தில் நான் மேஜையைவிட்டு எழுந்து வேறு கடிதம் எடுப்பதும் எழுதுவதும் மிகவும் சிரமம். ஆகவே அந்தக் கடிதத்தின் பின்புறத்திலேயே அவர் சொன்ன விஷயத்தை எழுதி விட்டேன். நல்ல வேளை யாய்ப் போயிற்று. கண்ணையும் விழித்து, ''எங்கே இப்ப டிக் கொடு பார்ப்போம்'' என்று கேட்டிருந்தால் என் பாடு கோவிந்தா! 'ஏதோ இந்த மட்டும் படிக்கச் சொன் ஞரே' என்று ஒரு புறம் ஆனந்தம்.

''என்ன, போட்டாயா? இருபதினுயிரமா? சரி'' என்று எழுந்தார் முதலாளி. எனக்கு உயிர் வந்தது.

* * *

ஆம், நான் நினைத்தபடியேதான் நேரிட்டது. அந்த அற்புதக் கடிதத்தைத் திருப்பி மறுபடியும் படிக்க ஆரம் பித்தேன். அந்தக் கடிதத்தை எத்தனை முறைபடித்தால் தான் என்ன? அலுக்குமா, சலுக்குமா? முத்து முத்தாய்க் கையெழுத்து. அந்த எழுத்துக்கள் ஒவ்வொன்று மல்லவா என்னைப் பார்த்துச் சிரிப்பது போலிருக்கிறது? அவை ஒவ்வொன்றிலும் அவள் மலர் முகம்; அந்த இதழ்க் கிடையிலே அரும்பும் இளமுறுவல்; கண்களிலே மிதக் கும் கருத்துக்கள்—எல்லா மல்லவா ஒருங்கே தோன்று கின்றன? ஏதேது நானும் ஒரு கவிஞனுகி விடுவேன் போலிருக்கிறதே!

காதலினுல் மானுடர்க்குக் கவிதை உண்டாம்
கானமுண்டாம் சிற்பமுதற் கலைகளுண்டாம்
ஆதலினுற் காதல் செய்வீர் உலகத்தீரே!

என்ற தொடர் என் மனத்துள் எழுந்தது. அந்தக் கடி தத்தை என் முகத்தருகே கொண்டு போனேன். இடை யிலே தோன்றியது ஒரு சந்தேகம். சுற்றிலும் ஒரு முறை பார்த்துக்கொண்டேன். ஒருவருமில்லை.

மறுபடியும் படிக்கத் தொடங்கினேன். இருந்தது நான்கு வரிகள். எத்தனை முறைதான் படிக்கிறது? வீட்டிற்குப் போனால் மண்ணெண்ணெய் விளக்கு. இங்கேயே தான் இன்னொரு முறை படிப்போமே? அவசரத்தினாலும் மன எழுச்சியினாலும் ஏற்பட்ட பரபரப்பு, மனம் பதிந்து படிக்க முடியவில்லை. அடுத்த அறையிலிருந்து அபூர்வ ராகங்களிலே ஆரோகண அவரோகணக் கிரமமாய்க் குறட்டை கேட்டது. முதலாளி தூங்குகிறார்; பயமில்லை என்று பிரித்தேன்.

'குப்'பென்று அத்தர் வாசனை. அதை யடுத்துச் சாவிக்கொத்தின் ஓசை. கடிதத்தைப் பிரித்தபடியே திரும்பினேன். என் எதிரில் நின்றாள் புவனா.

"இன்னுமா படிக்கவில்லை? அட அழகே!" என்று முகத்தைக் கோணி எனக்கு அழகு காட்டினாள் அவள். நான் சிரித்து விட்டேன். மறு விநாடி அவளுடைய மலர்க் கரங்களினால் தன் வாயைப் பொத்திப் "பேசாதீர்கள்" என்று காண்பித்தாள்.

பிறகு மிகவும் மெல்லிய குரலில், "வெள்ளிக்கிழமை வரையில்தான் அவகாசம். அதற்குள் அவர் கோபித்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு நான் சன்னம் சன்னமாய்ச் சொல்லிக் கொள்ளுகிறேன்' என்றாள்.

"நீ ஏன் இங்கே வந்தாய்? நாயனா விழித்துக்கொண்டால்?" என்பதற்குள் டெலிபோன் மணி 'கணகண' வென்றது. மாயமாய் மறைந்தாள் புவனா.

* * *

முதலாளி சொன்ன உடனேயே "இருபதினாயிரம் டன்" என்று தந்தி கொடுத்து விட்டேன் சொக்கலிங்க நாடாருக்கு. இப்பொழுது குமரேச முதலியார் சொன்னதைக் கேட்டதும் தூக்கி வாரிப்போட்டது. விறகு விலை ஏறிவிட்டது. 'கவர்ன்மெண்டிலே கண்ரோல்' பண்ணப் போகிறார்களாம். புது 'கண்டிராக்ட்' எடுக்க வேண்

டாம், இருக்கிறதை விற்று ரொக்கமாக்கினல் போதும்.'' இதுதான் விஷயம்.

நான் என்ன செய்வேன்? தந்தி போய்ச் சேர்ந்து இரண்டு மணி நேரம் ஆகி இருக்கும். முதலாளியோ ஆனந்தமாய்த் தூங்குகிறார். எழுப்புவோமென்றாலும் எழுந்திருக்க மாட்டார்.........அடராமா! அவரோ அரை வெறியில் எழுதச் சொன்னார். நானும் அவசரப்பட்டுத் தந்தி கொடுத்து விட்டேன்......ஒரு வேளை எழுந்ததும், "நான் சொல்லவே இல்லை; நீயாக நஷ்டப்படுத்தி விட்டாய்" என்று சொன்னல்? மறுபடியும் தபாலாபீஸிற்கு ஓடினேன்.

நேரமாகி விட்டது. தந்தி எடுத்துக்கொள்ள மாட்டார்களாம். யுத்த சமயம், தந்தி இலாகாவிலிருந்து ஒரே அமளி துமளிப்பட்டது. என்ன செய்வதென்று விளங்காதவனாய்த் தத்தளித்தேன். கடைசியில் விழித்துக் கொண்டிருந்தாரானல் அவரிடம் சொல்ல வேண்டுமே என்று மறுபடி அங்கேயே போனேன்.

மேல் மாடியின் அறையில் அப்பொழுதுதான் எழுந்து சோம்பல் முறித்தவண்ணம் வீடே அதிரும்படி பொடியை உறிஞ்சிக் கொண்டிருந்தார் முதலாளி பூவலிங்க நாடார். உள்ளே நுழையலாமா, வேண்டாமா? எதை முன்னல் சொல்வது? எதைப் பின்னல் சொல்வது? என்றெல்லாம் ஒரே குழப்பம். எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மெள்ள அடிமேல் அடி வைத்து உள்ளே நுழைந்தேன்.

"டேய் தங்கவேலு! உன்னிடம் அப்பொழுது மத்தியானம் என்ன சொன்னேன்? அந்த சங்கதியைத் தந்தி கொடுத்து விட்டாயா?'' என்று இடிக் குரலிலே கேட்டார்.

"கொடுத்து விட்டேன்'' என்று ஈனஸ்வரத்தில் முனகினேன்.

"ஹூம்"

"அப்புறம் குமரேச முதலியார் 'டெலிபோனி'லே கூப்பிட்டார்."

"ஏன், சங்கதி என்ன? முனகித் தொலைப்பானேன்?" என்று உறுமினர் அவர்.

"'கண்டிராக்ட்' எடுக்க வேண்டாம். 'கவர்மெண்' டிலே 'கண்ரோல்' பண்ணப் போகிருர்கள் என்ருர்."

"என்ன அப்படியா?" என்று ஒரு துள்ளுத்துள்ளி ஞர் முதலாளி. அவர் முகத்தில் ஆச்சரியமும், பயமும் ஒருங்கே கலந்து தோன்றின.

"ஹூம்! ஆனல் சரி! நீ என்ன தந்தி அடித்தாய்?"

"இருபதினுயிரம் 'டன்' பிடிக்க வேணுமென்று அடித்தேன்."

அவர் கண்கள் சிவந்தன. முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடித்தது. "இருபதினுயிரமா? ஐயாயிரம் என்றல்லவா சொன்னேன்? ஒரு தரத்திற்கு இரண்டு தரமாய்ப் பார்த்துக் கேட்டு வேலை செய்கிறதில்லை. இன்னொரு தரம் கேட்டுத் தொலைக்கிறத்துக் கென்ன? ஏதாவது பொறுப்பிருந்தால் தானே? கடன் எழவுக்குச் செய்கிறது. எங்கே, நான் இருபதினுயிரம் 'டன்' என்ரு சொன்னேன்?"

"ஆமாம், இருபதினுயிரம்தான்" என்று மென்று விழுங்கினேன்.

"எங்கே அந்தக் காகிதத்தைக் கொண்டுவா பார்ப் போம்."

அவ்வளவுதான்! எதிர்பாராத பேரிடி என் தலை மேலேயே விழுந்து விட்டது. கடிதம் என் பையிலேயே தான் வெகு பத்திரமாக யிருந்தது. மார்பு படபட வென்று அடித்துக்கொண்டது. இருந்தாலும் ஒரு வித மாகச் சமாளித்துக்கொண்டு "இதோ கொண்டு வருகி றேன்" என்று என் அறைக்குள் ஓடினேன்.

என் நிலையிலிருந்து அவருக்கு ஏதோ ஒரு விதமான அவநம்பிக்கை! தானும் எழுந்து வந்துவிட்டார். நான் என்ன செய்வேன்? ஏதோ தேடுவதுபோல் அபிநயித்தேன். என்னைக் கூர்ந்து கவனித்தார் அவர். கடைசியாக மென்று முனகிக் "காணேம்" என்று கையை விரித்தேன்.

அவருக்கு அசாத்தியக் கோபம் வந்து விட்டது. "என்ன! வரவர ரொம்ப மோசமாய் வருகிறது? 'கவர்ன்மெண்டி'ல் சம்பளம் உயர்த்தருங்க என்றுமட்டும் கேட்கத் தெரிகிறதே! வேலை தெரிகிறதா? விஷயத்தை எவ்வளவு அலட்சியமாய் நினைத்திருக்கிருய்? நான் சொல்லி எழுதச் சொன்ன கடிதம் நொடிக்குள் எங்கே போய் விடும்? எவ்வளவு? இருபதினுயிரமா? அவ்வளவு சொன்னதாக நினைவே இல்லையே? இதில் ஏதோ சூது இருக்கிறது. இல்லாவிட்டால் முக்கியமான கடிதம் எங்கே போகும்? அந்தக் கடிதத்தைத் தாக்கல் செய்தால் தான் வேலை. இல்லாவிட்டால் 'கல்த்தா'தான்!" என்று கூச்சலிட்டார் அவர்.

"நீங்கள் இவ்வளவு கோபித்துக் கொள்ளக்கூடாது. எங்கேயாவது மறதியாய் வைத்திருப்பேன்; நாளைக் காலையில் எப்படியாவது தேடி எடுத்து விடுகிறேன்" என்று கெஞ்சும் குரலில் சொன்னேன்.

"அந்தப் பாச்சாவெல்லாம் இங்கே பலிக்காது. வீட்டிற்குப் போய் ஏதாவது வேறு ஒன்று எழுதிக்கொண்டு வந்து விடலாம் என்ரு? நான் இருபதினுயிரம் 'டன்' என்று சொன்னதாக ஞாபகமே இல்லையே! தந்தி எத்தனை மணிக்கு அடித்தாய்?"

"நீங்கள்தான் சொன்னீர்கள். எழுதிய பிறகு அதைப் படித்துக் காட்டினேன், கையெழுத்து வைத்துவிட்டுத் தான் போனீர்கள்" என்று நடுங்கிய குரலில் சொன்னேன்.

"அதனுல்தான் சொல்லுகிறேன் அந்தச் சீட்டு இப்பொழுது வந்து தீரவேண்டும். இல்லையானுல்........." என்று சீறினுர்அவர்.

எனக்கோ கை கால்களெல்லாம் வெடவெட வென்று நடுங்கத் தொடங்கின. உடல் முழுவதும் ஒரே தொப்ப லாய் வியர்வை. காகிதம் கையிலிருந்தும் எடுத்துக் காண் பிக்க முடியவில்லை. எங்கே அவரே என் பையைச் சோதித்து விடுவரோ என்று நினைக்கும் பொழுது என் மார்பு 'படீர் படீர்' என்று அடிக்கத் தொடங்கிற்று. இந்த நிலையில் எவ்வளவு நேரம் நின்றிருந்தேனே தெரி யாது. நிமிர்ந்து பார்க்கும்பொழுது அவர் அங்கே இல்லை. சட்டையின் உள் பையைத் தடவிப் பார்த்தேன், கடிதம் பத்திரமாய் அங்கே யிருந்தது.

* * *

'கணகண கண'வென்று அலாரம் அடித்தது. "அப்பா! தங்கவேலு எழுந்திரடா! எழுந்திரு" என்று எழுப்பினுள் என் தாயார். நான் புரண்டு படுத்தேன்.

வீதியிலே 'டிரைவர்' முருகேசன் தாயார் என் தாயாரோடு பேசிக்கொண் டிருந்தாள். விஷயம் வேறென்றுமில்லை. நான் ராஜிநாமாக் கொடுத்துவிட்டு வந்த விஷயம் அழகாக உபமான உபமேயங்களுடன் விவரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. கவலை தோய்ந்த முகத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள் என் தாய்.

அன்று முழுவதும் நானும் ஒன்றும் பேசவில்லை. அம்மாவும் ஒன்றும் கேட்கவுமில்லை. என் தாயார் கோபித் துக் கொள்ளுவாளென்று பயந்ததற்குமாருக "இந்த யுத்த காலத்தில் வேலைக்கென்னடா பஞ்சம்? இதுக்காக மூஞ்சியை என் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந் திருக்கிறுய்? இந்த மடம் இல்லாவிட்டால் சந்தை மடம்" என்று தேற்றத் தொடங்கிவிட்டாள்.

"ஆம்! வாஸ்தவந்தான். இந்தக் காலத்தில் வேலைக் குப் பஞ்சமா? ஆனல், நீ ஏங்குவது வேலைக்காகவா?" என்று யாரோ என் செவிகளில் சொல்லுவதுபோல் கேட்டது.

* * *

அழகிய தோட்டம். அதன் நடுவிலே ஒரு சின்னஞ் சிறிய குளம். மா, பலா, கொய்யா, முந்திரி முதலிய

பழ மரங்களுக்கிடையே அந்தக் குளம் அழகின் சிகர மாக அமைந்திருந்தது. குளத்தை அடுத்து சிமிட்டினல் கட்டப்பட்ட ஒரு ஆசனத்தில் தண்ணீரையே பார்த்தவ ளாய் உட்கார்ந்திருந்தாள் புவனு. குளத்தில் மலர்ந்த தாமரையிலே வண்டுகள் ஒலி செய்ய அந்த அற்புதக் காட்சியிலே மெய்ம் மறந்து ஈடுபட்டிருந்தது அவள் மனம். அந்த ரீங்காரத்துடன் இயைந்து அவளது இனிய கானம் காற்றில் தவழ்ந்து வந்தது. நானும் மெதுவாய் அந்தத் தோட்டத்தில் நுழைந்தேன்.

புவனு! ஆம் புவன சுந்தரிதான், திரிபுவனங்களையும் அசைத்து விடக்கூடிய சௌந்தர்யம், மோகனசக்தி இரண்டும் ஒருங்கே சேர்ந்திருந்தன அவளிடத்தில். ஆனந்தமாய் மெய்ம்மறந்து பாடிக்கொண்டிருந்தாள். நான் வந்திருப்பதை அவள் அறியக்கூடாது என்றுதான் இருந்தேன். ஆனல் பட்சி ஜாலங்கள் விர்ரென்று பறந்து சென்ற சத்தத்தைக் கேட்டு சுற்றும் முற்றும் பார்த்தாள், நிஷ்டை கலைந்தது. "என்ன? நீங்களா? இங்கே—இங்கே—" என்று குழறினுள். அவள் குரலில் ஆச்சர்யமும் ஆனந்தமும் ஒருங்கே த்வனித்தன.

"புவனு!" அதற்குமேல் பேசுவதற்கு நா எழவில்லை. தொண்டை கரகரத்தது. இன்னதென்று விவரிக்க முடி யாத ஒருவகை ஆனந்தத்தினுல் மெய்ம் மறந்தேன். மறு விநாடி தண்ணென்றிருந்த இருதளிர்க் கரங்கள் என்னை ஸ்பரிசித்தன. நீண்ட குழல் சுருள்கள் என் தோள்மீது புரண்டன.

* * *

பம்! பம்!! பம்!!! என்ற மோட்டார் ஹாரன் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டேன். அடதெய்வமே! இவ்வளவும் கனவா? அடடா! இந்த இன்பக்கனவு இன்னும் சற்று நேரம் நீடித்தால் அதற்கு என் உயிரையே கொடுத்து விடலாமே என்று தவித்தவனுய் எழுந்தேன்.

வீதியில் ஒரே அமர்க்களம், பூவலிங்க நாடாரின் குரல் கம்பீரமாகக் கேட்டது; "இறங்கி வாயேன்

புவனம்! ஐயோ பாவம்! தங்கவேலு இராத்திரி தூங்கினுனே இல்லையோ " என்று.

உண்மையிலேயே திகைத்து விட்டேன். இது வரையில் கண்டது கனவா? அல்லது இதுதான் கனவா? நாடாராவது என் வீட்டு வாசலில் நிற்பதாவது? என்று கண்களைக் கசக்கிக்கொண்டேன்.

சாக்ஷாத் முதலாளி என் எதிரே நின்ருர். பொழுது விடிந்ததும் விடியாததுமாய்த் தானே நேரில் வந்திருக்கிருரே. என்ன சமாச்சாரமோ என்று துடித்துப் போனேன்.

என் தாயார் இடிவிழுந்து போய்விட்டாள். நான் ஏதாவது பணத்தைக் கையாடி விட்டு வந்திருப்பேனே என்று அவளுக்குச் சந்தேகம். மெள்ள என் அருகில் வந்து, " ஏதாவது எடுத்திருந்தால் உள்ளதைச் சொல்லி விடு; நான் எப்படியாவது கெஞ்சி மன்னிக்கச் சொல்லுகிறேன் " என்று காதைக் கடித்தாள்.

இதற்குள் முதலாளி தாமாகவே வந்து விசிப்பலகையின்மீது உட்கார்ந்தார். எங்களுக்கோ ஒன்றும் விளங்கவில்லை. உபசரிப்பதா? எப்படி? ஏதாவது புரிந்தால் தானே?

நான்மட்டும் இருபத்தைந்து ரூபாய் சம்பளம் வாங்கும் குமாஸ்தாவுக்கென்றே பிரத்தியேகமாய் ஏற்பட்ட அடக்க ஒடுக்கம், கையைப் பிசைதல் முதலிய லக்ஷணங்களோடு நின்றேன்.

" என்ன தங்கவேலு! உன்னை அழைத்துப் போகத் தான் வந்தேன் " என்ருர் அவர்.

'இது பரிகாசமா, உண்மையா?' என்று விளங்காமல் விழித்தேன். அவரோ மிகவும் சுவாதீனமாக, " வா அப்பா! கிளம்பு! காப்பி, பலகாரம் ஆயிற்ரு இல்லையா?" என்ருர்.

" என்ன பெரியம்மா! முந்தா நாள் சாயங்காலம் தங்கவேல் வந்து விட்டானு, நேற்று ஏழு மணிக்கு சொக்க

லிங்கத்தினிட மிருந்து ஒரு தந்தி வந்தது. இதோ பாருங்கள்'' என்று எடுத்துக்கொடுத்தார். அது பின்வருமாறு. ''உங்கள் தந்தி சரியான சமயத்தில் வந்தது. அதில் கண்டபடி இருபதினாயிரம் 'டன்' விறகு 'கண்ராக்ட்டு' எடுத்து விட்டேன், நாளைக்காலை அங்கே வரும். டன் ஏழு ரூபாய் விலை.''

''பார்த்தாயா? சரியான அடி! சக்கைபோடு! நம் கொள்முதல் அடக்கம் செலவு உள்பட ஏழரை ரூபாய். இன்று 'மார்க்கெட்' நிலவரம் இருபத்திநாலு ரூபாய். மொத்தக் கணக்கில் லாபம்........'' என்று இழுத்தார்.

நான் பிரமித்து விட்டேன். என் கண்கள் ஆச்சர்ய மிகுதியால் மலர்ந்தன. அவரை ஏறிட்டுப் பார்த்தேன்.

முதலாளி மீண்டும் தொண்டையைக் கனைத்துக் கொண்டு அன்று நீ தந்தி அடிக்காமலிருந்தால் நம் தொழில் அடியோடு படுத்துப்போய் இருக்கும். நான் சொல்லி இருப்பேனோ என்னமோ என்று கனவுபோல் தோன்றிற்று. இருந்தாலும் புவனம்மட்டும் பிடிவாதமாய் ''அப்பா! அவர் சும்மா செய்திருக்க மாட்டார். நீங்கள் சொல்லித்தான் இருப்பீர்கள். கடிதத்தை மறதியாக எங்கேயாகிலும் இடது கையினால் வைத்திருப்பார்'' என்று அடிக்கடி கூறிக்கொண்டேயிருந்தாள். மறுபடியும் உன்னை வேலைக்குக் கூப்பிட வேண்டும் என்றுஞ் சொன்னாள். அந்தப் பாச்சாவெல்லாம் என்னிடமா? ஒரே யடியாய் முடியாதென்று தீர்மானமாகச் சொல்லி விட்டேன். கடைசியாகத் தந்தியும் வந்தது. குமரேச முதலியாரும் வந்தார். ஊர் விவகாரம் என்னென்னமோ பேசினோம். கடைசியில் உன்னைப்பற்றி ரொம்ப ஆவலாய் விசாரித்து, ''தங்கவேலு தானே தந்தி அடித்தான். அவனுக்கு என்ன பரிசு?'' என்று கேட்டார். என்ன பதில் சொல்லுவது, துரத்திவிட்டேன் என்பதா? அதற்காகத்தான் வெகுமதி கொடுத்துக் கூட்டிப்போக வந்தேன் எழுந்திரப்பா'' என்றார்.

எனக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை. அவர் ஏதோ ஒரு கத்தை நோட்டுக்களைத் தாம்பாளத்தில்

வைத்து எடுத்துக்கொள் என்று சொல்லக்கூடும். பெற்றுக்கொள்வதா, மறுப்பதா? என்ற சிந்தனையில் ஆழ்ந்தேன். பிறகு ஒருவித முடிவுடன் எழுந்து நின்று என் பையிலே கையை விட்டு “எந்த வார்த்தைகளை நீங்கள் சொல்லவில்லை என்று மறுத்தீர்களோ அந்த வார்த்தைகள் அடங்கிய கடிதம் இதோ உங்கள் கைச்சாத்துடன் இருக்கிறது” என்று விரைப்புடன் நீட்டினேன்.

பூவலிங்க நாடார் தயங்கிய வண்ணமாக வாங்கினர். கடிதத்தின் நிறம், மறுபுறம் எழுதி யிருக்கும் எழுத்து இவைகளைப் பார்த்துத் திடுக்கிட்டாள் புவனா.

“அவ்வளவு திட்டினேனே! ஏன் அப்பொழுதே கொடுக்கவில்லை?” என்று கேட்டார் முதலாளி.

“தகுந்த காரணத்தோடுதான்! என் மானம், மரியாதை, உத்தியோகம் இவைகளைவிட புவனாவின் கௌரவத்தைக் காப்பது பெரிதென்று தோன்றிற்று.”

கடிதத்தைத் திருப்பிய அவர் ஆச்சர்யத்தால் ஸ்தம்பித்து விட்டார். “என்ன? இது புவனாவின் எழுத்துக்களல்லவா?” என்று கேட்டுக்கொண்டே புன்னகை தோய்ந்த முகத்தோடு புவனாவின் பக்கம் திரும்பினர். அவள் முகத்திலே நாணத்தோடு கூடிய இளமுறுவல் அரும்பிற்று.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 FEB 1944
MADRAS

கழுமரம்

பி. கோதண்டராமன் எம். ஏ., பி. எல்.

“நந்திமித்திரா, நீ இந்த க்ஷணமே சென்று அந்தப் பொல்லாத சமணனுகிய பவணநந்தியைக் கண்டு பிடித்து அரசன் அவைமுன் கொண்டுவர வேண்டும். அவன் ஆனைமலையிலேயோ, பசு மலையிலேயோ ஒளிந்து கொண்டிருப்பதாகக் கேள்வி. அவன் ஜாலவித்தை யறிந்த கொடியவனுகையால், நீ உன்னுடன் ஆறு படைவீரர் களை அழைத்துச் செல்வது நலம். இது அரசன் ஆணை. இதோ அதிகார ஓலை” என்றுன் கூன்பாண்டியனின் பிரதம மந்திரி.

“நெல்வேலி வென்று நின்றசீர் நெடுமாறன்” எனப் பிரசித்திபெற்ற கூன்பாண்டியன் அருகமதத்தைத் தழுவி யிருந்த போது, பாண்டியநாட்டின் தலைநகரான மதுரை யில் சைன மதம் மிகுந்த செல்வாக்கும் ஆதரவும் பெற்றி ருந்தது. ஆயினும் சைவ நெறியிலேயே இருந்து அதைப் பெரிதும் ஆதரித்து வந்த அரசியும் பிரதம மந்திரியும், தமிழ் நாடெங்கும் சைவ சமயப் பிரசாரஞ் செய்து, சைனர்களை ஒழித்துப், பரசமயகோளரி யெனப் புகழ் பெற்ற திருஞான சம்பந்தரை மதுரைக்கு அழைத்து, அங்கு சைவத்தை நிலைநாட்டிக் கூன்பாண்டியனைச் சிவ நெறிக்குத் திருப்புமாறு கேட்டுக் கொண்டனர்.

ஞானசம்பந்தர் அவ்வண்ணமே மதுரைக்கு விஜயம் செய்து, சமணர்களை வென்று, பாண்டியனின் கூனை நிமிர்த்தி அவனை மீண்டும் சைவ சமயத்தில் சேரும்படிச் செய்தார். அது கண்ட பிரஜைகள் பலரும் சைன சம யத்தை விட்டுச் சைவ சமயத்திற் புகுந்தனர். சிவநெறி காட்டுத் தீயைப் போல நாடெங்கும் பரவியது. புது வைராக்கியம் கொண்ட பாண்டியன், மூலைமுடுக்குகளி லுள்ள சைனர்களையும் சும்மாவிடாமல் பலவந்தஞ்செய்து

சைவர்களாக்க முயன்ருன். அவனது பலவந்தத்திற்கு இணங்காத 8,000 சமணர்கள் ஊர் மக்களின் முன்னிலையில் கழுவிலேற்றப்பட்டனர்.

இவ் வடக்குமுறைகளைச் சட்டை செய்யாமல் சில சமண முனிவர்கள் ஆனைமலையிலும் பசுமலையிலும் ஒளிந்திருந்ததாகக் கேள்வியுற்ற மன்னன், அவர்களின் தலைவனை பவணநந்தியைப் பிடித்துக்கொண்டு வருமாறு கட்டளையிட்டான். இக் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டே, பிரதம மந்திரியார் ஏனுதியாகிய நந்திமித்திரனை யழைத்து மேற்குறித்தவாறு உத்தரவிட்டார்.

நந்திமித்திரன் அதிகார ஓலையைப் பெற்றுக்கொண்டான். அவ்வோலையில் பின்வருமாறு பொறிக்கப்பட்டிருந்தது.

"பவணநந்தி என்னும் சமணன் ஆனைமலை பசுமலைகளில் ஒளிந்துகொண் டிருக்கும் சைனர்களின் தலைவன். அவன் சைவ சமயத்தின் பரம விரோதி. வேதம் வேள்விகளைச் சதா நிந்திப்பவன். மந்திரங்களை மூக்கால் முரன்ருேதுபவன். குடையும் பீலியும் வைத்திருப்பவன். நங்கையர் முன் நாணமின்றி நிர்வாணமாய் நிற்பவன். மந்தியைப் போலத் திரிவான். குளித்து உண்ணமாட்டான். கடுநோன்பு மேற்கொள்ளும் மகாபாபி அவன். கைதேர்ந்த ஜாலவித்தைக்காரன். குட்டிச்சாத்தான் போன்ற கொடிய தேவதைகளுடன் உறவுகொண்டு மறைவிலிருந்து கொண்டே ஆளைக் கொல்லும் வித்தையை யறிவான். அவனை வெகு தந்திரமாகப் பிடித்துக்கொண்டு வரவேண்டும். ஒருவேளை உன் உயிருக்கே ஆபத்து நேரிடக்கூடும். ஆனுல், மன்னர்க்கு மன்னராகிய சிவபிரானின் திருவருள் உன்னை எல்லா ஆபத்துக்களினின்றும் பாதுகாக்கும் என்பதை அறிவாயாக!"

உத்தரவைப் படித்தவுடனேயே நேராகப் படைவீடு சென்று தனக்கு மிகவும் நம்பிக்கையுள்ள ஆறு வீரர்களை யழைத்துக் கொண்டு புறப்பட்டான். அவர்கள் யாதொரு குறிப்பு மின்றி நெடுகச் சென்றதால், அஸ்தமன சமயத்தில் ஒரு கானகத்தை வந்து அடைந்தனர். அவர்களுக்கு

எதிரே ஒரு மலை தென்பட்டது. அது ஆனைமலையா, பசு மலையா, என்பதையும் பவணநந்தி எங்குள்ளான் என்பதையும் அவர்கள் அறியார். அச் சமணன், எவரும் எளிதில் அடையமுடியாத தொரு தவப்பாழி யமைத்துக் கொண்டு அதில் ஒளிந்திருப்பதாகவே நந்திமித்திரன் தனக்குள் கற்பனை செய்துகொண்டான். அவனைக் கண்டு பிடிப்பது சிரமமான காரியமாயினும், பொழுது விடிந்ததும் மலையடிவாரத்திலுள்ள குறவர்களின் உதவியைப் பெறலாம் என்றெண்ணினன்.

சூரியன் மலைவாயில் விழுந்தான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் பூரண சந்திரன் உதயமாகி வெண்ணிலாவைப் பொழிந்தான். நந்திமித்திரனும் அவனுடைய வீரர்களும் தங்களுடன் கொண்டு வந்திருந்த உணவை அருந்திவிட்டு வெட்டவெளியில் படுத்துறங்கினர். அதிகாலையி லெழுந்து மலையடிவாரத்தை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் ஒரு காட்டாறு சென்றது. அதன் வழியாகவே வெகுதூரம் சென்ற பிறகு விழற்புல் வேய்ந்த ஒரு சிறுகுடிலும் அதன் பின்புறத்தில் ஒரு சிறு அழகான தோட்டமும் காணப்பட்டன. அக் குடிலைப்பற்றி நந்திமித்திரனுக்கு யாதொரு சந்தேகமும் எழவில்லை. அது ஒரு குடியானவனுடைய வீடாகவே இருத்தல் வேண்டுமென்று எண்ணினன். காட்டு வழியில் எரிக்கும் வெயிலில் நடந்துவந்ததால் மிகவும் களைப்புற்றிருந்த அவனும் அவனுடைய சகாக்களும் அக்குடிலை யடைந்து கதவைத் தட்டினர்.

கதவு திறந்தது. ஒரு மனிதன் தோன்றினன். அவனுடைய தலை மயிரும் தாடியும் நீண்டிருந்தன. இடுப்பில் கௌபீனம் மட்டுமே இருந்தது. அவன் உடம்பெல்லாம் வியர்வை சொட்டிக் கொண்டிருந்தது. அவனது வலது கையில் ஒரு களைக்கொத்து காணப்பட்டது. பார்வைக்கு ஒரு குடியானவனைப் போலவே இருந்தான். ஆயினும், அவனது முகத்தில் மந்தகாசமும் சுப்பிரசன்னமும் தவழ்ந்தன. தொங்கின இரப்பைக் குள்ளிருந்த அவனுடைய கறுத்த விழிகள், கனவு காண்பன போன்றிருந்தன. அவனுக்குச் சுமார் அறுபது வயதிருக்கலாம். ஆனல்

அவனது உள்ளம் இளமை பூண்டிருந்த தென்பது முகத்தில் பிரதிபலித்தது.

" வாருங்கள் ! உள்ளே வாருங்கள் ! இக்குடில் உங்களுடையதே எனக் கருதித் தாராளமாய் உள்ளே நுழையலாம். என்ன ? படை வீரர்களா ? பல்லவர்கள் படையெடுத்து வந்திருக்கின்றனரா ? " என்றுன் அம் மனிதன்.

" இல்லே, இல்லே. வெம்பகைவரையும்விடக் கொடியவனையும், சைவ சமயத்தைப் பழிப்பவனையும், கள்ளர்களைப் போல இம் மலேகளில் பதுங்கிக் கிடக்கும் கபட சைனர்களின் தலைவனையும், குட்டிச் சாத்தானே ஏவும் ஜாலக்காரனையுமுள்ள ஒருவனேத் தேடிக் கண்டுபிடித்து அரசன்முன் கொண்டு போகவே வந்திருக்கிறேம் " என்றுன் நந்திமித்திரன்.

" இப் பிராந்தியத்தில் ஜாலக்காரன் எவனுமில்லே. ஆனல், இங்கே வழிபறிக் கொள்ளேக்காரர்கள் அநேகர் இருக்கின்றனர். என் சிறு தோட்டத்திலுள்ள தென்னேகளிலிருந்து இளநீர் காய்கள் தினந்தோறும் களவு போகின்றன. வாழைகள் கொலேவிட்டு முதிர்ந்துவரும் சமயம் பார்த்து எவரோ இரவோடு இரவாக வந்து கொலேகளே அப்படியே அறுத்துக்கொண்டு போய்விடுகின்றனர். வள்ளிக் கிழங்குகளேப் பெரிதாவதற்குள் தோண்டி எடுத்துச் சென்று விடுகின்றனர். ஆயினும், என் மனம், மெய், மொழிகளால் அவர்களுக்கு நான் கடுகளவும் தீங்கு செய்யாமல், " போகட்டும் " என்று மன்னித்துவிடுகிறேன். என்ன செய்வது ? ஒருகால் என்னேவிட அவர்களுக்கு இவ்வுணவுப் பொருள்கள் அதிகமாகத் தேவையா யிருக்கின்றன போலும்! "

" நீங்கள் ரொம்பவும் தயை காட்டுகிறீர்கள். பாண்டிய மன்னர் இத் துஷ்டர்களேத் தண்டிக்கத் தீர்மானித்திருக்கிறுர். மன்னரின் பரம சத்துருவான சமணத் தலைவனே இவர்களே இவ்விதஞ் செய்யத் தூண்டி வருகிறுன் என்றே நினேக்கிறேன். "

" அவன் பெயர் என்ன ? "

"அவன் பெயரா?"

நந்திமித்திரன் ஓலையைப் பிரித்துப் பார்த்தான்.

"பவணநந்தி."

"பவணநந்தியா? அவரை எனக்கு நன்ருகத் தெரியுமே. இங்கேதான் அண்மையில் இருக்கிருர். அவர் ஒரு சைனமுனிவர்."

"அப்படித்தான் என் உத்தரவிலும் காணப்படுகிறது."

"அவரேதாம். அவர் மிகவும் கொடியவர்தாம்! சைவ சமயத்தைப் பழிப்பவர்தாம்! ஆம், நீங்கள் சொல்வது சரியே. சூரியாஸ்தமனத்திற்குள் அவரை நானே அழைத்து வருகிறேன். சரியான இடத்திற்கே நீங்கள் வந்திருக்கிறீர்கள். பவண நந்தியா? அப்படிச் சொல்லுங்கள். உங்களுக்குக் கவலேயே வேண்டாம். அவர் உங்களது வசம் இருக்கிருரென்றே வைத்துக் கொள்ளுங்கள். அதற்குள் நீங்கள் கொஞ்சம் ஆகாரஞ் செய்துவிட்டுச் சற்று இளேப்பாறுங்கள்.

உடனே அம் மனிதர் உள்ளே சென்று இளநீர்க் காய்கள், மலேவாழைப் பழத்தார்கள், அடுப்பில் போட்டுச் சுட்ட வள்ளிக் கிழங்குகள் இவைகளிற் சிலவற்றை அவர்கள்முன் கொண்டு வைத்து "நல்ல காலமாக இன்றைக்குக் கள்ளர்கள் இவைகளே விட்டுப் போயிருக்கின்றனர்" என்ருர்.

"பவணநந்தியின் தூண்டுதலல்லவா அவர்கள் தங்கள் தோட்டத்தை இவ்விதம் சூரையாடுகின்றனர்?"

"ஆமாம்! எல்லாம் அவரது தூண்டுதல்தான்!"

"அவனே நாங்கள் சும்மாவிடப் போவதில்லே."

"ஆமாம், அவரைச் சும்மாவிடக் கூடாதுதான்."

நந்திமித்திரனும் அவனுடைய வீரர்களும் பின்னர் சிற்றுண்டி அருந்தினர். நந்திமித்திரன் விருந்திட்டவரை நோக்கி, "இளநீர் தேவாமிருதமா யிருக்கிறது. மலேப்

பழுங்கள் மிக இனிப்பா யிருக்கின்றன. மன்னரது பழத் தோட்டத்திலும் இத்தகைய பழங்கள் அகப்படுவது அரிது" என்றான். முனிவரும் அடங்கா மகிழ்ச்சி கொண் டனர். வெயில் உக்கிரமா யிருக்கவே, விருந்தாளிகள் சற்று படுத்து உறங்கினர். இதற்குள், முனிவர் உள்ளே சென்று யோகாசனத்தில் அமர்ந்து வெகு தீவிரமாகத் தியானஞ் செய்தார். சீவன் விடுதலை பெற்று நிருவாண மடையுங்காலம் நெருங்கிவிட்டதை யுணர்ந்து பேருவகை கொண்டார். தியான முடிவில், தாமே பவணநந்தியென வெளிப்படுத்திக் கொண்டு, அவர்கள் வசப்பட்டுச் சமயத் திற்காக மகிழ்வுடன் உயிர் துறப்பதே நலமென முடிவு செய்தார்.

வெப்பம் குறைந்தது. மணி சுமார் மூன்று இருக்கும். வீரர்கள் விழித்துக் கொண்டனர். அந்த ஜாலக்காரச் சமணனை எப்படியாகிலும் பிடித்து இரவே அரண்மனை போய்ச் சேர வேண்டுமே என நந்திமித்திரன் கவலையி லாழ்ந்திருந்தான். கடைசியாக, விருந்திட்ட பெரியாரை நோக்கி, "பெரியவரே, அந்தப் பவணநந்தியின் சமாச் சாரமென்ன? அவனை அழைத்து வருவதாகச் சொன் னீரே?" என்றான்.

ஐயோ பாவம்! பவணநந்தியார் மிக அமைதியுடனும் கலக்க மென்பது சிறிதுமின்றியும் நந்திமித்திரனை யணுகி, "ஐயன்மீர்! நான்தான் பவணநந்தி. இதோ உமது வச மாய் விட்டேன்!" என்றார்.

"என்ன? நீரா பவணநந்தி? விளையாட்டா அல்லது புத்தி தடுமாற்றமா?"

"அவை யொன்றுமில்லை. நான்தான் பவணநந்தி."

தம்மிட மிருந்த ஓலைச் சுவடிகளின் மூலமாகவும், பாண்டிய மன்னன் இறையிலி செய்து தமக்களித்த நில தான பத்திரத்தில் பொறிக்கப்பட் டிருந்த எழுத்துக்கள் மூலமாகவும் தாமே பவணநந்தியென நிரூபித்தார்.

நந்திமித்திரன் சந்தேகம் தெளிந்தான். ஆயினும், பவணநந்தி முனிவர் ஒரு குற்றமும் அறியாத நிரபராதி

என்பதை யுணர்ந்து பாண்டிய மன்னனின் அறியாமை யைக் குறித்து மிக வருந்தினன். ஆயினும், அவன் என்ன செய்ய இயலும்? பவணநந்தியை அழைத்துச் செல்வ தைத் தவிர வேறு வழியில்லை. உடனே எல்லோரும் புறப் பட்டனர். வேகமாக நடந்து சென்று தலைநகரின் வாயிற் புறத்தை அடைந்தபோது நள்ளிரவு.

அடுத்தநாளே பவணநந்தி விசாரணைக்காக மன்னன் முன்பு கொண்டு போகப்பட்டார். அதையறிந்த ஜனங் கள் அரண்மனையைச் சுற்றிலுங்கூடி "சைவ சமயத்தைப் பழித்த சமணன் கடைசியாக அகப்பட்டுக் கொண்டான்! அவனைக் கழுவிலேற்ற வேண்டும்!" என்று பெருங் கோஷஞ் செய்தனர். மன்னன் கேட்ட கேள்விகளுக்குத் தாம் ஒரு சைனன் என்றும், சைனசமயத்தை மறுக்க முடியா தென்றும் விடைகூறவே, மன்னன் அவரைக் கழுவிலேற்ற உத்தரவிட்டான்.

மாலை மூன்று மணிக்குப் பவணநந்தி யடிகள் கழுக் களத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். கழுமரம் தயா ராக நின்றது. அதன் கூர்முனை மாலை வெயிலில் தளதள வென்று ஜொலித்தது. அதைச் சுற்றிலும் ஜனங்கள் திரள்திரளாகக் குழுமி யிருந்தனர். "சமண மதம் வீழ்க! சைவ சமயம் வாழ்க! பரசமய கோளரி வாழ்க! தமிழும் சைவமும் தழைக்க வந்த ஞானசம்பந்தர் வாழ்க!" என் னும் பேரொலிகள் வானைப் பிளந்தன.

நந்திமித்திரன் ஒருவனே மௌனமாகவும் கவலைக் குறிகளுடனும் காணப்பட்டான். அவன் கழுமரத்தினடி யில் நின்ற பவணநந்தி யடிகளை நோக்கி, "முனிபுங்க வரே! நானும் உம்மைப் போலவே சைனனாக இருந்த வன். வெகு காலத்திற்குப் பின்னரே சைவ சமயம் புகுந் தேன். உமது விதியைக் குறித்து நான் மிகவும் வருந்து கிறேன். நீர் இப்பொழுது சைவ சமயம் புக ஒப்புக் கொள்ளுவீராகில், மன்னனது அருளைப் பெற்று நீர் உயிர் தப்புவது நிச்சயம். அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். என்ன சொல்லுகிறீர்? தாமதமின்றி உடனே பதில்கூறும்" என்றான்.

"நந்திமித்திரா! என் பொருட்டு நீ இரங்குவதைக் காண என் மனம் இளகுகிறது. ஆனால், உனது புத்தி மதியை நான் ஏற்க இயலாதவனா யிருக்கிறேன். சைன சமயத்திலும் செம்மையுளது. உண்மையும், அன்பும், உயிர்களுக்கு இரக்கமும், கொல்லாமை விரதமும், ஆசை, அகந்தை, முதலிய இழிகுணங்களை அடக்கியாளும் நெறியும் சைன மதத்திலுமுண்டு. நான் வைராக்கியமுள்ள சமணன். என் பெற்றோர்கள் சமணராகவே வாழ்ந்து உயிர்விட்டனர். நான் பிறந்து, வளர்ந்து, அருகத நிலையை யடைந்துள்ள இந்த சமயத்தில் இருந்து கொண்டே உயிர்விட விரும்புகிறேன். ஜீவனாகிய எனது ஆன்மா, அஜீவனாகிய இந்த ஜட உலகின் பந்தத்தினின்றும் விடுதலை யடைந்து, பூரண ஞானமும் பக்தியும் ஆனந்தமும் பெற்று நிருவாண மடைவதே எனது லட்சியம். எனது ஆயுள் காலத்தில் நான் அஹிம்சையைப் பூரணமாக அனுஷ்டித்து வந்திருக்கிறேன். என் மனோ வாக்குக் காயங்களினால் நான் இதுவரையில் ஒருவருக்கேனும், ஒரு பிராணிக்கேனும் ஹிம்சை செய்ததில்லை. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகியுள்ளேன். சத்தியம், பிரம்மசரியம், விரக்தி இவைகளை அனுஷ்டித்திருக்கிறேன். எனது உடல் அழிந்தபின் எனது ஆன்மா நிருவாணமடைவது நிச்சயம். ஆகையால், நான் அஞ்சுவதொன்றுமில்லை. ஆகவே என்னைப்பற்றி உனக்குக் கவலையே வேண்டாம். எனது கடைசி தியானத்தைச் செய்ய ஐந்து நிமிடங்கள் சாவகாசம் கொடுத்தால் போதும்" என்றார் பவணநந்தி யடிகள்.

நந்திமித்திரன் அவ்விதமே அனுமதிக்க, பவணநந்தியார் பத்மாசனத்தில் உட்கார்ந்து கண்களை மூடித் தியானஞ் செய்தார். பின்னர் கண்விழித்துக் கைகூப்பிக் கொண்டு

"நமோ அர்ஹந்தாணம்

நமோ சித்தாணம்

நமோ ஆயாரியாணம்

நமோ யுவஜ்யாணம்

நமோ லோயே

சப்ப சாஹுணம்."

(அர்ஹர்கள், சித்தர்கள், ஆசாரியர்கள், உபாத்தி யாயர்கள், சாதுக்கள் ஆகிய எல்லோரையும் வணங்கு கிறேன்) என்று உரக்கச் சொன்னர். பிறகு நந்திமித்தி ரனை நோக்கி, "இனி உமது காரியத்தை நடத்தலாம்" என்ருர்.

பவணநந்தியார் கழுவிலேற்றப்பட்டார். கழுமுனை அவருடலைக் குத்திக் கிழித்தது. உதிரம் ஆருகப் பெருகி யது. அப்போதுங்கூட "அருகா சரணம்! அமலா சரணம்! முதல்வா சரணம்! அமைதிக் கடலே சரணம்! அருகா! அருகா! அருகா!" என்று அவருடைய உதடுகள் முரன்றதை யாவரும் கேட்டனர்.

ஏழைப் பையன்

ஆர். ஷண்முகசுந்தரம்

கிருஷ்ணசாமி முதலியார் தம்முடைய சொந்த முயற்சியாலேயே பாடுபட்டு உழைத்து முன்னுக்கு வந்தவர். அவருக்கு எந்த வேலை செய்வதிலும் சலிப்பு என்பதே கிடையாது. அவரது தளராத உள்ளமும் திடமான நம்பிக்கையுமேதான் இன்று அவர் நல்ல நிலைமையிலிருப்பதற்குக் காரணமாயிருக்கிறது. அவருடைய தந்தை அவருக்கு ஏராளமான பொருள்கள் வைத்து விட்டு இறக்கவில்லை. அவர் சொந்த முயற்சியாலேயே இன்று ஐம்பதினாயிரம் ரூபாய்க்குச் சொந்தக்காரராயிருக்கிறார்.

அவர் சொந்தமாக மளிகைக் கடைகூட ஒன்று நடத்தி வருகிறார். கடை வரவு செலவு கணக்குகளைத் தாமே பரிசீலனை பண்ணி விட்டு இரவு பத்து மணிக்கு மேல் வீட்டுக்குப் போவது வழக்கம். வழக்கம் போல அன்று கடையை மூடி விட்டு வீட்டுக்குப் புறப்பட்டார். அன்று பௌர்ணமி; நிலவு வெள்ளத்திலே மிதந்த ஒவ்வொரு வஸ்துவும், புதிய ஜீவகளை பெற்று ஜ்வலித்தது. கடையிலிருந்து முதலியார் வீட்டிற்கு ஒரு பர்லாங் தூரமிருக்கும். அவர் கொஞ்ச தூரம் நடந்து வந்தார். அங்கேதான் கார் ஸ்டாண்டு இருக்கிறது. அதைத் தாண்டி அப்பால் உள்ள ஒரு சிறு பாலத்தைக் கடந்து விட்டால் போதும், பாலத்தருகிலேதான் அவருடைய வீடு. அவர் கார் ஸ்டாண்டுக்கு வந்த போது அங்கே யாரும் இல்லை. யாரோ ஒரு பையன்தான் பனி கொட்டும் அந் நேரத்திலே வெறும் தரையில் படுத்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு கந்தல் துணியைப் போர்த்தியிருந்தான். இடுப்பில் கிழிந்து போன ஒரு கோவணம் மட்டும் கட்டியிருந்தான். நிலவு வெளிச்சத்தில் அவன் அங்கே படுத்திருந்தது முதலியாரின் கண்களுக்கு நன்றாகத் தெரிந்தது. "யாரோ பாவம், ஏழை. இந்தத் தாங்க

முடியாத குளிரில் படுத்துக் கொண்டிருக்கிறான். இவனைப் போல இன்னும் எத்தனை பேர் வீடு வாசல்களிலின்றித் தெருவில் அவஸ்தைப் படுகிறார்களோ?'' என்று நினைத்துக் கொண்டு மேலே நடந்தார். அங்கே படுத்திருந்த அந்த ஏழைப் பையன் வாஸ்தவத்தில் தூங்க வில்லை, சும்மா விழித்துக் கொண்டு தான் படுத்திருந்தான். பசி வயிறைக் கிள்ளும் போது தூக்கம் வருமா? அவன் ஒரு அநாதை; வீடு வாசல் இல்லை. தாய் தகப்பன் யாரென்று தெரியாது. நினைவு தெரிந்ததிலிருந்து பிச்சை எடுத்து வயிறு வளர்த்து வருகிறான். அன்று அவனுக்கு ஒரு காலணாக்கூட கிடைக்க வில்லை. அன்று கேட்டவர்களிட மிருந்தெல்லாம் 'இல்லை' என்ற ஒரே பதிலைத்தான் பெற்றான். ராத்திரி கார்ஷெட்டிற்குப் போனாலாவது ஏதாவது கிடைக்காதா வென்று வந்தான். பிரயாணிகள் யாரும் கண்ணில் படவில்லை. தன் பிரயாணத்தை ஆரம்பிக்கும் வரையிலும் இதே மாதிரி இன்னும் எத்தனை ஏமாற்றமோ! நேரமாகி விட்டதால் அங்கேயே படுத்துக் கொண்டான். இப்போது முதலியார் போகவும் காலடிச் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். யாரோ போவது தெரிந்தது. 'அன்றைய கடைசிப் பிச்சையை அவரிடம் கேட்கலாமே. ஒரு வேளை மனமிரங்கி காலணா, அரையணா கொடுக்க மாட்டாரா? கொடுத்தாரானால் அந்தச் சினிமாக் கொட்டகைக்குப் பக்கத்திலிருக்கும் வெற்றிலை பாக்குக் கடையில் வாழைப் பழமாவது வாங்கித் தின்னலாம்' என்று அவரிடம் ஓடி வந்தான்.

"ஐயா! காலணா இருந்தால் கொடுங்களேன். நேற்றுச் சாப்பிட்டது ஐயா! பசி பொறுக்க முடியவில்லை" என்று இரங்கும் பாவனையில் அவரிடம் கேட்டான். முதலியார் ஈவு, இரக்கம், தயை, தாட்சண்யம் எல்லாம் உடையவர்தான். ஆனால் அப்போது அவரிடம் சில்லரை இல்லை. எல்லாம் ரூபாயாகவும், நோட்டாகவும் தான் இருந்தன. ஆனால் அதை எல்லாம் அவனிடம் சொல்லியாக வேண்டுமா?

"போடா போ! உங்களுக்கு வேறே வேலை இல்லை."

"ஐயோ சாமி, பசி காதை அடைக்குது! ஒரு காலணு!"

"ஏண்டா, இல்லே என்ருல் போக மாட்டே! ராத்திரி பத்து மணிக்கு மேல் பிச்சை வேண்டுமாம், பிச்சை!" என்று அதட்டினர்.

அவர் கோபமாகப் பேசவும் பையன் பயந்து போய் மறு பேச்சுப் பேசாமல் அங்கேயே நின்று கொண்டான். கொஞ்ச தூரம் போனதும் அவர், "என்ன காரியம் செய்து விட்டோம். எப்படிக் கடுமையாகப் பேசி விட்டோம் என்று நினைத்தார். அவர் மனம் நிரம்ப வேதனைக்குள்ளாகியது. "சை, ஒரு ரூபாயில் என்ன குடியா முழுகிவிடப் போகிறது? நம்மிடம் எத்தனையோ ரூபாய்கள் வரும், போகும். பாவம்! அவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்து விட்டால்தான் என்ன?" என்று நினைத்தார். உடனே சட்டெனப் பின்னுல் திரும்பிப் பார்த்தார். அந்தப் பிச்சைக்காரப் பையன் கொஞ்ச தூரத்தில் போவது தெரிந்தது. அப்போது அவர் மனதில் மற்ருெரு எண்ணமும் எழுந்தது. அந்தப் பையனை தம் வீட்டிற்கே கூட்டிக் கொண்டு போய் சாப்பாடு போட்டு, தம் கடையிலேயே சேர்த்துக் கொண்டால் என்ன என்று எண்ணினுர். அவர் அவசரமாக நடந்து போகப் போக அந்தச் சிறுவனும் மறைந்து விட்டான். அந்த இடத்தில் இரண்டு மூன்று சந்துகள் பிரிகின்றன. அந்தச் சிறிய சந்து எதிலோ அவன் போய் விட்டான். இனி அவனை எங்கே தேடுவது?

கொஞ்ச நேரம் அவர் அங்கேயே நின்று கொண்டிருந்தார். பின்பு அங்கு நின்று கொண்டிருப்பதில் பிரயோசனமில்லையென்று வீட்டிற்குத் திரும்பினர். வீடு சேரும் வரையிலும் அந்த திக்கில்லாச் சிறுவனைப் பற்றியே நினைத்துக் கொண்டு போனர். அடுத்த நாள் அவனை எப்படியாவது தேடிக் கண்டு பிடித்துக் கடையில் சேர்த்துக் கொள்வது என்று உறுதி செய்து கொண்டார்.

அன்று இரவு தூங்கும் போது ஒரு கனவு கண்டார்:

'அவருடைய ஆஸ்தி முழுதும் களவு போய் விட்டது. கடையிலும் தீப்பற்றிக் கொண்டது. அவருடைய நண்பர்கள் முகம் கொடுத்துப் பேசாமல் பார்த்தும் பார்க்காததுபோல் போகிறார்கள். அவருடைய மனைவி மக்கள் சாப்பாட்டிற்கில்லாமல் திண்டாடுகிறார்கள். அந்தப் பரிதாபக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவர் முன்னால் கந்தல் துணியுடன் ஒரு சிறுவன் தோன்றிச் செல்கிறான்.'

கனவு கலைகிறது. திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறார்.

மனைவி பக்கத்தில் படுத்திருக்கிறாள். குழந்தை சுகமாக மஞ்சத்தில் தூங்குகிறது.

முதலியாருக்குத் தெய்வத்தினிடம் அதிக பக்தி உண்டு. "ஆண்டவனே! இனி இந்த மாதிரி துர்ச் செய்தி ஒன்றும் என் கனவில் வராமலிருக்க அருள் புரிய வேண்டும்" என்று பிரார்த்தனை செய்து கொண்டு படுக்கையில் படுத்துக் கொண்டார்.

ஒரு மாதம் கழிந்தது. முதலியார் இந்த முப்பது நாளும் அந்தப் பையனை ஊரெல்லாம் தேடினார். அவன் எங்கும் அகப்படவில்லை. கார்ஸ்டாண்டிலும், சத்திரத்திலும், சோம்பேறிகள் தூங்கும் மடங்களிலும் எங்குமே அவனைக் காணவில்லை. 'ஒரு வேளை இந்த ஊரை விட்டுப் போய் விட்டானுக்கும்' என்று நினைத்துக் கொண்டார்.

அவர் மனதில் மாத்திரம் ஏதோ பெருத்த தவறு செய்து விட்டதாகத் தோன்றியது. அநியாயமாக அன்னியரின் பணத்தைக் கொள்ளை அடித்துப் பிடுங்கிக் கொண்டதைப் போலிருந்தது அவருக்கு. அவருடைய மனம் சாந்தியற்றுப் போய் விட்டது. எப்பொழுதுமே அவர் அந்த ஏழைப் பையனை நினைத்துத் துக்கப்பட்டுக் கொண்டிருந்தார். அன்று காசு கொடுக்காமல் போனதால் ஒரு வேளை பசியினால் இறந்து விட்டானோ என்று எண்ணு

வார். அப்போது அவருக்குத் தாங்க முடியாத துக்கம் உண்டாகும்.

ஒரு நாள் கடையிலிருந்து வீட்டுக்குப் போகும் போது தெருவில் ஒரு கோடியில் பலர் கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள். அங்கே போய் விசாரித்ததில் யாரோ ஒரு சிறுவன் மீது வண்டி ஏறி விட்டதாகத் தெரிந்தது. என்ன ஆச்சரியம்! அதோ அந்தப் பிச்சைக் காரப் பையன்! ஒரு மாதமாக அவர் தேடிக் கொண் டிருந்த சிறுவன், அவன் வலது கால் துடையின் மீது வண்டி ஏறி கால் முறிந்து போயிருந்தது. ரத்தம் வெள்ளம் போல் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அவன் பிரக்ஞை தப்பிக் கிடந்தான்.

அவனைப் பார்த்தவுடன் முதலியார் நெஞ்சு பட பட என அடித்துக் கொண்டது. அவனை உடனே ஆஸ்பத்தி ரிக்கு எடுத்துக் கொண்டு போக வேண்டுமென்று கருதி னார். ஆனால் அருகிலுள்ளவர்கள், "அவனுக்குச் சாவு நெருங்கி விட்டது. அவனை எங்கு கொண்டு போனாலும் பிழைக்க மாட்டான்" என்றனர். அவன் கண்கள் சலனமற்றுப் போய் விட்டன. முகம் சவக்களை தட்டி விட்டது. முதலியாருக்கும் அவன் பிழைப்பான் என்ற நம்பிக்கை இல்லை.

துயரத்தோடு அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார். அந்தச் சிறுவன் கடைசித் தடவை யாக ஒரு முறையாகிலும் கண்ணைத் திறந்து தம்மைப் பார்க்க மாட்டானா வென்று எண்ணினார்.

அவனது உயிர் உடலை விட்டுக் கொஞ்சம் கொஞ்ச மாகப் பிரிந்து கொண்டிருந்தது. கடைசியில் மெதுவாக அவனது கண் இதழ்கள் விரிந்தன. அங்கு கூடியிருந்த அனைவரையும் ஒரு முறை கண்களைச் சுழற்றி நோக்கி னான். அவன் பார்வை முதலியார் மேல் பட்டதும் வேறு பக்கம் திரும்பவில்லை. அவன் என்ன நினைத்தானோ! அந்த மரண வேதனையிலும் ஒரு இள நகை அவன் முகத் திலே படர்ந்து மறைந்தது. கடைசியாக அவன் கண்கள் மூடின. அப்புறம் அவை திறக்கவே யில்லை.

முதலியாருக்கு இப்போது முன்பிருந்த மனக் கலக்கமும், குழப்பமும் இல்லை. ஒரு பெரிய க்ஷேத்தி ரத்தை முதல் முதலாகத் தரிசித்துப் பரவசமடைந்த பக்த னுடைய மனதைப் போல் சந்தோஷம் நிறைந்த சாந்தி அவர் உள்ளத்திலே குடிகொண்டிருக்கிறது.

சிற்பியின் மனைவி

ஆ. சுப்பையா

சேரநாட்டின் தலைநகரான வஞ்சி யென்பது அமராவதி நதிக் கரையிலுள்ள ஓர் அழகிய நகரம். அந்த நதிக் கரையில் கண்ணைக் கவரும் பூங்காவனங்களும், இனிய கனி தரும் பழந் தோட்டங்களும் இருந்தன. வெயில் காலத்தில், நகர மக்கள் இந்தத் தோட்டங்களில் உல்லாச மாகப் பொழுது போக்கிக் களிப்பது வழக்கம். கவிகள் இதை மனங்கொண்டமட்டும் பாடிப் புகழ்ந்திருக்கிறார் கள்.

இந்த அமராவதி நதியைக் கடக்க, ஒரு அழகிய சித் திர வேலைப்பாடுகளமைந்த, நீண்டதொரு மரப்பாலம் அந்தக் காலத்தில் இருந்தது. இது அந்த நகரத்துக்கே ஒரு அழியாப் பெயர் கொண்ட சிற்பச் செல்வமாக விளங்கியது.

திடீரென்று சேரநாட்டை ஒரு தரம் வீரசிம்ம பாண் டியன் படை யெடுத்து, தன்னுடைய படைகளுடன் வஞ்சிமா நகரத்தை முற்றுகையிட்டான். ஆனால் வஞ்சி நகரவாசிகள் எளிதில் விட்டுக் கொடுக்கவில்லை. அந்த அழகிய பாலத்தைக் கடந்து சென்று, தீரத்துடன் போராடி, எதிரிகளை துவம்சம் செய்தார்கள். இந்தப் பாலத்தை அழித்துவிட்டால், நகரம் பணிந்துவிடும் என்று எண்ணினான் பாண்டியன். ஒரு நாளிரவு அந்தக் கலைச் செல்வமான பாலத்தின்மேலே மரங்களை வெட்டிக் குவித்து எதிரிகள் தீவைத்தார்கள். பாலம் சில மணி நேரத்தில் தகர்ந்து விழுந்து, எரிந்து சாம்பலாயிற்று, அதன் தூண்கள் வெடித்து விழுந்த சத்தத்தைக் கேட்டு நகரவாசிகள் திடுக்கிட்டார்கள். ஆனால், இந்தப் பெரிய நஷ்டம் அவர்களது கோபத்தீயை அதிகமாக மூட்டியது. மிக உக்கிரமாகப் போராடி எதிரிகளை ஓட்டினர்.

பல வருஷங்கள் கடந்தன. பழய பாலத்தைப் போல வலிவும் வனப்பும் உள்ள மற்றொரு பாலத்தைக் கட்டிவிட வேண்டுமென்று வஞ்சிநகர வாசிகள் விரும்பினார்கள். அது அவ்வளவு எளிதாக முடியவில்லை; அமராவதி நதி அதற்கு இடங் கொடுக்கவில்லை. எந்தச் சிற்பியாவது தைரியத்துடன் முன்வந்து வேலையை ஆரம்பித்தால், பாதி வேலை முடியுமுன்பே, தாங்கு கட்டைகளையும் தூண்களையும் தண்ணீர் அடித்துக்கொண்டு போய்விடுவது வழக்கம். நாட்டின் பல பாகங்களிலுமுள்ள சிற்பிகள் இந்த வேலையைப் பூர்த்தி செய்ய முன்வர வேண்டுமென்று மன்னன் பறை யறைவித்தான். ஆனால், ஒருவராவது 'நான் முயல்கிறேன்' என்று முன்வரவேண்டுமே? இது முடிகிற காரியமில்லை யென்று எல்லோருக்கும் பயம்.

சில காலத்துக்குப் பிறகு முகில்வண்ணன் என்ற சிற்பியும் அவன் மனைவியும்—வஞ்சிநகரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அழிந்து போன பாலத்தை மிகக் கவனமாக அவர்கள் பார்த்தார்கள். அப்பால், அந்த இடத்துக்குப் பக்கத்திலேயே ஒரு வீட்டை அமர்த்திக்கொண்டு குடியிருந்தார்கள். ஒரு நாள் முகில்வண்ணன் ராஜசபைக்குச் சென்று, தான் வந்த காரியத்தைத் தெரிவித்தான். அரசனுக்கும் அவனுக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது:—

"இந்தப் பாலத்தைக் கட்டுவதில் ஏற்படும் கஷ்டங்களை நீ அறிவாயா?"

"ஆம், அறிவேன்; ஆனால் அவைகளைத் தீர்க்கவும் எனக்கு வழி தெரியும்."

"வேறே எங்கேயாவது இதுமாதிரி பெரிய கட்டிட வேலையை முடித்திருக்கிறாயா?"

"இதுவரையில் இல்லை."

"நீ இதைக் கட்டி முடிப்பாய் என்று எப்படி நம்புவது?"

"உங்களுக்கு ஒரு வாக்குறுதி அளிக்கிறேன். இந்த வேலையில் நான் தவறினால், என் உயிரையே அதற்குப்

பணயமாகத் தருகிறேன். பாலம் கட்டி முடிந்ததும், கீழே நாட்டப்பட்டிருக்கும் மரக் கால்கள் முதலியவைகளை அப்புறப்படுத்தும்போது, நான் மட்டும் பாலத்தின் நடுமத்தியில் நிற்பேன். பாலம் நிலை கொள்ளாமல் விழுந்தால், நானும் அதனுடன் விழுந்து, நசுங்கி உயிரை விடுவேன். இதுவே நான் தங்களுக்கு அளிக்கும் வாக்குறுதி,''

மன்னன் தலையை அசைத்தான். சிற்பியும் மகிழ்ச்சி கொண்டான். தன் திறமையை உலகத்துக்குக் காட்ட ஒரு நல்ல தருணம் வாய்த்தது என்பது அவன் மகிழ்ச்சிக்குக் காரணம். ஓடோடியும், தன் வீடு சென்று, தன்னை எதிர் பார்த்துக்கொண்டிருந்த காதல் மனைவி கலாவதியிடம் தனது நோக்கம் ஈடேறி விட்டதைத் தெரிவித்தான். இந்தப் பாலத்தைக் கட்டுவதன் மூலம் அவன் தனக்கே ஓர் அழியாத ஞாபகச் சின்னத்தையல்லவா அமைத்து விடுகிறான்? கலாவதி அடைந்த மகிழ்ச்சிக்கும் எல்லையில்லை.

வேலையும் ஆரம்பமாயிற்று. பழைய பாலம் நின்ற இடத்தில் புதிய பாலம் எழும்பியது. பழைய பாலத்தின் அறிகுறிகள் மறைந்தன. பாலத்தின் கண்களிலே மத்தியக் கண்ணை இணைப்பதுதான் சிரமம். அமராவதி நதி அங்கேதான் தன் முழு வலிமையையும் காட்டும். நீரின் வேகத்தை எதிர்த்து நிற்கும் சக்தி அந்தக் கண்ணின் இரு பக்கச் சுவர்களுக்கும் இருக்க வேண்டும். இல்லையானால், பாலத்தின் கதி அதோகதிதான். இந்த வேலையை முகில் வண்ணன் திறமையாகப் பூர்த்தி செய்து விட்டதைப் பார்த்துப் பார்த்து, மன்னனும் மற்றவரும் மகிழ்ந்தார்கள்; அவனைப் புகழ்ந்தார்கள்.

வேலை முடிந்து விட்டது. கீழே தாங்கலாக நிறுத்தப்பட்ட மரக் கால்கள், கட்டைகள், சாரக்கழிகள் முதலியவைகளை அப்புறப்படுத்த வேண்டியதுதான் பாக்கி. பாலத் திறப்பு விழாவுக்கு நாளும் குறிப்பிடப்பட்டது. வஞ்சிநகர வாசிகள் அன்றைய தினத்தை ஒரு பெரிய விழாவாகக் கொண்டாடத் திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால், அவர்களுடைய விருப்பம் நிறைவேற முடியாமல் ஓர் இடையூறு குறுக்கிட்டது.

மாலை நேரத்தில் முகில்வண்ணன் பாலத்தை நோக்கிச் சென்றான். மறுநாள் திறப்பு விழா நடக்கப் போகிறது. எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதே அவனது உத்தேசம். மத்திய வளைவின் மேலேறி நின்று கூர்மையாகக் கவனித்தான். எல்லாம் சரியாகவே யிருந்தன. ஆனால், திடீரென்று ஒரு விஷயம் அவன் கண்ணில் பட்டது; முகம் கறுத்தது. அவனது உடம்பிலுள்ள ரத்தமே குளிர்ந்து விட்டது. எல்லாம் வீணாயிற்று என்ற ஏக்கம் உண்டாயிற்று. திரும்பிப் பாராமல் வீட்டை நோக்கி ஓடினான். தன் புருஷனைப் புன்சிரிப்புடன் கலாவதி வரவேற்றாள். ஆனால், அவன் முகத்தில் கவலை பாய்ந்திருந்ததைக்கண்ட மனைவி திகைப்படைந்தாள்.

"உடம்புக்கு ஏதாவது அசௌக்கியமா?" என்று அவள் கேட்டாள்.

"ஒன்றுமில்லை" என்ற பதிலே வந்தது.

ஆனால், கலாவதியை ஏமாற்ற முடியுமா? அவள் வெகு எளிதில் தன் புருஷனின் கவலைக்குரிய காரணத்தைத் தெரிந்து கொண்டாள்.

"என் கவலையைத் தீர்ப்பது எளிதான காரியமல்ல" என்றான் சிற்பி.

"என் காதலின் வல்லமையை நீங்கள் அறிந்து கொள்ளவில்லை! அதற்கு இயலாதது எதுவுமில்லை" என்றாள் கலாவதி.

"எனது வேலை பூர்த்தி அடைந்து வெற்றி பெறுந் தருவாயில், கணக்கில் ஏற்பட்ட ஒரு சிறு பிசகினால், எல்லாம் குடி முழுகிப் போய்விட்டது. நாளை தினம் மரக்கால்களையும், தூண்களையும் அகற்றும்பொழுது, பாலம் தன்னிலையில் நிற்க முடியாமல் கீழே சாய்ந்துவிடும். அரசனுக்கு அளித்த வாக்குறுதிப்படி நானும் அத்துடன் விழுந்து மாளவேண்டியதுதான். என் வெற்றியும் மகிமையு மெல்லாம் தண்ணீரில் அமிழ்ந்து மூழ்கிவிடும்" என்று தீனக்குரலில் சொன்னான் சிற்பி.

"பாலம் ஆற்றில் மூழ்கலாம். ஆனால், நீங்கள் மூழ்க, நான் சம்மதியேன். மன்னனிடம் மண்டியிட்டு உங்களுக்கு விடுதலை வாங்கி வருவேன்" என்றாள் கலாவதி.

"அப்படியே மன்னன் எனக்கு உயிர்ப் பிச்சை அளித்தாலும், நான் உயிர் வாழப்போவதில்லை. மானமிழந்தபின் வாழ்வது ஒரு வாழ்வா ?" என்றான் சிற்பி.

"அப்படியானால், உங்களுக்கு உயிரும் கௌரவமும் ஒருங்கே கிடைக்கும்" என்று உறுதி கூறினாள் கலாவதி. தன் உயிரைப்போன்ற காதலனை இழக்க நேரிடுகிறதே என்ற துயரத்தில்தான் தன் மனைவி இப்படி மனங்கலங்கிப் பேசுகிறாள் என்று எண்ணினான் முகில்வண்ணன். அவளுடைய உள்ளத்திலே எண்ணிய எண்ணத்தை அவன் எப்படி அறிவான் ?

நள்ளிரவும் வந்தது. கவலையில் ஆழ்ந்த முகில்வண்ணன் தூக்கத்தில் மூழ்கி விட்டான். இதுதான் சமயம் என்று, கலாவதி மெள்ளத் தன் படுக்கையை விட்டெழுந்தாள். ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தாள். ஒரே மையிருட்டு. இடையிடையே மின்னல்கள் வானத்தில் தோன்றி மறைந்தன. எங்கும் நிசப்தம். அமராவதி நதியின் ஆரவாரம் மட்டுமே ஒலித்தது. கலாவதி தன் கையில் ஒரு கொள்ளிக் கட்டையை எடுத்துக்கொண்டாள். உடம்பை ஒரு கறுத்த கம்பளியால் மூடிக்கொண்டு, தைரியமாக வெளியேறினாள். அவள் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. ஆனால், காதலனது உயிரைக் காக்கத் துணிந்த காரிகைக்கு வேறு எந்தப் பயமும் ஒரு பொருட்டாகத் தோன்றுமா ?

புதிய பாலத்தை அவள் அடைந்தாள். திடீரென்று ஒரு பேரிடி ஒலித்தது. பாலத்தைத் தாங்கி நின்ற மரக் கால்கள் அதிர்ந்தன. அந்தக் கொள்ளிக் கட்டையைக் கையால் வீசி நெருப்பை எரிய விட்டாள். நன்றாக எரிய ஆரம்பித்ததும், பாலத்தைத் தாங்கி நின்ற கட்டைகள் மீதும் நெருப்பு வைத்தாள். அவளுக்குத் துணையாய்க் காற்றும் வீசியது. தீ பரவிப் பிடித்துக் கொண்டது. சிறிது நேரத்தில் பாலம் முழுவதும் ஒரே ஜோதியாக

விளங்கியது. அவள் திரும்பி வீடடைந்தாள். சிற்பி இன்னும் தூக்கத்திலேயே ஆழ்ந்திருந்தான். சில நிமிஷ நேரத்தில் வெளியே ஜனங்கள் ஓடுவது கேட்டது. கோவில் மணிகள் ஓலமிட்டன. இடிந்து விழுந்த பாலத்தின் பேரொலி, பூமியை அதிரச் செய்தது. முகில்வண்ணன் திடுக்கிட்டெழுந்தான். பக்கத்தில் கலாவதி நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய காரியம் வெற்றி யடைந்துவிட்டதல்லவா? சிற்பி வெளியே எட்டிப் பார்த்தான். விஷயம் விளங்கி விட்டது. உள்ளுக்குள்ளே மகிழ்ச்சி பூத்தது. தன் மனைவியின் பிரார்த்தனையைக் கேட்டு ஏதோ தெய்வந்தான் மனமிரங்கியதாக எண்ணினன்.

வஞ்சிநகர வாசிகள் அவ்வாறு கருதவில்லை, இடியும் மின்னலுமே இந்த அழிவு வேலையைப் பூர்த்தி செய்ததாக எண்ணினர்கள், வெற்றி மாலை சூடும் தருவாயில் சிற்பியின் வேலை பாழாய்ப் போய்விட்டதே என்று அவர்கள் அவனுக்கு அனுதாபப் பட்டார்கள். மன்னன் இம்முறை இதை ஒரு பெரிய நஷ்டமாகக் கருதவில்லை. ஆற்றல் மிக்க ஒரு சிற்பி அருகிலேயே இருக்கிறன் என்ற தைரியம் அவனுக்கு. அவனுடைய நம்பிக்கை வீண்போகவில்லை. அடுத்த வருஷம் அதே தினத்தன்று முகில்வண்ணன் கட்டிய புதுப் பாலத்தை அரசன் மிகுந்த ஆடம்பரத்துடன் திறந்து வைத்தான். அவன் அளித்த பெரிய விருந்தில் சிற்பிக்கு விசேஷ கௌரவங்களும் பரிசுகளும் அளிக்கப்பட்டன. அவன் மனைவி—அவனுடைய உயிரையும் மானத்தையும் காப்பாற்றிய கலாவதி—மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினள்.

நூற்றுக்கணக்கான வருஷங்கள் வரை, அன்று முகில்வண்ணன் கட்டிய பாலம் அப்படியே இருந்தது. அமராவதி நதியின்மீது அது கம்பீரமாக நின்று கொண்டிருந்ததைப் பார்த்து வஞ்சிநகர மக்கள் முகில்வண்ணனை வெகுகாலம் வரை பாராட்டினர்கள். ஆனல் அவனுக்கு ஒரு கலாவதி மட்டும் கிடைத்திராவிட்டால்......? அந்தத் 'தேவ ரகஸ்யத்தை' யார் அறிவார்கள்?

என் தீபாவளி

கே. எம். ஷெரீப்

1

“தீபாவளி! தீபாவளி!!” இப்படி எல்லோருடைய வாய்களும் உச்சரிக்கத் தொடங்கி விட்டன, தீபாவளி வர ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே. நளினவும் இவர்களுக்கிடையே வாழும் மனுஷிதானே? என்னை நச்சரிக்கத் தொடங்கி விட்டாள்: “நீங்கள் தீபாவளிக்கு என்ன புடவை வாங்கப் போகிறீர்கள்” என்று. நான் என்ன பதில் சொல்லுவது? மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம். கடை கணக்குப்பிள்ளை வேலை. அவளுக்கும், எனக்கும் குடும்பச் செலவிற்கே போதாத அந்தச் சம்பளத்தில் பட்டுப் புடவையா என்னால் வாங்க முடியும்? அதுவும் ஒவ்வொரு பொருளும் ஒன்றுக்குப் பத்தாக விலை ஏறி விற்கும் இந்தக் காலத்தில்.

“ஆகட்டும் நளினா! உனக்கு நல்ல புடவையாக வாங்கித் தருகிறேன்,” என்று சொல்லிக்கொண்டே வந்தேன். தீபாவளித் தினமும் நெருங்கிவிட்டது. ஊரெல்லாம் துணி மணி வாங்கி விட்டார்கள். நான் ஒருவனே பாக்கி. ஏன்! என்போன்ற தரித்திரத்தில் உழலும் சில தொழிலாளிகளும் பாக்கி இருந்திருக்கலாம்.

அன்று வீட்டிற்குச் சாப்பாட்டிற்கு வந்திருக்கையில், நளினா ஒரு பட்டுப் புடவையை என்னிடம் காட்டினாள். நான் ஆச்சர்யத்தால் ஸ்தம்பித்துப் போய்விட்டேன். இந்த யுத்த காலத்தில் இவ்வளவு உயர்ந்த ரகப் புடவையை சாதாரணத் தொழிலாளியால் வாங்க முடியாதே என்ற நினைப்புடன் “இது ஏது நளினா?” என்று வியப்புடன் கேட்டேன்.

" இதுவா ? எல்லாம் உங்களைப்போல் மாதம் பதினைந் திற்கும், இருபதுக்கும் ஒரு 'ஆபீஸி'ல் குமாஸ்தாவாக வேலைபார்க்கும் ஒருவர் தம் மனைவிக்கு வாங்கி இருக்கும் புடவைதான் ; உங்களால்தான் ஒன்றும் முடியாது!" என்று கடிந்து கூறினாள்.

அவள் சொல்லுவதிலும் உண்மை இருக்கிறது. நளினா எனக்கு மனைவியாகிக்கிட்டத்தட்ட நான்குவருடங் கள் ஆகிவிட்டன. இன்றுவரை அவளுக்கு நான் ஒரு உயர்ந்த ரக நூல் புடவைகூட வாங்கிக் கொடுத்தது கிடை யாது. 'அடுத்த வீட்டில் வாழும் ரகுவும் என்னைப் போன்ற குமாஸ்தா தானே! அவன் மட்டிலும் தன் நாயகிக்கு அழகிய புடவையும், ரவிக்கைகளும் அடிக்கடி வாங்கிக் கொடுக்கையில், நான் மட்டிலும் வஞ்சகமாகத் தானே நடந்து கொள்ளுகிறேன்? இதுதான் நளினாவின் உள்ளத்தில் உருத்திக் கொண்டிருந்த விளங்காத கேள்வி.

பாவம்! அவளுக்கு விளங்குமா? அவன் "வேண் டாம்! வேண்டாம்!!" என்று வெறுத்து ஒதுக்கினாலும் மேல் வரும்படி இரு கைகளும் நிறைய நோட்டு நோட் டாக வந்து குவியும் இரகசியம்?

அன்று இரவு நான் வீட்டிற்கு வரும்பொழுது நளினா விற்குப் புடவை ஒன்று வாங்கினேன். அது ஏழைகளுக் காக குறைந்த விலையில் விற்கப்படும் 'ஸ்டாண்டர்டு' துணி! அதுவும் ஐந்து ரூபாய், ஏழு அணா, பதினொரு தம்படி" என்று விலை போடப்பட்டிருந்த புடவைதான்.

வீட்டிற்குள் சப்தம் செய்யாமல் நுழைந்து புடவை யை ஒரு இடத்தில் வைத்துவிட்டுச் சாப்பிட அமர்ந்தேன். படுக்கையில் காட்டி அவளை மகிழ்விக்க வேண்டும் என் பது என் ஆசை!

"ஏன், புடவை வாங்கி வரவில்லையா?" என்றாள் நளினா.

"இல்லை, சாதம் போடு!" என்றேன் நான்.

"ஆமாம் நான் ஒரு காரியம் சொன்னால்தான் உங்

கள் காதில் படாதே! தீபாவளிக்கு நாளை ஒருநாள் தானே குறுக்கே இருக்கிறது!'' என்றாள் நளினா.

நான் வெறுங்கையுடன் வந்திருந்தால் சற்று தணிந்து போய் இருப்பேன். ஆனால் புடவையுடன் வந்திருந்தேன் அல்லவா? சற்று விரைப்பாகவே பதில் சொன்னேன். ''மனிதன் எப்படி கஷ்டப்பட்டு வந்திருக்கிறான் என்பது உனக்குப் புரிவதே இல்லை. சாப்பாட்டிற்குப் பின் உன் விவகாரத்தை யெல்லாம் வைத்துக் கொண்டால் என்ன?'' என்று.

அதற்குமேல் நளினா ஒன்றும் பேசவில்லை. சாதம் பரிமாறினாள். சாப்பிட்டான பின் படுக்கைக்குச் சென்றேன். நளினா தன் வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு வந்து சேர்ந்தாள். அவள் வதனம் வழக்கத்திற்கு மாறாக சோபை யற்றிருந்தது. ''என் நளினா! என்ன வருத்தம்?'' என்று கேட்டுக் கொண்டே புடவை பொட்டலத்தை அவளிடம் நீட்டினேன். மிக ஆவலுடன் ''இதனால் தான் துரை இன்று கோப சொரூபராய் விளங்கினாரோ?'' என்று சிரிப்புடன் கேட்டுக் கொண்டே பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தாள். புடவையைப் பார்த்ததும் அவள் முகம் சுருங்கி விட்டது. கண்களில் நீர்வடிய, ''இது என்ன?'' என்ற கேள்வியை வீசிய வாறு சேலையைக் கீழே போட்டு விட்டு விர்ரென்று சென்று விட்டாள். எனக்குக் கோபம் பிரமாதமாக வந்துவிட்டது. எழுந்து சென்று நான்கறை கொடுக்க வேண்டும் போல் தோன்றிற்று. ஆனால் ஏனோ அசை வற்றுக் கல்லுப் பிள்ளையார் போல் வீற்றிருந்தேன். என் சிந்தனை எங்கெல்லாமோ அர்த்தமில்லாமல் சஞ்சரிக்கத் தொடங்கிற்று. மனம் போன போக்கில் அறிவைச் செல்ல விட்டு விட்டு, சிந்தனா லோகத்தில் ஊர்ந்து கொண்டிருந்தேன்.

2

தீபாவளிக்கு முன் தினம்!

இரண்டு மிராசுதார்கள் சந்திக்கின்றனர்.

முதல் மிராசுதார் :—என்ன, தீபாவளி வருகிறதே!

இரண்டாவது மிராசுதார் :— இந்த வருடம் எள்ளு தெளித்ததிலே நல்ல பலன். தானியங்க ளெல்லாம் விலை யேறி நிற்கும் இந்த நாளையில் பணத்திற் கென்ன குறை? நல்ல விதமாகத் தீபாவளியைக் கொண்டாட வேண்டியது தானே!

அடுத்த படியாக இரண்டு வியாபாரிகளின் சந்திப்பு:

"என்ன அண்ணுச்சி! தீபாவளி வருகிறுப் போல் இருக்குதே?"

"வரட்டுமே! கொள் முதல் செய்த சாமான்களெல் லாம் ஒன்றுக்குப் பத்தாய் விற்று முதலாகும் போது, தீபாவளியை ஆடம்பரத்துடன் கொண்டாட வேண்டியது தான்!"

இரண்டு சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்:

"என்ன சார், தீபாவளி வந்தாலும் வந்தது எவ்வளவு தொல்லை பாருங்கள். பெண்டுகளுக்குப் புடவை வாங்க வேண்டுமாம்........."

"என்ன, நீர் கூட அழத் தொடங்கி விட்டீரே! சர்க் காரில் கொடுக்கிற யுத்த 'அலவன்ஸ்' போதாதென்று தான், வியாபாரிகள் வந்து 'ஸ்பெஷல் அலவன்ஸ்' கொடுத்து வருகிறுர்களே—ஆதாயத்திற்கு மேல் ஆதாயம் இருக்கையில் வீட்டில் வேண்டியதை வாங்கிக் கொடுக்க வேண்டியதுதானே!"

"அதற்குச் சொல்லவில்லை. இந்தப் பெண்டுகள் நமக்கு ஓய்வு தர விரும்புவதே இல்லை. இப்போது பாருங்கள். 'ஆபீஸி'லிருந்து வந்ததும் வராததுமாய் என்னையும் கடைத் தெருவிற்கு இழுத்தடிக்கிறுர்கள். இதைத்தான் சொல்ல வந்தேன்"

"அப்படிச் சொல்லும் பணமுடையைத் தான் சொல்ல ஆரம்பித்து விட்டீராக்கும் என்று நினைத்தேன்."

சாஸ்திரிகள் இருவர்:

"என்ன குப்பு தீட்சதரே! எங்கே இத்தனை அவசரமாக?"

"தீபாவளியோன்னோ! ஜவுளி கடைக்குப் புறப்பட்டேன்."

"ஏன், இந்த வருஷந்தான் முகூர்த்தம் ஏதேஷ்டமாயிருந்ததேங்காணும்?"

"முகூர்த்தத்தில் கிடைத்ததெல்லாம் 'பத்தாறு' ஜோடிகள் தானே? செட்டி கடையில் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக நல்ல புடவை எடுத்து வரலாம் என்று கிளம்பினேன்."

"சரிதான்; எங்கே, ரூபாயை எடுத்துக்கொண்டு தான் கடைத் தெருவுக்குப் புறப்பட்டீரோ என்று கேட்டேன்"

ஒரு கடை. இரவுபத்து மணி. சம்பள ஆட்களெல்லாம் வீட்டிற்குச் செல்ல எண்ணி கடை எடுத்து வைக்க ஆரம்பம் செய்கிறார்கள். கல்லாவிற்குப் பக்கத்திலே, திண்டில் சாய்ந்துகொண்டு மெத்தைமீது வீற்றிருக்கும் முதலாளி இதைக் கவனித்து விடுகிறார்.

"என்னப்பா! தீபாவளி சமயத்தில் கூடவா இப்படி அவசரப்பட்டுக் கடை சாத்தவேண்டும்? கொஞ்ச நேரந் தான் போகட்டுமே! அசந்து மறந்து யாராவது சாமான் வாங்க வரமாட்டார்களா?"

எல்லா வேலை யாட்களும் அப்படியே உட்கார்ந்து விட்டார்கள். இதுதான் சமயமென்று ஒருவன் முதலாளியை நெருங்கித் தயங்கிக் கொண்டே சம்பளம் கேட்கிறான்.

"சம்பளத்திற்கு இப்பொழுது என்ன அவசரம்! பிறகு வாங்கிக் கொள்ளக் கூடாதா?"

"நாளைக்குத் தீபாவளி, வீட்டிற்குத் துணி மணி வாங்க வேண்டும்."

"இந்த மாதத்தில் உன் பற்று என்ன?"

"ஐந்து ரூபாய் எழுணு"

"போக பாக்கியை வாங்கிக்கொண்டு கணக்கில் எழுதிவிடு"

"அடுத்த மாதத்தில் பாக்கியைப் பிடித்துக் கொள்ளுங்கள். இப்பொழுது தீபாவளிச் செலவிற்கு........."

"உன் தொண தொணப்புத்தான் எனக்குத் தெரியுமே! ஒவ்வொருவருக்கும் அதிகப் பற்றில் கொடுத்துக் கொண்டிருக்க இங்கே என்ன கொட்டியா கிடக்கிறது?"

அதற்குமேல் எதிர்த்துச் சொல்ல அவனுக்கேது தைரியம்? பதில் பேசினுல் அடுத்தநாள் அவனுடைய இடத்திற்கு ஒரு புதிய ஆள் வந்துவிடுவான் என்பது அவனுக்குத் தெரியாதா? சில அணுக்கள் குறைய பத்து ரூபாயை கையில் பெற்றுக் கொண்டான். வாய் மட்டிலும் மௌனமுற்றிருந்ததே தவிர, மனம், "அடபாவி! இந்த வருடந்தானே இருபதினுயிரம் ரூபாய்க்கு அதிகமாக உபரி லாபம் கணக்குக் கட்டினேன். கொட்டியா கிடக்கிற தென்கிருயே வாய் கூசாமல்" என்று புழுங்கச் செய்தது.

3

சிந்தனை லோகத்திலிருந்து கீழிறங்கினேன். நளினு கோபத்தோடு சிறிது தூரத்தில் தரையில் அயர்ந்து தூங்கிப் போய் இருந்தாள். அவளால் தூக்கி எறியப்பட்ட புடவை கீழே அலங்கோலமாகக் கிடந்தது. கடைத் தொழிலாளியாகிய என்னைத் தவிர பாக்கி எல்லோரும் சந்தோஷமாகக் கொண்டாடும் இத் தீபாவளியில் நான் மட்டிலும் துயரம் அனுபவிக்க வேண்டியவன் தானு? யாரோ ஒரு கவி, "உழைப்பவர்க்கே இவ்வுலகம்" என்று சொல்லி இருக்கும்பொழுது ஒரு நாளைக்குப் பதினெட்டு மணி நேரம் உழைக்கும் நான் உழைப்பாளி இல்லையா? எனக்கு மட்டிலும் ஏன் இவ்வுலகமும், அதில் நிலவும் இன்பமும் சொந்தமில்லாமல் போக வேண்டும்? நளினு என்ன கனவு கண்டு கொண்டு படுத்திருந்தாளோ! தூக்கத்தில் புரண்டு படுத்தாள். அவள் வதனம், உதட்டில் அரும்பும் குறு நகைப்பால் மலர்ந்து விளங்கிற்று. என்ன

கனவு கண்டிருப்பாள்?............நானும் அவளும் நல்லுடை தரித்து சந்தோஷமாக தீபாவளி கொண்டாடுவதாகத் தானே கனவு கண்டு மகிழ்ந்திருப்பாள்? இல்லாவிட்டால்—வேறெதாவது துயரமான கனவு கண்டிருந்தால், அவள் அதரம் ஏன் இத்தனை குறுநகை கொள்ளுகிறது?...........

மெதுவாக எழுந்து அவள் பக்கம் சென்றேன். அவள் மலர்போன்ற தேகத்தில் இரண்டு தரம் என் கைகள் ஒற்றி எழுந்தன. நளினு விழித்தெழுந்தாள்.

"ஏன், இன்னும் நீங்கள் தூங்கவில்லை? காலையில் எழுந்து கடைக்குச் செல்ல வேண்டாமா?" என்று கனிவுடன் கேட்டாள்.

"இல்லை நளினு! நாளைக்குத் தான் தீபாவளியாயிற்றே. மேலும் உன் ஒருவளை திருப்தி செய்ய இயலாத இந்த உத்தியோகம் எனக்குப் பிடிக்கவில்லை. இனி நான் கடைக்குப் போக மாட்டேன்" என்றேன்.

நளினு திடுக்கிட்டு விட்டாள். "என்ன, கடைக்குப் போகப் போவதில்லையா, அப்படியானல் சாப்பாட்டிற்கு வழி?"

"வேலை இல்லை என்ருல் சாப்பாட்டிற்கு வழியில்லை என்பதை உணர்ந்த 'நீ' தான் நான் வாங்கி வந்த புடவையைப் பிடிக்கவில்லை என்று தூக்கி எறிந்தாயோ?"

"பிசகுதான்! உண்மையிலேயே நான் செய்தது பிசகுதான்! எனக்குப் புடவை பிடித்திருக்கிறது. நான் இனி எதற்கும் கோபித்துக் கொள்ளவே இல்லை. வீணுக உடம்பை அலட்டிக் கொள்ளாதீர்கள். எனக்குப் புடவை பிடிக்கவில்லை என்பதற்காக இத்தனை நேரம் தூங்காமல் யோசித்துக் கொண்டே இருந்தீர்களா?"

"பின்! 'நீ' கோபத்தோடு இருக்கையில் எனக்குத் தூக்கம் வருமா?"

"ஒகோ! அதுதான் யோசித்து, யோசித்து உத்தியோகத்தை இழக்க முடிவு கட்டினீர்களோ?..........."

அவளும் சிரித்தாள். நானும் சிரித்து விட்டேன்.

மறுநாள் எங்கள் தீபாவளியில் சந்தோஷம் ஆகுதி கொள்ளவில்லை என்று சொல்ல முடியுமா? ஆனால் இதைப்போல் திண்டாடும் ஏழைகளின் தீபாவளியில் சந்தோஷம் தாண்டவமாட இன்னும் எத்தனை வருடங்கள் பொறுத்திருக்க வேண்டுமோ?

தங்கம்மா

ஆர். திருஞானசம்பந்தம்

1

நல்லாசாமிக் கவுண்டரைப் பார்ப்பதென்றால் எனக்கு எப்போதுமே அளவற்ற மகிழ்ச்சி ஏற்படுவது வழக்கம். வேறு யாரிடத்தில் பேசிக் கொண்டிருந்தாலும் அத்தனை உற்சாகமும், குதூகலமும் என் ஏற்படுவதில்லை என்பதைப் பற்றி நானும் பலதரம் யோசித்திருக்கிறேன். ஆனால் நாளது வரை அந்தச் சந்தேகம் தீர்ந்த பாடில்லை. அதென்னவோ கவுண்டரைத் தூரத்தில் கண்டாலே ஒரு உவகை உள்ளத்தில் பிறக்கிறது. அவரோடு பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரிவதில்லை. இத்தனைக்கும் அவர் ஒரு எம்.ஏ.யோ அல்லது பி.ஏ. ஹானர்ஸ்ஸோ அல்ல. திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியாரோடு தகராறு பண்ணிக்கொண்டு, காடு காடாக ஒளிந்து திரிந்து, எப்படியோ கையெழுத்து மட்டும்தான் போடக் கற்றுக்கொண்டார். இப்போது தன்னை ஒரு தற்குறி என்று சொல்லிக்கொள்ளத் தயங்குவதில்லை! "இந்தக் கை நாட்டுக்கு என்ன அப்புனு தெரியும்? நீ ஏதாச்சும் சொன்னாக் கேப்பமிண்ணு இருந்தா, எம் வாயைப் புடுங்கி அலக்காட்றயே" என்று சிரித்துக்கொண்டே சொல்லுவார். ஆனால் எனக்கென்னவோ அவர் பேச்சில் தனி இன்பம் இருப்பதாகவே பட்டது. அவர் பேசிக்கொண்டிருந்தால் விடிய விடியக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் என்று நான் சொல்வேன்.

நல்லசாமிக் கவுண்டர் இதைக் கேட்டு என்ன எண்ணினர் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஸ்ரீமதி பார்வதி பி.ஏ.க்கு கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை என்பது எனக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். ஸ்ரீமதி பார்வதி

பி.ஏ. பலதரம் என்னிடம் இதைப் பற்றி வெளிப்படையாகச் சொல்லியிருக்கிருள். மனதிற்கு மயக்கம் தரும் மாலை வேளைகளையும், அருமையான நிலா இரவுகளையும், அமைதியான காலை நேரங்களையும் கவுண்டரோடு பேசிப் பேசியே பாழ்படுத்தி விடுகிறேன் என்பது ஸ்ரீமதி பார்வதி பி.ஏ.யின் நினைப்பு, சரிதான், இந்தப் பார்வதியோடு பி.ஏ. யையும் என் விடாமல் சேர்த்துக்கொண்டே வருகிறேன் என்ருல் ஏ.பி.ஸி.டி. தெரிந்த பையன் கூட நல்லசாமிக் கவுண்டரைப் போன்ற 'கைநாட்'டுகளோடு பேசுவது ரொம்ப அவமானம் என்பது என் மனைவி ஸ்ரீமதி பார்வதி பி.ஏ.யின் ஆணித்தரமான அபிப்பிராயம்! ஆனல் எனக்கல்லவா தெரியும் கவுண்டரின் அருமை பெருமை. அரும் பாடு பட்டு பி.ஏ. பட்டத்தைப் பெற்றுவிட்ட பார்வதிக்கு அது தெரியவா போகிறது?

2

'பொன் விளையும் பூமி' என்று சொல்வது நல்லசாமிக் கவுண்டர் தோட்டத்துக்குத் தான் நூற்றுக்கு நூறு பொருந்தும். தங்கம் போட்டால் தங்கம் எடுக்கலாம். அவர் காட்டு மண் வாக்கே அப்படி. அதோடு நல்ல கைராசியும் அவருக்கு உண்டு. அவர் 'தொட்டது துலங்கும், வைத்தது விளங்கும்' என்பதில் எல்லோருக்குமே நம்பிக்கை உண்டு.

முறுக்கி விட்ட மீசையையும் இயற்கையாகவே சிவந்த அவர் கண்களையும் பார்த்தால், ரொம்ப முன்கோபி போலத் தோன்றும். சில சமயங்களில் படபடப்பாகவும் பேசிவிடுவார். நீக்குப் போக்குத் தெரியாதவனே என்று சந்தேகம் கூட வரும். ஆனல் பெரிய விரோதியிடம் கூட, "அண்ண, என்னமோ ஔறுனதை மனசிலே வைச்சுக்காதீங்க. இண்ணைக்குக் கட்டாயம் நம்ம வளவுக்கு வந்து கை நனைக்காமே போகப்படாது. ஒரு வாய் நீங்க உங்காமே போனு எம் மனசு கேக்காது" என்பார். அந்த அன்பு அழைப்பை மீற யாருக்குமே துணிவு வராது.

இப்பேர்ப்பட்ட நல்ல மனிதனை ஒரு தீராக்குறை சதா வாட்டிக்கொண்டே இருந்தது. உண்ணும்போதும் உறங்கும்போதும் அவரை அந்த வேதனை கொஞ்சம் கொஞ்சமாக அரித்துத் தின்று கொண்டே வந்தது. அடடா என்ன பரிதாபம்!

'பாழும் கடவுளுக்குக் கண்ணில்லை' என்று தூற்றுவதைக் கேட்கிறோம்! அப்போதெல்லாம் நாம் என்ன நினைக்கிறோம்? 'கடவுளாவது, கண்ணற்ற விதமாக நடப்பதாவது! எல்லாம் நாமாகச் செய்துகொண்டு வீண் பழியைக் கடவுள்மேல் போடுகிறோம்' என்றுதான் எண்ணுகிறோம். ஆனால், நல்லசாமிக் கவுண்டருக்கு ஏற்பட்ட துர்ப் பாக்கியத்தை நினைத்தால் நம்மைப் படைத்த பிரமனிடமே அசாத்தியக் கோபம் வரத்தான் செய்கிறது. பாவம், தன்னுடைய மகளைப் பற்றி நினைக்கும் தோறும் கவுண்டர் உள்ளம் கலங்கும்.

கவுண்டருக்கு ஒரே ஒரு செல்ல மகள். வயசு பதினாறுதான் ஆகிறது. ஆனால் அழகு அவளிடம் பரிபூரணமாகப் பூத்திருந்தது. 'கரு கரு' என்று இடை வரை நீண்டு தொங்கும் கூந்தலைக் கொண்டை போட்டு மல்லிகையோ, ரோஜாவோ கொத்தோடு சொருகியிருப்பாள். வரிந்து கட்டிய மாராப்புச் சேலையோடு திடுதிடென்று தான் எந்தக் காரியத்தையும் செய்வாள். ஒப்புக்குச் செய்யும் வேலை யொன்றும் அவளுக்குப் பிடிக்காது. 'எங்க தங்காயா இல்லாட்டி எங்களுக்குப் பொளுதே போவாது' என்று ஊர்ப் பெண்கள் எல்லாரும் சொல்வார்கள்.

அனைவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டிருந்தாள் தங்கம்மா. நொடிக்கு நூறுதரம் கவுண்டடர், "தங்கம்மா! தங்கம்மா!" என்று கூப்பிட்டுக் கொண்டேதான் இருப்பார். சுண்ணாம்பு முதல்கொண்டு, தங்கத்தின் கையில் வாங்கிக் கொண்டால் தான் கவுண்டருக்குத் திருப்தியாயிருக்கும்.

ஆனால் தங்கம், தன் அருமைத் தந்தையிடமோ மற்ற ஆருயிர்த் தோழிகளிடமோ ஒன்றும் பேச முடியாதவளா

யிருந்தாள். அவள் மனத்தை நீண்டு விரிந்த கருங்கண்கள் வழியாகத் தான் காட்ட முடிந்ததே யொழிய வாய் திறந்து அவளால் ஒன்றும் சொல்ல முடியாது. இதனல் பெற்ற மனம் மட்டுந்தாஞ தவித்துக் கொண்டிருந்தது?

மத்தியான வேளைகளில் வீட்டிலிருக்க எனக்குப் பிடிக்காது. அதுவும் வெயிலின் வேகம் ஏற ஏற என்னவோ மாதிரி இருக்கும். நல்லசாமிக் கவுண்டர் தோட்டத்துச் சாலையோரம் ஒரு கருவேலந் தோப்பு உண்டு. மரங்கள் குடை பிடித்தாற்போல குவிந்திருக்கும். அதன் நிழலில் பசும் தென்னங் தடுக்கை விரித்து உட்கார்ந்துகொள்வேன். படுத்தாலும் சுகமாகத் தூக்கம் வந்து விடும்.

சாதாரணமாக அந்த வேளையில் தான் கவுண்டருக்கும் ஒய்வு. என்னென்னவோ பேசிக் கொண்டிருந்தாலும் கடைசியில் அவருடைய பெண்ணின் விஷயத்தில் தான் போய் நிற்கும் பேச்சு.

'என்னத்தை அப்புனு பண்றது. நீ எரக்கப்பட்டு என்னப்பா ஆவும்? நாம் கும்பிட்ட சாமிகளுக்கு அந்த எரக்கம் வல்லையே! நான் போவாத கோயிலுண்டோ?' என்று கவுண்டர் கேட்கும்போது நம்மை அறியாமலேயே துக்கம் உண்டாகும். தங்காயாளைச் சாதாரணமாகப் பார்க்கிறவர்கள் அவள் வாயற்றவள் என்பதைக் கண்டு கொள்ளவே முடியாது. எப்போதும் சிரித்த முகத்துடன் தான் இருப்பாள். அவள் என்னைக் காணும் போதெல்லாம் வாய் நிறையச் சிரிப்புடன் தான் வரவேற்பாள். அவள் அழகிய கண்கள் என்னென்னத்தையோ பிரதி பலிக்கும். ஆனல், பாவம் பேச்சு ஒன்றும் தான் வெளிவராதே.

"அப்பா தம்பி" என்று கவுண்டர் உரிமை பாராட்டித்தான் எப்போதும் என்னைக் கூப்பிடுவார். ஊரில் எங்கள் இருவர் குடும்பத்திற்கும் ரொம்ப ரொம்பத் தொடர்பு உண்டு. ஆகையால் வீட்டுப் பெண்களும் முறை சொல்லித்தான் அழைப்பார்கள்.

"இதோ, உங்க அண்ணன் வந்திட்டானே. நீ சும்மா நிக்கறயே தங்கம்" என்று கவுண்டர் சொல்லிவிட வேண்டியதுதான் பாக்கி; உடனே தங்கம் ஓடிப்போய் நீர் மோரோ பானகமோ கொண்டு வந்து விடுவாள்.

தங்கம் தான் எங்கள் மனதை நன்கு தெரிந்து கொண்டாளே தவிர, நாங்கள் யாருமே அவள் உள்ளத்தைத் துளிக்கூடத் தெரிந்து கொள்ளவில்லை. தெரிந்திருந்தால் கவுண்டர் அப்பேர்ப்பட்ட காரியத்தைச் செய்யத் துணிந்திருப்பாரா?

எனக்கு முதலில் அதைக் கேட்டதும் நம்பவே முடியவில்லை. "ஐயோ, நம்ம நல்லசாமிக் கவுண்டரா இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்!" என்று திகைத்துப் போனேன். "என்ன அப்பா பண்றது? விருமத்தி புடிச்சாப்பலெ நிக்கறயே. சித்தெ உக்காந்துதான் சொல்றதைக் கேளு. பொண்ணுயைப் பொறந்தா கண்ணாலம் பண்ணுமே ஊட்டோடே வெச்சுக்க முடியுமா? அது போவட்டும். பண்ணாடி பண்ணயம் என்ன சிறிசா? நம்ம பக்கத்திலே இண்ணைக்கி அதை மீர்ர குடும்பம் எங்கே ஒண்ணு சொல்லு?" என்றார். 'அவர் குடும்பம் இருந்து பாழாய்ப்பேச்சு' என்று நான் நினைத்துக்கொண்டேன். ஆனால் பணத்தை மட்டும் கவுண்டர் கருதுகிறவர் அல்லவே?

என்ன அடக்கியும் ஆத்திரம் அதிகரித்தது. "பண்ணாடி மகனுக்குத் தங்கத்தைக் கொடுக்கிறதைக் காட்டிலும், குளம் குட்டையிலே புள்ளையைப் புடிச்சுத் தள்ளி விடலாமே! இதைவிட அது எவ்வளவோ நல்லது" என்று கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னேன்.

கவுண்டரும் என் வார்த்தை வேகத்தைப் புரிந்து கொண்டார் என்றே நினைக்கிறேன். அதனால்தான் கொஞ்ச நேரம் பேச்சு மூச்சில்லாமல் அசைவற்று நின்று கொண்டிருந்தார். மனசும் குமுறிக் கொண்டுதான் இருந்திருக்க வேணும்.

நினைக்க நினைக்க எனக்கு எரிச்சல் அதிகமாகிக் கொண்டே வந்தது. தாமரைப் பூவைப் பறித்து தரையில் போட்டதைப் போலல்லவா இருக்கிறது இது!

ஊர்ப் பண்ணாடி மகனைப் பற்றி அனைவருக்கும் தெரியும். குணத்தை ஒருவரும் குறை சொல்லவில்லை. அவனுக்கு இரண்டு கண்ணும் குருடு. அந்தக் கபோதிக்கா தங்கத்தைப் பலி கொடுப்பது! யார்தான் இதற்குச் சம்மதிப்பார்கள்?

3

மறுநாட் காலையில் கவுண்டரிடம் நான் கேட்ட செய்தி என்னை எங்கோ ஒரு மாய லோகத்துக்கே தூக்கிக் கொண்டு போய்விட்டது. "அடேயப்பா, அதிசய—அற்புதச் சம்பவங்களுக்கு உலகில் ஒரு எல்லையே கிடையாது போலிருக்கிறது. இன்னும் என்னென்ன விந்தைகளெல்லாம் நடைபெறுமோ?" என்று ஆச்சரியத்தில் முழுகி விட்டேன்.

தங்கம் பிறவியிலே ஊமை இல்லையாம். ஐந்து வயதுக் குழந்தையாக இருக்கையில் இட்டேறி முக்கில் மாலை மசக்கலில் விளையாடிக் கொண்டிருந்தபோது 'காத்து'ச் சூழ்ந்து கொண்டதாம். அந்தக் 'காத்துக் கெரகம்' தான் குழந்தை வாய் அடைக்கும்படி செய்து விட்டதாம். கவுண்டரும் தன்னாலான எல்லாக் காரியத்தையும் செய்து பார்த்தும், தங்கத்தின் வாய் அடைத்தே விட்டதாம். செங்காட்டு வலசு சின்னானும், "இது மருந்துக்கு ஒண்ணும் குணமாகாதுங்க. ஆத்தா கோபத்துக்கு நான் எந்தத் தழையைக் கசக்கிக் குடுத்தாலும் அதெல்லாம் கேக்காதுங்க" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டதால், வைத்தியத்தைப்பற்றி பிறகு கவுண்டர் துளிக்கூட சிந்திக்கவே இல்லையாம்!

வேறு ஒன்றும் பேசாமல் நான் வந்து விட்டது எனக்குச் சற்றும் பிடிக்க வில்லைதான். இருந்தாலும் என்ன பண்ணுவது? கலியாணக் காரியங்கள் என் கண்ணை உறுத்திக்கொண்டே இருந்தன. பச்சைப் பந்தல்

சொல்ல முடியாத பதை பதைப்பை ஏற்படுத்திக் கொண்டே இருந்தது.

நேரம் ஆக ஆக என் மனசு ஏன் அப்படி அடித்துக் கொண்டது? என் கண்ணும் மனமும் ஏன் நிலை கொள்ள மாட்டேனென்கிறது?

தோட்டத்தின் கோடியிலே அழகிய முல்லைப் பந்தல் இருக்கிறது, பந்தல் ஓரமாகப் பசும் புல் மைதானம், மைதானத் தோரமாக இளம் சோளப் பயிர்களில் 'கம்' மென்ற மணம் நிறைந்திருந்தது.

அன்று அங்கு போனேன். கண்ணில் தங்கம் படவே இல்லை. வீட்டிற்குள்ளே தான் இருந்தாளா? ஆம். எங்கோ ஒரு மூலையில் வருங் காலத்தைப் பற்றிய கனவில் ஆழ்ந்திருப்பாள். என்னென்ன சிந்தனைகள் உள்ளத்தில் உருக்கொண்டு ஓடிற்றோ? ஐயோ, பாவம். இந்தப் பாழாய்ப்போன வீட்டிலே அவள் ஏன் பிறந்தாள்? இல்லை, இல்லை, இந்தத் தங்கமான மனிதருக்கு அந்தத் தங்கமான பெண் ஏன் பிறக்கவேண்டும்? பிறந்ததில் என்ன குற்றம்? கவுண்டர் இப்படிச் செய்யக் துணிந்து விட்டாரே.

விடிந்தால் கலியாணம்! உம். விடிந்தால், ஆம், விடியாமலே இருந்து விட்டால்? எந்த மகராசியோ விடியாமலே இருக்கச் சாபம் கொடுத்து விட்டாளாமே? அப்படி ஒரு அற்புதம் நடக்கலாகாதா? எத்தனையோவி சித்திரங்கள் நடை பெறுகிறதே, இந்த மாதிரி ஒரு சம்பவம் நடந்து தங்கத்தின் வாழ்வு தளிர்க்கலாகாதா? காட்டுக் கொடிபோல அவளும் கட்டுத்தளையின்றி யதேச்சையாக இருப்பாளே. காலடி ஓசை கேட்டது. ஸ்ரீமதி பார்வதி பி.ஏ. சிரித்துக்கொண்டு வந்து நின்றாள்.

"சாயங்காலத்தில் அப்படியே வெளியேபோய் உலாவாமல் என்ன இப்படி அசையாமல் உட்கார்ந்துகொண்டிருக்கிறீர்களே?" என்றாள்.

என் மனத்தின் அசைவு அவளுக்குத் தெரியவா போகிறது?

'எழுந்திருங்களேன், போகலாம்' என்ருள் பார்வதி.

"ஏனே நடக்கப் பிடிக்கவில்லை"

"தங்கமும் கூட வருகிறேன் என்கிருள்" என்ருள் அவள்.

"எங்கே?" என்று திடுக்கிட்டுக்கொண்டே சுற்று முற்றும் பார்த்தேன்.

"அவளிடமே கேட்டால் சொல்வாளே"

எனக்குக் கோபம் வந்தது.

"விளையாட்டைப் புரிந்துகொள்ளாத மனிதர்களோடு நான் பேசுவதில்லை" என்ருள் பார்வதி.

"எல்லாச் சமயத்திலும் விளையாடிக்கொண் டிருப்பது சுத்தப் பைத்தியக்காரத்தனம்"

"இப்போது யாருக்குப் பைத்தியம் என்பது எனக்குச் சந்தேகமா யிருக்கிறது. எனக்கா அல்லது?"

"யாருக்கோ இருக்கட்டும். இப்போது நான் ஒன்றைப்பற்றியும் பேசப் பிரியப்படவில்லை"

"என்ன தங்கத்தைப் பற்றிக் கூடவா?"

நான் மௌனமா யிருந்தேன்.

பார்வதி கொஞ்சம் ஆச்சரியத்துடனே கேட்டாள். "ஆமாம், தங்கத்துக்குக் கலியாணமாமே. நல்ல பொருத்தம்தான்" என்று கூறிக் கேலிச் சிரிப்புடன் என்னைப் பார்த்தாள். பார்வதியை நான் துளியும் சலித்துக்கொள்ளவில்லை. 'பார்க்கும்' 'கிளப்பும்' டென்னிஸ் கோர்ட்டும் இல்லாத ஊரும் ஒரு ஊரா என்று எண்ணி விவாதிக்கும் பார்வதியிடம் பேசுவதில் பயனில்லை என்பது எனக்குத் தெரியும் அல்லவா?

ஆனல் கவுண்டரிடம் பேசிய பேச்சும் வீணுகி விட்டதே? எத்தனையோ அழகிய கற்பனை மாளிகைகள் கட்டி மகிழ்ச்சி யடைந்துகொண் டிருந்தேன். தங்கத்துக்கு

ஒரு தங்கமான கணவன் வருவான். ஊரே பார்த்து அதிச யிக்கும். ஆனல் அதிசயப் படுகிறவர்களே 'பார்க்கப் போனல் இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? தங் கத்துக்கு தகுதியான கணவன் இந்த உலகில் எது?" என்றெல்லாம் சொல்வார்கள்.

அன்று காலையில் கவுண்டரிடம் கேட்டதற்குப் பிறகு இன்னும் வேறு வேறு திக்கில் என் சிந்தனைகள் சென்று கொண்டே இருந்தன.

அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கலைந்திருந்த மேகங்கள் ஒன்று கூடிக்கொண்டே வந்தன. மழைக் காற்று லேசாக அடிக்கத் தொடங்கியது. இன்னும் சற்று நேரத்தில் பெருமழை கொட்டும் என்பதற்கு அறிகுறி தெரிந்தது. மின்னல்கள் சுழிக்கவும் தொடங்கி விட்டன. வீட்டிற்குப் போக எழுந்தேன். பார்வதியும் பேசிக் கொண்டுதான் கூட வந்தாள். ஆனல் என்ன பேசிக் கொண் டிருந்தாள் என்பதொன்றும் எனக்குத் தெரி யாது!

எதிர் பார்த்தபடி இரவில் பெருமழை கொட்டத் தொடங்கி விட்டது. வெள்ளம் சோ வென இரைச்ச லிட்டுச் சுழன்ருேடிக் கொண்டிருப்பது என்னவோ ஒரு சோக கீதத்துக்குச் சுருதி கூட்டுவதுபோல் இருந்தது.

மழையோடு கலந்த பேரிடியின் முழக்கமும் காதைத் தொளைக்க ஆரம்பித்தது, ஏன் இந்த இடிகள்! இன் றைக்கு இயற்கைக்கு இத்தனை சீற்றம் ஏனே?

ஆம். இயற்கைத் தேவிக்கே கொடுமையைப் பொறுக்க முடியவில்லை. வெள்ளத்தில் எல்லாமே முழுகி ஆழ்ந்து உருத் தெரியாமற் போகப்போகிறது. பசும் பந்தல்—தோட்டம், காடு — கவுண்டர் — தங்கம் — சே! சே! என்ன கொடூரக் கற்பனை இது! ஆனல்...ஆனல்... கல்யாணம் நடைபெருது! இதுமட்டும் நிச்சயம். வரு கிறவர்கள் யாரும் சரியான சமயத்தில் வந்து சேர முடியாது. முகூர்த்தம் எப்படியும் தடைப்பட்டே போகும். ஏற்பாடுகள் எல்லாம் இந்த வெள்ளக் காட்டில்

எப்படி ஒழுங்காக நடைபெறும்? இதைத் தடுக்கத்தான் இந்த மழையும் இடியுமோ? யார் கண்டார்கள்?

கண் கூசும்படியான மின்னல் வெட்டியது. தங்கக் கொடிகள் வான வீதியில் புரண்டன. அடடா! வானம் வெடித்ததைப் போன்ற அந்தப் பேரிடி! ஐயோ! இவ்வளவு பக்கத்தில் கேட்கிறதே! எங்கே விழுந்ததோ?

காலையில் எழுந்து கவுண்டர் தோட்டத்துப் பக்கம் புறப்பட்டேன். அன்று கொஞ்சம் 'தெம்பு' வந்த மாதிரி இருந்தது. முதல் நாள் ஏற்பட்ட தாங்கல் பறந்தோடி விட்டது. ஒருவிதத்தில் கலியாணம் தடைபட்டது சற்று ஆறுதலா யிருந்தது.

ஆனல் கலியாணம் தடைபட்டுப் போயும் கவுண்டருடைய முகத்தில் புன்னகை தாண்டவ மாடுவதையும், அவர் வீட்டைச்சுற்றி மலர்ந்த முகத்தோடு பலர் கூடியிருப்பதைப் பார்க்கவும் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. சங்கதியைக் கேட்டவுடன், "ஐயா, கவுண்டரே, முதலில் இது பூலோகம் தானு என்பதைச் சொல்லுங்கள். இந்திர லோகம் சந்திர லோகம் அல்லவே" என்று என்னை நானே தெளிவு படுத்திக்கொண்டேன்.

இரவு கிடு கிடுக்கும்படி இடித்த பெருத்த இடி எங்கோ பக்கத்தில் பனைமரத்தில் விழுந்திருக்கிறது. அந்தப் பேரிடியைக் கேட்டுத் தங்கம் கலங்கிப் போய்விட்டாள். அவள் கலக்கம் எல்லோரையுமே ஆனந்தத்தில் ஆழ்த்துவதாகி விட்டது. நடந்தது இதுதான். பயத்தால் அடைத்துப்போயிருந்த வாய் மீண்டும் பயத்தினுலே பேசிவிட்டது! 'அம்மா' என்று அவளையும் மீறிக் கத்திவிட்டாள். அப்புறம் தங்கம் பேசத் தொடங்கிவிட்டாள். பிறகு விடியும் மட்டும் தங்கத்தை சும்மா விடவில்லை. இப்போதும் ஊர்ப்பெண்கள் அவள் வாயைக் கிளறிக்கொண்டு இருந்தார்கள்.

இந்தக் காட்சிகளைக் கண்டு அப்படியே மெய்ம்மறந்து நின்றேன். உண்மையில் சொல்லப் போனல் என் வாய் தான் அடைத்துப் போய்விட்டது! இனி, தங்கத்தின் வாழ்க்கை? தங்கமேதான்!

தியாகம்

"நீலன்"

மாணவர்கள் இரவு பகலாக ஆகாரத்தைப் பற்றிக் கவலைப் படாமலேகூட சித்திரம் வரைந்துகொண்டிருக்கிறார்கள். போட்டி என்றால் எவ்வளவு உத்வேகம் கிளம்பி விடுகிறது! அவரவர்கள் நோக்கம் போல் சித்திரம் வரையலாம். சித்திரம் இயற்கையானதாகவும், உணர்ச்சியை வெளிப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். இதுதான் நிபந்தனை.

சோலை யொன்றில் ஒரு கன்னி மலர் கொய்வது போல சித்திரம் தீட்டினான் இரவிவர்மன். ஒரு இளைஞன் புறாவுடன் விளையாடுவதாகப் படம் வரைந்தாள் கலாவல்லி. இம்மாதிரி அவரவர்கள் தங்களுக்குத் தோன்றிய வாறெல்லாம் படம் எழுதினர்.

*　　　*　　　*

பரந்த முகம், வெண்மையான தாடி, திருநீறு இவைகளுடன் சிவப்பழமாகத் தோற்ற மளிக்கிறாரே அவர் தான் கலா நிலயத்தின் குரு சந்திரசேகரர்.

கலா நிலையம் அரச குடும்பத்தினருக்காக ஏற்படுத்தப்பட்ட சித்திரசாலை. இங்கேதான் குலசேகர பாண்டியனின் இரண்டாவது குமாரனான இரவிவர்மன் கல்விகற்று வருகிறான். சோழாதிபன் இராஜேந்திரனின் ஏகபுதல்வி கலாவல்லியும் சித்திரம் பயின்று வருகிறாள்.

இவர்களுடைய கல்வி தொடங்கி ஓராண்டு ஆகிவிட்டது, இன்னும் ஆறு மாதங்கள்தான் பாக்கி. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் மாணவர்களின் தேர்ச்சியைப் பரிசோதிக்க குரு எண்ணினர்.

சித்திரகூடத்திற்கு எல்லாருடைய படங்களும் கொண்டுவரப் பட்டன. குருவைத் தொடர்ந்து எல்லா ருமே படங்களைப் பார்த்துக்கொண்டு வந்தனர். ரமா தேவி, கலாவல்லியின் தோளைப் பிடித்துக் குலுக்கி "ஏண்டி! அன்றைக்கு நீ சித்திரசாலைத் தோட்டத்தில் பூப் பறித்துக் கொண்டிருந்தாயே அதைப் போலவே சித்திரம் வரைந்திருக்கிறாரே இரவிவர்மன்!" என்றாள். கலாவல்லி இதை முன்னாலேயே தெரிந்து கொண்டிருக்கிறாள் என்பது அவள் ஆச்சர்யப் படாமல் புன்முறுவல் செய்ததி லிருந்தே தெரிந்தது. என்றாலும் சாமார்த்தியமாக, "இந்த மாதிரியாடி நான் நின்றிருந்தேன்?" என்று சொல்லி அவள் கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டினாள்.

இரவிவர்மன் ஆழ்ந்த யோசனையுடன் உலாவிக் கொண்டிருந்தான். "நான் அன்றைக்குப் புறாவுடன் விளை யாடிக் கொண்டிருந்ததை இவள் எங்கிருந்து பார்த்தாள்? நான் எந்த முறையில் உட்கார்ந்திருந்தேனோ அதை அப் படியே யல்லவா எழுதி யிருக்கிறாள். பல நாட்களுக்குப் பிறகும் அந்தச் சந்தர்ப்பத்தை நினைவில் வைத்தல்லவா எழுதி யிருகிறாள்!" என்று வியந்தான்.

இரவிவர்மன் எழுதிய படம் முதற் பரிசு பெற்றது. கலாவல்லியின் படமே இரண்டாவது பரிசுக்குரியதா யிருந்தது.

* * *

குளத்தின் படிக்கட்டில் உட்கார்ந்து தண்ணீரில் கால் களைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள் கலாவல்லி. குயில் ஒன்று கூ கூ வென்று இசைபாடிக் கொண்டே பறந்து சென்றது. அந்த இனிய நாதம் காதில் விழுந்ததும் ஆனந்த மேலிட்டதுபோ லிருக்கிறது அவளுக்கு. தண்ணீ ரில் கால்களை ஆட்டிக் கொண்டு இனிய பாட்டொன்றைப் பாடினாள்.

அவளுக்கு முன்னாலே தண்ணீரில் படீரென்று ஒரு கல் விழுந்து அலை கிளம்பிற்று. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். வெட்கம் மேலிட்டுவிட்டது. புன்முறுவ லுடன் தலைகுனிந்த வண்ணம் "நீங்களா?" என்றாள்.

“ என் பயந்து விட்டாயோ ? ”

“ பயமா, பயம் என்ருல்? கோபந்தான் கொண்டேன், நீங்களல்லாது வேறு யாராகிலுமாயிருந்தால்...! ”

“ அப்படியே கசக்கிப் பிழிந்துவிட் டிருப்பாயாக்கும் ! ”

இவ்வாறு பேசிக்கொண்டே அவள் அருகில் சென்ருன்.

“ என்னைப் போலவே படம் வரைந்து விட்டாயே ! ”

“ இல்லையே, அப்படியானல், நீங்கள் என்னைப் போல்தான் படம் வரைந்தீர்களா ? ”

“ ஆமாம் ! ”

“ அப்படியானல், நானும் ஒப்புக் கொள்ளுகிறேன்! ” அவள் மறுபடியும் கால்களைத் தண்ணீரில் தொங்கவிட்ட வண்ணம் உட்கார்ந்தாள். இரவிவர்மனும் அவளுக்கருகில் அப்படியே உட்கார்ந்தான்.

* * *

கலாவல்லி எழில் மிகுந்த மங்கை. இரவிவர்மன் ஆண்களின் சிகரம். கலை ஆர்வம் படைத்த இருவரும் நாளடைவில் காதல் வசப்பட்டனர்.

காதலர் இருவரும் நீரோட்டத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். எப்பொழுதும் தாண்டவமாடும் ஆனந்தத்திற்குப் பதில் கவலை குடிகொண்டிருந்தது அவர்கள் முகத்திலே. இன்னும் இரண்டு தினங்களில் அவர்கள் பள்ளி வாழ்க்கை முற்றுப் பெறுகிறது. தங்கள் தங்கள் ஊருக்குப் புறப்பட வேண்டியதுதான். கவலையில்லா திருக்குமா ?

“ உனக்குக் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யப்படும்பொழுது உன் தந்தையிடம் சொல்வாயா ? ” என்று கேட்டான் இரவிவர்மன்.

"கண்டிப்பாகச் சொல்வேன். நான் விரும்புகிற மணாளனை மணக்க என் தந்தை அனுமதிகொடுக்க மறுக்க மாட்டார் என்று நினைக்கிறேன்."

"உன்னைவிட்டுப் பிரியவேண்டி யிருப்பதை நினைக்கும்பொழுது என் உள்ளம் பரிதவிக்கிறது."

"ஒன்றுபடுவதற் கறிகுறிதான் இந்தப் பிரிவு என்று நினைக்க வேண்டும்."

கடைசித் தினத்தை இவ்வாறுகப் பேசித்தான் கழித்தார்கள்!

* * *

"கண்மணி கலா, குலசேகர பாண்டியன் தமது குமாரனுக்குப் பெண் கேட்டுவிட்டிருக்கிறாரம்மா!" என்றார் சோழ மகாராஜா இராஜேந்திரன்.

"அப்பா, இரவிவர்மனுக்கா அப்பா!"

"இரவிவர்மனுக்கா! அவன் இளைய குமாரனல்லவா? முதல் மகனுக்குச் செய்துவிட்டல்லவா இரண்டாவது மகனுக்குச் செய்வார்கள்? முதல் குமாரன் மார்த்தாண்டனுக்கல்லவா கேட்டுவிட்டிருக்கிறார்."

"நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள், அப்பா?"

"மார்த்தாண்டனை எனக்குத் தெரியுமம்மா! அவனுடைய கல்வியும் அழகும் எல்லோராலும் போற்றக்கூடியவை. உனக்கு ஆட்சேபனை இராதென்று ஒப்புக்கொண்டுவிட்டேன். சரிதானே, கண்மணி?"

"இதோ, தாயார் வருகிறார்கள். கலந்து யோசியுங்கள் அப்பா!"

"தேவி, வா, மார்த்தாண்டன் இங்கு வந்திருந்தபொழுது நீ பார்த்திருக்கிறாயல்லவா! அவனுக்குக் கலாவைக் கொடுக்கும்படியாக பாண்டியன் நிருபம் அனுப்பியிருக்கிறார்."

"குழந்தையின் விருப்பம் வேறு மாதிரியாகவல்லவா இருக்கிறது."

"என்ன?"

"பாண்டியனுடைய இரண்டாவது குமாரனை இரவிவர்மனும் கலாவல்லியும் சித்திரம் பயின்றார்களல்லவா? அப்பொழுது இருவரும் நேசமாகி விட்டார்கள். ஆகையினால் இரவிவர்மனைக் கலியாணம் செய்துகொள்ளவே விரும்புகிறாள்."

"அதெப்படி முடியும்? மூத்தவன் இருக்கும் பொழுது இளையவனுக்குக் கலியாணம் செய்வார்களா?"

"மூத்தவனுக்கு வேறெங்கேயாவது பெண் பார்த்துக் கொள்ளட்டுமே. சில வருஷங்களானாலும் கலாவின் இஷ்டப்படி இரவிவர்மனுக்குத்தான் கொடுக்க வேண்டும்."

"நமக்கிருப்பது ஒரே பெண். பட்டத்திற்குரியவனுக்குப் பெண்ணைக் கொடுக்காமல் இளையவனுக்குக் கொடுத்து என்ன உபயோகம்? நம்முடைய பெண் மகாராணியாக வீற்றிருந்து நாம் பார்க்க வேண்டாமா?"

"மன மகிழ்ச்சியில்லாமல் மகாராணியாயிருப்பதும் ஒன்றுதான், கன்னியாயிருப்பதும் ஒன்றுதான், அப்பா" என்றாள் கலா.

"நீ சிறு பிள்ளை, விஷயந் தெரியாமல் சொல்லுகிறாய். பட்டத்திளவரசனை மணப்பதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பத்தைக் கை நழுவ விட்டதற்காகப் பின்னாடி நீ வருந்த வேண்டியிருக்கும், அம்மா."

"அப்பா, காதலைவிட இராணியாயிருக்கும் அந்தஸ்து பெரிதென்று நீங்கள் கருதுகிறீர்களா?"

"என்னுடைய குமாரி ஒரு அரசனின் மனைவியாயிருப்பதைத்தானேயம்மா நான் விரும்புவேன்"

"உங்கள் கௌரவத்தை மட்டும் கருதுகிறீர்களா?"

"உன்னுடைய நன்மையைக் கருதி நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன் இப்பொழுது நான் செய்கிற முடிவின் நன்மையை நீ பிறகு தானம்மா தெரிந்து கொள்

வாய்," என்று சொல்லிவிட்டு எழுந்து சென்ருர் மன்னர். கலாவல்லியும் தனதறைக்குச் சென்றுவிட்டாள்.

* * *

சோகமே உருவெடுத்தது போன்று உட்கார்ந்திருந்தான் இரவிவர்மன். மந்திரி குமாரர்களான நண்பர்கள் இருவர் உள்ளே வந்தனர். "இரவி! என் வாட்டமாயிருக்கிருய்?" என்ருன் ஒருவன்.

உற்ற நண்பர்கள் என்ற முறையில் தனக்கு வந்த கடிதத்தை எடுத்துக் கொடுத்தான் இரவிவர்மன்.

"ஆமாம் இதற்கென்ன செய்ய உத்தேசம்?" என்ருன் மற்றவன்.

"என்ன செய்வது? பட்டமுள்ளவனுக்குப் பெண் கொடுக்க அவர்கள் விரும்புவது நியாயம்தான். நித்யப் பிரம்மச்சாரியாகி தேசாந்திரம் போகத் தீர்மானித்து விட்டேன்."

"அப்படிச் செய்ய வேண்டாம். நான் ஒரு வழி சொல்லுகிறேன். பட்டமே உனக்குக் கிடைக்கும்படியாகச் செய்து விடுகிருேம்."

"அதெப்படியடா முடியும்?"

"எப்படியா? பட்டத்திற்குரியவனே இல்லாது செய்துவிட்டால், அடுத்தபடியாகப் பட்டத்திற்குரியவர் நீங்கள் தானே பிரபு!"

"என்ன? என்ன சொன்னுய்?"

"என்ன பிரபு! உங்கள் சகோதரரை..........."

"வேறு யாராகிலுமாயிருந்தால்...........இவ்வளவு நேரம் என் வாளுக்கு இரையாகியிருக்க வேண்டும். எழுந்திருங்கள், வெளியில் போங்கள், போங்கள் வெளியே, உம்."

மந்திரி குமாரர்கள் இருவரும் எழுந்து நடந்துவிட்டார்கள்!

இரவிவர்மன் தனக்குள்ளேயே பேசிக் கொண்டான்: ‘‘ தமையனைக் கொன்று பட்டம் ஆளவா? துரோகிகள், என்னைக் கொலை பாதகனுக்கத் துணிந்துவிட்டார்கள். அண்ணன் அன்பன்; மகா உத்தமன், உண்மையாளன், கேவலம் பட்டத்திற்காகவா கொலை, இந்த ஜன்மத்தில் இல்லை. என் விதிக்கு யாரை நோவது? முடிவாகிவிட்டது, நான் பிரம்மச்சாரிதான் ’’

எறிட்டுப் பார்த்தான். அந்த அறைக் கதவிற்குத் தொங்கவிடப்பட்டிருந்த திரைச் சீலையின் பக்கம், அவன் தமையன் செல்வது தெரிந்தது.

* * *

தந்தைக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்ததாகக் கைது செய்து கொண்டுவந்து நிறுத்தப்பட்டான் மூத்த குமாரன் மார்த்தாண்டன். சபையோர் ஆச்சர்யப்பட்டனர். பரமயோக்கியனை இவனு தந்தைக்கு விரோதமாக சூழ்ச்சி செய்திருக்க முடியும்! அரசனும் இதை நம்பவில்லை. சாட்சிகள் மார்த்தாண்டனுக்கு விரோதமாக இருந்தனர். என், மார்த்தாண்டனே சூழ்ச்சி செய்ததாக ஒப்புக் கொண்டுவிட்டான். அதன்பின் சாட்சியும் தேவையா? பட்டத்திற்கு லாயக்கற்றவன் என்ற தண்டனை விதித்து அவனை சாதாரண பிரஜையாக்கிவிட்டனர். அவன் செய்த குற்றத்திற்குத் தண்டனை இதுவே. தண்டனையைக் கேட்டதும் புன்முறுவல் தவழ்ந்தது மார்த்தாண்டன் முகத்திலே.

* * *

மார்த்தாண்டன் தோட்டத்திலே பின்புறமாகக் கைகளைக் கட்டிக்கொண்டு உலவுகிருன். ‘‘ உண்மையான இருவர் இன்பமனுபவிப்பதைவிட ஒருவன் பட்டம் ஆளுவது அவ்வளவு பெரிதா? அவர்கள் மணம்புரிந்து கொண்டு சுகமாக ஆளட்டுமே. அவன் யார், என் தம்பி தானே?’’ என்று முணுமுணுத்தது அவன் வாய்.

* * *

திருமணமும் பட்டமும் ஒரே நாளில் தீர்மானிக்கப் பட்டது இரவிவர்மனுக்கு. எதிர்பாராத வகையால் அண்ணன் தவறிழைத்துப் பட்டத்திற்குத் தகுதியற்றவனுக எப்படியானுன் என்பது இரவிக்கு இன்னும் விளங்கவில்லை.

சிதைந்த சிற்பம்

கு. மா. பாலசுப்ரமணியம்

இயற்கையின் சிருஷ்டிகள் அனைத்தும் பரிபூரண சோபையுடன் திகழும் வசந்தகாலம்!

தளர்நடையில் தவழ்ந்துவரும் மெல்லியதென்றல், காந்தி சிதறும் மாங்கிளைகளின் செவ்விளந்தளிர்களை, இளங் குழவியைப்போல் அசைத்து விளையாடிக்கொண்டிருந்தது.

என், நண்பரும், நானும் காவிரிக்கரையின் வழியே காற்றுக்காக மெல்ல நடந்துகொண்டிருந்தோம்.

பகல் முழுவதும் தன்னுடைய வெப்பமான கிரணங் களால் தாக்குண்டு வதங்கிப்போன ஜீவராசிகளைப் பார்த்து, எள்ளி நகையாடிக் கொண்டிருந்தான் கதிரவன். தன்னை மானபங்கம் செய்த தூர்த்தனின்முன் செயலற்று நிற்கும் பேதைப் பெண்போல் தலைகுனிந்து வாடித் தொங்கின தாவர வர்க்கங்கள்.

விரித்து வைக்கப்பட்ட வெண்பட்டிலே இரத்த வாரியைப் பொழிந்ததுபோல, காவிரி மணலிலே சூரிய னின் செவ்வொளி படிந்துகிடந்தது.

நாங்கள் இப்படிப் பலவித உல்லாஸக் காட்சிகளிலும் மனதைப் பறிகொடுத்தவாறு வரும்பொழுது, சிறிது தூரத்திலிருந்து "...........உண்ண உண்ணத் தெவிட் டாதே; அம்மை உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்........." என்ற பாரதி பாடலின் கீத ஒலி மென் காற்றின்மீது மிதந்துவந்தது.

வாழ்க்கையில் சலிப்புற்று விரக்தியடைந்ததுபோன்ற சாரீரம்தான் அது! எனினும் அந்த வெப்பமான - வறண்ட - குரலிலும் ஒருவித கவர்ச்சியில்லாமலில்லை.

வெகு சமீபத்திலேயே அந்தக் குடிசையைக் கண்டு கொண்டோம். அதன் எதிர்ப்புறத்தில் அரைகுறையாக செதுக்கியபடியே கிடந்த சிலைகளைப் பார்க்கும்பொழுதே அது ஒரு சிற்பச் சாலைதான் என்பது நன்ருக விளங்கியது.

எங்களைக்கண்டதும் அவருடைய பாட்டு, கம்பி யறு பட்ட வீணையைப்போல் நின்றுவிட்டது. மிகவும் தெரிந்த வர்களைப்போல் எங்களை உபசரித்து அருகிலிருந்த ஆசனங் களில் அமரச் சொன்னர்.

சுமார் எழுபது வயது இருக்கலாம்! களங்கமற்ற முகம். கபடமற்ற பேச்சு.

சிறிதுநேரம் ஏதோ பல விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அங்குள்ள சிற்பங் களிலெல்லாம், முக்கியமாக என் கவனத்தைக் கவர்ந்தது அந்த அறையின் மூலையிலிருந்த ஒரு பெண்ணின் பிரதிமை தான்.

ஒரு யௌவன யுவதி இடையில் நீர்க் குடத்துடன் அப்படியே தத்ரூபமாக நிற்பதுபோலிருந்தது!

எழுந்து அதனருகே சென்று கவனித்தேன். ஆஹா! அதன் கன்னங்களிலே வாலிபத்தின் பூரிப்பு! அங்கங்கள் ஒவ்வொன்றிலும், பருவகாலத் துடிப்பின் பிரதிபலிப்பு! எல்லாவற்றையும்விட, அந்தப் பார்வையிலே......காதல் தோய்ந்த கனிவு! நாணம் மிகுந்த மருட்சி! இவற்றை யெல்லாம் எப்படித்தான் சித்தரித்தானே அந்தச் சிற்பி!

'ஹா! இதென்ன? இந்த அருமையான சிலையை இப்படி உடைத்தது யார்? பொருத்தியல்லவா வைக்கப் பட்டிருக்கிறது!'

என் நெஞ்சம் துணுக்குற்றது போலிருந்தது.

"ஐயா! இந்த சிற்பம் தங்களுடைய ஒப்பற்ற கைத் திறனின் சிருஷ்டிதானே? இது ஏன் இப்படி இரு துண்டு களாக உடைந்தது?" என்று கேட்டேன் ஆவலை அடக்க முடியாமல்.

முதுமையினல் சுருக்கங்கள் ஏற்பட்டிருந்த அவர் முகத்திலே ஒரு மாறுதல் தோன்றியது.

'நான் கேட்டதில்தான் ஏதாவது தவரே?' என்று பதறிவிட்டது என் மனம்.

துயர நினைவுகளை துரத்தியடிப்பதுபோன்ற ஒரு பெரு மூச்சுக்குப்பின், "........ஹூம்! இப்படிப்பட்ட சிற்பத்தைச் சித்தரிக்க என்னல்,........ஏன்?.........எந்தச் சிற்பியினுலும் முடியாது! ஆம்! அந்த சந்தர்ப்பம் மட்டும் நிகழ்ந்திராவிட்டால், அவரால்கூட இந்தச் சிலையை சிருஷ்டித்திருக்க முடியாது. சிற்சில சமயங்களிலே மனிதன் சந்தர்ப்பங்களின் குறுக்கீட்டால் தன் மானுஷ்ய தன்மைக்கு அப்பாற்பட்ட ஓர் தெய்வீகப் பிறவியாகவும்கூட ஆகிவிடுகிருன்! அது, தன்னை மறந்த பரவச நிலையில்!........." மேலும் உள்ளக் கிளர்ச்சியின் உத்வேகத்தில் ஏதேதோ பேசிக்கொண்டே போனர்.

இடைமறித்து "சுவாமி! அந்தச் சரித்திரத்தை நான் அறியலாமோ?" என்று பணிவாக வினவினேன்.

"ஓ! தாராளமாய்!...........அதைச் சொல்லுவதற்காகவேதான் நான் ஜென்மம் எடுத்திருக்கிறேன்!" என்று கதையை ஆரம்பித்தார்.

* * *

"இச்சிலையை சிஷ்டித்த சிற்பியின் பெயர் நிரஞ்சன்! இளம் வாலிபன். ஆனல் சிற்ப சாஸ்திரத்தில் கரைகண்ட நிபுணன்!

சிந்துவாரற்றுக்கிடக்கும் கல்லை சிற்றுளி பிடித்துச் செதுக்க உட்கார்ந்துவிட்டால், அன்ன ஆகாரம் எதையும் நினைக்கக்கூட மாட்டான். இந்தக் கலையில் அத்தனை ஆர்வம் அவனுக்கு!

சுமார் நூறு, நூற்றிருபது வருடங்களுக்குமுன் இதே இந்த இடத்தில் அவனுடைய சிற்பச்சாலை மும்முரமாக வேலை செய்துகொண்டிருந்தது.

அவனுடைய மகத்தான திறமையைக் கேள்வியுற்ற தஞ்சை அரசனிடமிருந்து ஒரு நாள் அவனுக்கு அழைப்பு வந்தது.

"மகிமை பொருந்திய சிக்கல் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்ய ஒரு சிங்கார வடிவேலன் விக்ரஹம் தேவை! மிகவும் வனப்புடன் அதைச் சித்தரித்துக் கொடுத்தால், ஐயாயிரம் ரூபாய் கொடுப்போம்!" எனக் கூறினான் அரசன்.

"சரி!" என்று ஒப்புக்கொண்டான் சிற்பி. அந்த வேலைக்காக ஆறுமாதகாலம் அவகாசம் கொடுக்கப் பட்டது.

சிற்பச் சாலையில் உருவமற்றுக் கிடந்த கல் ஒன்று, சிறிது சிறிதாக தெய்வ உருவம் அடைந்துகொண்டிருந் தது. ஒவ்வொரு விஷயத்திலும் வெகு நுணுக்கமாகக் கவனத்துடன் வேலை நடந்தது.

பெரும்பாலும் விக்ரஹம் வேலை முடிந்து விட்ட தென்றே சொல்லலாம். வேலின் முனையைக் கூர்மை யாகச் செதுக்கி விடவேண்டியது. கண்ணிமையை ஒதுக்கி, விழிகளில் கருணை ததும்பும் பார்வையைக் கற் பிக்க வேண்டியது. இவைதான் பாக்கி.

சிலாரூபம் செய்துமுடிக்க அவர்கள் கொடுத்த கெடு விலே, இன்னும் ஒரு மாதம் பாக்கியிருந்தது. அதற்குள் தாராளமாக வேலையை முடித்துவிடலாம்.

அப்பொழுதுதான் இந்த வஞ்சம் நிறைந்த கோடைக்காலம் பிறந்துவிட்டது!

சித்திரை மாதம்! ஆம்! இதேபோல் வசந்தகாலம் தான் அது!

இவ்வூரிலுள்ள யாவரும் அப்பொழுது காவிரி மண லின் ஊற்று நீரைத்தான் உபயோகிப்பார்கள். ஊற்றுக்கு நீரெடுக்கவரும் மங்கையரெல்லாம் இந்த வழியாகத்தான் செல்லவேண்டும்.

காலையிலும், மாலையிலும் யுவதிகள் கூட்டங் கூட்டமாகப் பலவித பகட்டான ஆடைகள் காற்றில் பறக்க, குடமெடுத்துச் செல்லும் காட்சி தேவ கன்னிகைகளை நினைவூட்டாமலிராது.

நம் நிரஞ்சன் ஒரு வாலிபன்தானே! நீர் ததும்பும் குடத்தைத் தாங்காமல் நெளிந்து துவளும் இடையுடன், வலக்கரத்தை லாவகமாக வீசிச் செல்லும் யுவதிகளை இமை கொட்டாமல் பார்த்தபடியே இருப்பான். இரவிலும் இதே கனவுதான்!

அவன் அறிவை மயக்கிய அந்தச் சுந்தரிகளின், வனப்பின் சிகரம்தான் நிர்மலா! அவளுடைய தோழி ஒருத்தி, பெயர்சொல்லி அழைக்கும்பொழுது, அவள் பெயர் இதுவென்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. பிறகு, இரவும், பகலும் "நிர்மலா!" "நிர்மலா!" என்ற தியானம்தான்!

ஒருநாள் அவன் மனதில் ஒரு எண்ணம் உதித்தது. 'நிர்மலாவைப் போலவே ஒரு பதுமை சித்தரித்து விட்டால்...........?'

தவிர்க்கமுடியாத இந்த ஆசையினுல், வேறொரு கல்லை அணுகினுன் சிற்றுளியுடன். இரவு, பகல் என்ற வித்தியாசமின்றி வேலை நடக்க ஆரம்பித்தது.

நிர்மலா, தன் தோழியர்களுடன் வரும் நேரம் அவனுக்குத் தெரியும். அவர்கள் நீரெடுப்பது முதல், தலை மறையும் வரை அப்படியே பார்த்துக் கொண்டு நிற்பான்.

இடையிடையே இருவர் விழிகளும் திருட்டுத்தனமாக அடிக்கடி சந்திக்கும். அந்தப்பார்வையிலே ஏதோ ஒரு அர்த்தம் புதைந்து கிடக்கும்.

அவள் சென்ற பின்மீண்டும் சிற்பவேலை! ஒரேமாதத்தில் நிர்மலாவின் சிலை வேலை முடிந்துவிட்டது.

சிங்காரவடிவேலரின் மீதமிருந்தவேலை......? அது அப்படியேதான்!

அரண்மனைச் சிப்பந்திகள் சிலையை எடுத்துச் செல்ல வந்தனர். அப்பொழுதுதான் தன் கனவு உலகத்திலிருந்து விழித்தான் நிரஞ்சன்.

"இன்னும் கொஞ்சம் வேலைபாக்கி யிருக்கிறது. தயவுசெய்து ஒரே ஒருமாதம் கெடுகொடுக்க வேண்டும்!" என்று நிரஞ்சன் ராஜ சபையில் கெஞ்சினன்.

அரசன் மகாமுன்கோபி!

"இன்னும் வேலைதீரவில்லையா?

ராஜாங்க உத்தரவில் அத்தனை உதாசீனமா உனக்கு? ...சரி! இன்னும் ஒருமாதத்திற்குள் இங்கே கொண்டு வந்து விக்ரஹத்தை ஒப்புவிக்காவிடில் உன்னை என்ன செய்கிறேன்பார்!" என்று சீறினர் மகாராஜா.

தலை குனிந்தபடியே வெளியேறினன் நிரஞ்சன்.

சிற்பசாலை சேர்ந்ததும், 'வேலையை முடித்து விட்டு மறுகாரியம் பார்ப்ப'தென்ற முடிவோடு உளியைக் கையிலெடுத்தான். வெளியில் 'கலீ' ரென்ற சிரிப்பின் ஒலி! நிரஞ்சனின் கையிலிருந்த உளியும் நழுவி விழுந்து எதிரொலித்தது அதனுடன்.

அவசரமாக வெளியே வந்த நிரஞ்சனனின் விழிகளிலே, சிற்பசாலையையே ஊடுருவிப்பார்த்துக் கொண்டிருந்த நிர்மலாவின் பார்வை மோதிக் குனிந்தது. நிர்மலா தனியாக நின்ருள், இடையில் குடத்துடன்.

நிரஞ்சனனின் உள்ளக்கடலில் பல யோசனைகள் அலைமோதின......தனியே நிற்கும் இவள் சிரிக்கக் காரணமென்ன?...... பைத்தியமா?

அவள் உள்ளத்தை அறிந்து கொண்டான் அவன்!

"இதோ, இங்கேவந்துபார்! என் அறைக்குள்ளும் ஒரு நிர்மலா இருக்கிருள்!"

நிர்மலா மௌனமாக அவன் பின் சென்ருள். பின்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் அவர்களிருவரும் சிற்பச்

சாலையினுள் என்னென்னவோ காதல்மொழிகளை யெல்லாம் பகர்ந்து கொண்டிருந்தனர்!

தினமும் நிர்மலா தனியாகத்தான் வருவாள். சிற்பச் சாலைதான் அந்தக் காதலர்களின் உல்லாசமாளிகை. நாட்கள் வெகு விரைவில் ஓடிக்கொண்டிருந்தன.

அரசனின் குதிரை சிற்பசாலையை நோக்கி புயற்காற்றைப்போல் பறந்து வந்து கொண்டிருந்தது. பின்னல் இன்னும் இருகுதிரைகளிலும் சிப்பாய்கள் வந்துகொண்டிருந்தனர்.

சிற்பசாலையினுள் களிப்பின் வெறியில் மயங்கிக் கிடந்தனர் காதலர்கள். வெளியே "டக், டக்" கென்ற காலடியோசை! 'படீர்' என்ற சப்தத்துடன் கதவு திறக்கப்பட்டது.

எல்லையற்ற அன்பின் தழுவலிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான் நிரஞ்சன். நிர்மலா நிலம்நோக்கி நின்ருள்.

முகத்தில் தீப்பொறி பறக்க தன்முன்னே வந்துநிற்கும் அரசனைக்கண்ட நிரஞ்சன், திகைத்துப் போய்விட்டான். "......வேலையெல்லாம் சுத்தமாக முடிந்து விட்டது...... இதோ கொண்டுவரத்தான் இருந்தேன்......" என்று பய பக்தியோடு கூறினன்.

இதற்குள் குரோதம் நிரம்பிய பார்வையினுல் அந்த சிற்பச்சாலை முழுவதையும் ஆராய்ந்து கொண்டிருந்த அரசனின் விழிகள், நிர்மலாவின் பதுமையைப் பார்த்து விட்டன.

"ஓஹோ! இதென்ன, காதலியின் பதுமையோ? இதனுல்தான் வேலை தாமதமாகிவிட்டது போலும்!" என்று கூறிக்கொண்டே அச்சிலையை நோக்கி அலட்சியமாக ஒரு உதைவிட்டான் அரசன்.

அந்தச்சிலை கீழே விழுந்து 'படீ' ரென்று இரு துண்டுகளாக உடைந்துவிட்டது. அதைப்பார்த்து "கட, கட" வென்று ஒரு பேய்ச்சிரிப்புச் சிரித்தான் அரசன்.

தான் அரும்பாடு பட்டுச் சித்தரித்த, தன் காதலியின் சிலையை—அதுவும், அவள் எதிரிலேயே—இப்படி அவமதித்தால்......?

அவனால் இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை. நிரஞ்சனின் இரத்தம் முழுவதும் குபீரென்று தலைக்கேறி விட்டது.

ஆத்திரமூட்டப் பட்ட சிம்மத்தைப் போல், தான் இன்னது செய்கிறோம் என்பதையும் மறந்து அரசனை நோக்கிப்பாய்ந்தான் சிற்றுளியுடன்.

உரம் பொருந்திய அரசனின் கைகளால் உந்தித்தள்ளப்பட்ட நிரஞ்சனின் பிடறியிலே, சிப்பாயின் உடைவாள் மின்னல் போல் ஊடுருவிப் பாய்ந்தது.

உடலறுந்து நிரஞ்சனின் சிரம், உடைந்து கிடந்த நிர்மலாவின் சிலைத்துண்டங்களின் மீது விழுந்து உருண்டது. அவன் உடலிலிருந்து பீரிட்டெழுந்த செங்குருதி வெள்ளத்திலே நனைந்து தன்னைப் புனித மாக்கிக் கொண்டான் சிங்காரவடி வேலன்.

* * *

அன்று இளங்கர்ப்பிணியாக இருந்த நிர்மலாவின் சந்ததி வழி வந்தவன் தான், நான்! சிற்பத்தொழிலில் எங்களுக்குள்ள பரம்பரையான அனுபவத்தின் அறிகுறியாக இந்த சிதைந்துபோன சிலையை ஒன்று பொருத்தி வைத்துக் கொண்டு, இச்சிற்பசாலையை நடத்திவருகிறேன்'' என்று கூறி முடித்தார் அந்தப் பெரியவர்.

சென்று வருவதாக விடை பெற்றுக் கொண்டு எழுந்து வெளியே வந்தோம். எங்கள் உள்ளத்தில் மூடிய ஒருவித அந்தகாரத்தைப் போலவே, உலகமும் இருளில் அமிழ்ந்துகிடந்தது.

லட்சியச் சிதைவு

'வல்லிக் கண்ணன்'

இந்தப் பிரவிருத்தியினுல் வரும் பணத்தைக் கொண்டு கோட்டை கட்ட விரும்பவில்லை சாரதா. இதில் பணம் சம்பாதித்து வாழ்வைக் கழிக்க வேண்டிய அவசிய மும் அவளுக்கு இல்லை. அவள் தந்தை அவளுக்குப் போதிய அளவிற்கு மேலாகவே சொத்தும் சுதந்திரமும் அளித்திருந்தார்.

சாரதா பணக்காரி மட்டுமல்ல; நன்கு படித்தவ ளாகவும் இருந்தாள். தற்கால மோஸ்தரிலே படித்த பெண்ணுதலால் அதற்கு ஏற்றபடி கல்யாணம் வேண் டாம் என்று தீர்மானித்து விட்டாள்.

இதற்கு அவளைப் பிடித்திருந்த நாகரிகப் பைத்தியம் மட்டும் காரணமன்று, லட்சியப் பிசாசு வேறு அவளைப் பற்றிக்கொண்டு நன்ருக ஆட்டி வைத்தது. ஸ்திரீகள் சுதந்திரம், சம உரிமை, ஸ்திரீ சமூக முன்னேற்றம் இவை போன்ற விஷயங்களெல்லாம் தன் கவனத்தில் பதிந்திருந்த போதிலும் சாரதாவின் மனுேலோகத்தில் சர்வாதிகாரம் நடத்திய விஷயம் இதுதான்.

அந்தக் காலத்தில் பத்திரிகைகளில் அடிபட்ட சர்ச் சைகளிலெல்லாம் அலாதியானதும் ருசிகரமானதுமான செய்தி ஒன்று எல்லோரது வம்புப் பேச்சையும் தன் பக்கமே கவர்ந்திருந்தது. 'குடும்ப ஸ்திரீகள் சினிமாவில் நடிக்கலாமா, கூடாதா?' என்ற பிரச்னை ஸ்திரீ சமூகத்தில், முக்கியமாகக் கலாசாலையினின்றுப் வேளியேறிய நாகரிக நங்கையர் சங்கங்களில், ஒரு புரட்சி உண்டு பண்ணிற்று என்றே சொல்ல வேண்டும்.

நடுத்தெரு அம்மாமிகள் கழகம் அதை எதிர்த்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியதுதான் தாமதம்; ஊரிலுள்ள

நங்கையர் நாகரிகக் குழாமும், கலாசாலைக் கன்னியர் கழகமும், சுயமரியாதை மங்கையர் குழுவும், சுதந்திர மங்கையர் கூட்டமும் பிரச்னையை ஆதரித்து ஆர்ப்பாட்டங்கள் செய்தன. இன்னும் மூலை முடுக்குகளில் பெயர் தெரியாது பதுங்கிக் கிடந்த பல கும்பல்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டன.

இவற்றுலெல்லாம் யாதொரு பலனும் ஏற்படவில்லை. ஆனல் களங்கமற்ற நீலவானிலே திடீரென மேகங்கள் சூழ்ந்து மின்னல் நாட்டியமாடக் கர்ஜிக்கும் இடியோசை போல, விசேஷமற்றுச் சென்ற உலக அரங்கிலும் ஒரு செய்தி திடீரெனப் பரவி மக்களைக் கலங்க அடித்தது.

'சாரதா சினிமாவில் சேர்ந்து விட்டாள்,' 'உன்னத குல ரத்தினமாகிய சாரதா வெள்ளித் திரையில் விரைவினில் மின்னுவாள்' என்பனபோன்ற விளம்பரங்கள் சமூகத்தையே கலக்கிவிட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

சாரதா, லட்சியப் பித்துப் பிடித்தலைந்த உயர்குடும்ப நாகரிக நாரீமணி, தன் சுதந்திரப் போக்கிலே என்ன தான் செய்வாள் என்று சொல்ல முடியாதெனப் பேசி வந்தவர்களுக்குக் கூட இது ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவர்கள் முற்றும் எதிர்பாராத விஷயம் அவள் சினிமாவில் நடிப்பாள் என்பது.

அம்மாமிகள் முகத்தைச் சுளித்து, 'காலம் போகிற போக்கு' என முத்தாய்ப்பு வைத்தனர். ஊர்ப் பெரியவர்களோ 'உதவாக்கரை' எனக் கையைக் கழுவினர். சாரதா விவாகம் செய்து கொள்வதில்லை என்று கூறிவிட்டாலும், நெஞ்சம் கலங்காமல் திரிந்த சில வாலிபர்கள் இச் செய்தியைக் கேட்டு, 'லட்சியமாவது மண்ணுங்கட்டியாவது' என மனமிடிந்து நழுவினர்.

பிறருடைய அபிப்பிராயங்களைச் சட்டை செய்பவளல்ல சாரதா. அவளுக்குத் தனது லட்சியமே குறி. இப்பொழுதும் தன் மனம் போன போக்கிலேயே நடந்து வந்தாள்.

*   *   *

சாரதா சினிமா வானில்—வெள்ளித் திரையில்—நக்ஷத்திரமாகப் பிரகாசிக்கத் தயாராக இருந்தாள் என்பதை அறிந்து அவள் விருப்பத்தை நிறைவேற்றச் சந்தர்ப்பம் அளித்த பெருமை ‘புதுமை பிக்சர்ஸா’ரையே சேர வேண்டுமென்றாலும் அதற்கு முக்கிய காரணஸ்தர் டைரக்டர் ராகவன் அவர்களே.

டைரக்டர் ராகவன் சினிமாக் கலைக்காகவே அரும்பாடு படுபவர். அவர் சினிமாத் தொழிலைக் கலைநோக்குடன் மேற்கொண்டவர். அவருடைய சிருஷ்டிகள் எவ்வளவோ வெற்றிகரமாக விளங்கினும் ராகவன் மகிழ்வடையவில்லை. “இன்னும் மக்கள் சினிமா உலகை இழிவாக எண்ணுகின்றனரே. இதைப் போக்க வழியில்லையா!” என ஏங்கினார்.

‘இல்லாமலென்ன! குடும்ப ஸ்திரீகளும், உயர் குலத்தவர்களும் நடிக்க ஆரம்பித்தால் இந்த மட்டமான அபிப்பிராயம் மறையாமல் போகுமா?’ என அவரது அந்தராத்மா சொல்லியது.

அதன் எதிரொலியே போலத் தொனித்தது ‘மங்கையர் கழக’ ஆண்டு விழாவிலே நங்கையரின் லட்சியம் பற்றிப் பறையறைந்த சாரதா தேவியின் சொல்மாரி. பத்திரிகையில் சாரதாவின் பிரசங்கத்தைப் படித்த டைரக்டர் ராகவன் ஒரு துள்ளுத் துள்ளினார். தாம் கனவு கண்டது உண்மையிலேயே பலித்துவிடும் போலிருக்கிறதே என உவகை கொண்டார்.

அவரது பகீரதப் பிரயத்தனங்களின் பலனாகச் சினிமா வானிலே, ஈடு இணையற்ற ஒரு வெள்ளி முளைப்பு எழுந்தது. ‘இது என்றும் காணவல்ல சாதாரண வெள்ளியன்று; வானிலே திடீரெனத் தோன்றிப் பிரகாசிக்கும் வால்நட்சத்திரம்’ என்றே நம்பினார் டைரக்டர் ராகவன்.

உயர்குடும்ப மங்கை சாரதாதேவி நடிக்கும் ‘லட்சியக் கனவு’ என்ற படத்திற்கு பிரமாதமான புகழ்மாலைகளும், விளம்பரங்களும் படம் வெளி வருமுன்பே அடிபட்டன. எல்லோரும் சாரதாவின் நடிப்பைப் பற்றிப் பேசியும் எழுதியும் வந்தனர்.

உண்மையிலேயே சாரதா அதிக சிரத்தையுடன் நடித்து வந்தாள். அவள் புகழும் பெயரும் சம்பாதிக்க எண்ணி நடிக்கவில்லை. கலையில், கலைக்காகவே, கலை ஆர்வத்துடனேயே தன் முயற்சிகளைச் செய்யலானாள்.

அன்று.........

'லட்சியக் கனவு' வெற்றி முழக்குடன் வெள்ளித் திரையில் விஜயம் செய்யும் நன்னாள்!

தியேட்டரிலே கூட்டத்திற்குக் கேட்பானேன்?' 'டிக்கெட்' வாங்குவதற்குள் எவ்வளவோ திண்டாட்டம்.

இன்னும் ஒரு விஷயம் ரசிகர்களுக்குத் தெரியாது. தெரிந்தால் அதன் விளைவு என்னவாகும் என்று சொல்ல முடியுமா? சாரதாவே அந்தப் 'படம் பார்க்க'க் கொட்டகைக்கு வந்திருந்தாள். ஆம்; படம் பார்க்கத்தான் வந்தாளே தவிரப் பட விளம்பரமாக அல்ல.

முதல் நாளன்றே அவள் படம் பார்க்க வந்ததில் ஒரு விசேஷம் உண்டு. படத்தைப் பார்த்து ஜனங்கள் தன்னைப் பற்றியும் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று அறிய வேண்டுமென்னும் ஆவல் அவள் மனத்திலே வேலை செய்தது. பொதுஜன அபிப்பிராயத்தை அளந்து காட்டும் 'தெர்மா மீட்டர்' தரை மகா ஜனங்களே என்பதைச் சாரதா அறியாதவளல்ல. அந்தத் தியேட்டரிலே அதற்குச் சரியான வசதி உண்டு. அங்கே ஸ்திரீகளுக்குச் சலுகை காட்டும் முறையில் தரைக்குப் பதிலாகப் பெஞ்சுகளே போட்டிருந்தார்கள். அதன் பக்கத்தில் சற்றுப் பள்ளத்திலே ஆண்கள் அமரும் தரை அமைக்கப்பட்டிருந்தது. கீழே தரையில் என்ன பேசினாலும், என்ன செய்தாலும், அது பெண்கள் கவனத்தில் படாமற் போகாது.

ஆகவே சாரதா அதிக டாம்பீகமன்றிச் சாதாரண உடையிலேயே ஸ்திரீகள் பெஞ்சுப் பகுதியிலே அமர்ந்திருந்தாள்.

படம் ரஸிகர்களது மனத்தைக் கவர்ந்தது. எல்லா அம்சங்களிலும் 'லட்சியக் கனவு' ஒரு சிறந்த படமாக

விளங்கியது. எல்லோரும் உயர்தரமாக நடித்திருந்தனர். எதிர் பார்த்ததைவிட அற்புதமாக ஜமாய்த்திருந்தாள் சாரதா. அவளது நடிப்புத் திறமையைப் பற்றிப் பேசாத வர்களே இல்லை.

*　　　*　　　*

கொட்டகையில் பரவிய இருளை ஓட்டி யடித்து, மகிழ்வுடன் பல்லைக் காட்டின இடை வேளையின் மின்சார விளக்குகள்.

சாரதா தரையை நோக்கினள்.

பலர் வெளியே எழுந்து போவதும் வருவதுமாக இருந்தனர். தரையில் இருந்தவர்களில் சிலர் கொட்டாவி விட்டனர். சிலர் பேசினர்.

"உம்; பரவாயில்லை" என்ற குரல் கொட்டகையில் மிதக்கும் சுருட்டுப் புகையுடன் கலந்து வந்தது.

"எது எப்படிப் போனலும் குட்டி பரவால்லேடா" என்றன் ஒரு 'ரஸிகன்'.

"ஆமடா; புதுசா ஒரு குட்டி ஆடுருளே அவ லட் டுன்ன லட்டுத்தான்" எனப் பல்லைக் காட்டினன்; தன் வாயிலிருந்த சுருட்டை எடுத்துக் கையிலேந்திய புண் ணியவான்.

சாரதாவின் மனம் திடுக்கிட்டது. அர்த்தமற்ற கல வரம் ஊசலாடியது. அலைபோல் புரண்ட அவளது பார்வை வேறு இருவர்மீது பாய்ந்தது. தம் அபிப்பிரா யங்களைத் தயங்காமல் வெளியிடுவோர் தரை மகா ஜனங் களே என்றலும் அவர்கள் இவ்வளவு துணிச்சலாகப் பேசுவார்களென்று சாரதா எதிர்பார்க்கவில்லை.

ஒருவன் தன் பக்கத்தில் இருந்தவன் தோள்மீது கையைப் போட்டபடியே, கண்களைச் சிமிட்டிக்கொண்டு சொன்னன்: "அடே! அந்தச் சாரதா.........அடடா, அவள் மூக்கும், முழியும், அவ கண்ணைச் சுழட்ற சுழட் டும்........."

இவ்வாறு வர்ணிக்கும் பொழுது விளக்குகள் அணைக்கப்பட்டன. மறுபடி இருள் பரவியது. அப்போது சாரதாவின் மனத்திலே சாந்தியைப் புகுத்தியதுபோல் இருந்தது. ஆனாலும் அவளுள்ளேயே ஓர் எரிமலை அக்கினிக் குழம்பைக் கக்கும் நிலையில் கொதிப்படைந்திருப்பதை உணர்ந்தாள்.

சாரதா பிறருடைய அபிப்பிராயங்களை அலட்சியம் செய்யும் குணமுடையவள்தான். ஆயினும் இந்தப் பாணங்களை அவளால் பொறுக்க முடியவில்லை, நாகரிகம் அவளை ஓரளவிற்கு 'ஆண்மை' அங்கி அணிந்தவளாக மாற்றிவிட்ட போதிலும் அவளது பெண்மையை முற்றும் அழித்துவிட வில்லை. கலாசாலைப் படிப்பாலும் கலங்காத திண்மை பெற்ற பெண் உணர்வு அவள் கேட்ட சொற்களால் கலங்கியது.

சாரதா தன்னையே நிந்தித்துக்கொண்டாள். 'வெட்டிச் சனியனை ஏன் விலைகொடுத்து வாங்கினேம்?' என ஏங்கினள். இன்றுதான் தனது உண்மைத் தன்மையை உணர்ந்தாள். அதற்குமேல் அங்கிருக்க அவளால் முடியவில்லை. எழுந்து வெளியே நடந்தாள்.

* * *

சாரதாதேவி தியேட்டரிலிருந்து வெளியே வருவதற்கும், வாசலில் வந்து நின்ற காரின் கதவைத் திறந்து டைரக்டர் ராகவன் இறங்குவதற்கும் சரியாக இருந்தது.

"ஹலோ, குட் ஈவ்னிங்!" என்று உல்லாசமாகக் கைகளை உயர்த்தி அழைத்த ராகவனைக் கண்டதும் சாரதாவின் கலக்கம் அதிகமாகிவிட்டது. அவள் ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து வீடு செல்லவே எண்ணினள்.

தன் குறுக்கே வந்து விழுந்த சனியனைப்போல் அவ்வேளையில் தன் முன் நின்ற ராகவனைக் கண்டதும் அவள் மனம் அடைந்த வேதனை முகத்திலே பிரதிபலித்தது. கைகளை நெரித்தாள்.

டைரக்டர் சாரதா தேவியை இந்நிலையில் பார்ப்போமெனக் கனவிலும் கருதவில்லை. வெற்றியினல் உண்டான

பெருமை யுணர்ச்சியோடு குதூகலம் பொங்க நிற்கும் ஒரு நடிகையைக் காணலாமென்றே அவர் மனப்பால் குடித்தார். தம் ஏமாற்றத்தைக் காட்டாமலே, "காரிலே ஏறிக்கொள்ளுங்களேன்; வீடு வரை கொண்டு வந்து விடுகிறேன்" என்றார்.

சாரதா அந்நிலையில் அவரது வேண்டுகோளை ஏற்கவா, மறுத்து விடவா என்று நிச்சயிக்கும் திறமின்றித் தயங்கினாலும் முடிவில் காரில் ஏறிக் கொண்டாள்.

டைரக்டர் தம் கடமையை உணர்ந்தவர்போல, தமது முயற்சியின் வெற்றி தொனிக்கும் குரலில், "என்ன தேவி, அடுத்த படம் எப்பொழுது ஆரம்பிக்கலாம்?" என்று கேட்டார்.

சாரதாவின் ஆத்திரமெல்லாம் சூடான வார்த்தைகளாகப் பொங்கிப் பாய்ந்தன.

"ஹூம்......படம்!......மனித உள்ளுணர்வையும், போராட்டங்களையும் உணராது புற நிலைகளையே பிடித்துக் காட்டும் படத்திற்குள்ள உணர்வுதான் உங்களுக்கும் இருக்கிறதா? நீங்கள் கலை, 'டெக்னிக்', அது, இது என்று விளங்காத பாஷையில் பிதற்றலாம். ஆனால் சமூகம் அவற்றை உணரவில்லை. சாதாரண மக்கள் உங்கள் அபார முயற்சிகளை அறிய முயல்வதில்லை. உன்னதக் கலையை ஏற்றுக் கொள்ளும் நிலையில் அவர்கள் மனம் பக்குவம் அடைந்து விட்டதா? அவர்கள் கண்ணிலே நீரின்மேல் நிற்கும் தாமரை மலர் தென்படக் காணோம். பாசிதான் பளிச்சென அவர்கள் மனத்தில் பதிகின்றது.

"நானும் கோட்டைகள் கட்டினேன். லட்சியக் கனவுகள் கண்டேன். வானத்துச் சந்திரனை எட்டிப் பிடித்து விடலாம் என்றுதான் கிளம்பினேன். ஆனால் என் கைக்கு எட்டியதோ........."

சாரதாவின் பேச்சு முடிவதற்குள் வீட்டு வாசலில் கார் நின்றது. விர்ரென இறங்கிய அவள், சிதைந்த லட்சியத்திற்கு வணக்கம் செலுத்துபவள் போல், "டைரக்டர் ஸார், நமஸ்காரம். சினிமாவுக்கும் எனக்கும் இனி

அவ்வளவுதான். போய் வாருங்கள்" என்று சொல்லி வீட்டினுள் மறைந்து விட்டாள்.

டைரக்டர் ஒன்றும் விளங்காமல் 'டக்' என மோட்டார்க் கதவை ஆத்திரமாகச் சாத்தினர். அதைவிட ஆவேசமாக முணுமுணுத்தது அவரது வாய்: "சட்! இந்தப் பெண்களை நன்ருகவே தெரிந்து கொள்ள முடிகிற தில்லை அவர்கள் குரங்குப் புத்தியையும் உணர முடிவ தில்லை" என்று.

தாயுள்ளம்

ரா. வெங்கடாசலம்

உலகப் பற்றை அறுத்துக்கொண்ட ஒரு துறவியின் மனோ நிலையை ஒத்திருந்தது மீனாவின் மனம். திரும்ப வும் ஒரு தடவை தன் சிசுவை முகத்தோடு முகம் அழுத்தி மாறி மாறி முத்தமிட்டாள். அதனுடைய பளிங்கு போன்ற கண்களை உற்று நோக்கினாள். அவளு டைய கண்களி லிருந்து கண்ணீர் குமுறியது. அப்படியே மார்போடு அணைத்து ஏங்கினாள்.

அப்பொழுதுதான் கந்தன் பணத்தை எண்ணிச் சரி பார்த்து முடிந்தான். அதை மடியில் நன்றாகத் திணித்துக் கொண்டே மீனாவின் மார்பில் ஒட்டியிருந்த குழந்தையின் முகத்தை எறிட்டுப் பார்த்தான். அவனால் பொறுக்க முடியவில்லை. 'கோ' வென அழ ஆரம்பித்துவிட்டான்.

"ஐயா, ஏன் இப்படி கவலைப்பட வேணும்? எங்கள் குழந்தையினும் பதின்மடங்காய்ப் பார்த்துக் கொள் வோம். நீங்கள் கொஞ்சமும் வருத்தப்பட வேண்டாம்" என கோமதி தேறுதல் சொன்னாள்.

"அம்மா, இந்தக் குழந்தைக்குத் தாயும் தகப்பனும் நீங்கள் இரண்டு பேருமதான். உங்கள் கையில் ஒப்பு விக்கிறோம். இதைப் பெற்ற குழந்தை போல கவனித்துக் கொள்ளுங்கள். நான் உங்கள் இரண்டு பேரையும் கெஞ் சிக் கேட்டுக் கொள்ளுவது இவ்வளவுதான்" என்று கந்தன் பொருமிக்கொண்டு சொன்னான்.

"அம்மா, குழந்தையைப் பற்றி நீங்கள் கவலையே பட வேண்டாம். குழந்தை இனி எங்களுடையது. ஒரு ஈ எறும்புகூட மேலே உட்காராமல் பார்த்துக் கொள் வோம்" என சீதாராமன் தேறுதல் சொன்னான்.

என்ருலும் பெற்ற தாய்க்கு அவள் தன் குழந்தையை உயிரோடு பிரியும்போது சமாதானம் கூற முடியுமா? அவளுடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் பெரியதொரு பிரிவின் சோகத்தை வெறும் வார்த்தைகளால் மாற்றிக்கொள்ள முடியுமா? கண்ணீரும் கம்பலையுமாய் ஏந்திக் கொடுத்தாள், தன்னுடைய குழந்தையை. தங்க விக்கிரகம் போன்ற அந்த உருட்டுத் திரட்டான குழந்தையை கோமதி தனது இரு கைகளாலும் ஏந்தி வாங்கிஞள். அவளுடைய முகம் இழந்த பொருளை மீண்டும் கண்டெடுத்த பேருணர்ச்சியைக் காட்டிற்று. தன் படர்ந்த முகத்தில் அந்த சிசுவின் முகத்தை அழுத்தி "என்னைப் பெற்ற அம்மா" எனக் கொஞ்சிஞள். சீதாராமன் புன் சிரிப்புடன் அந்தச் சிசுவின் தலையைத் தடவிக் கொடுத்தான் அவனுடைய உள்ளம் குளிர்ந்தது.

கோமதி குழந்தையுடன் உள்ளே போகும்போது, "அம்மா! ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்" என்று சொல்வதுபோல அவர்களை வழி யனுப்பும் பார்வையால் நோக்கிஞள்.

மீஞவும் கந்தனும் தாங்கள் பெற்றதற்குப் பலஞக பத்து ரூபாயும், சிசுவை பிரிந்த வருத்தமும் ஏந்தி நடந்தார்கள்.

வழியனுப்பிவிட்டு உள்ளே முதலில் போனவள் கோமதி. அடுத்தது சீதாராமன். அவன்போய்ப் பார்த்த போது, கோமதியின் மடியிலிருந்து அந்தச் சிசு அவளுடைய மார்பைக் கவ்வி உறிஞ்சிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

"என்னமோ தெய்வந்தான் இதை நம்மிடம் சேர்த்திருக்கிறது. உரித்து வைத்தாற்போல் நம்ம பிள்ளையே பிள்ளைதான்?" என்று கோமதி சிரித்துக்கொண்டே சொன்ஞள்.

"கோமதி! இதைப் பார்த்ததி லிருந்து என்மனதில் எப்படியோ பதிந்துவிட்டது. இனியாவது நாம் பறி கொடுத்த நம் குழந்தையை மறந்திருப்போமல்லவா!" என அவன் சிரித்தான்.

பதினைந்து தினங்களுக்கு முன் கண்மூடின அவர்களுடைய சிசுவின் ஞாபகத்தை மறக்க அந்த இடத்தில் இந்தக் குழந்தை வந்து அதனுடைய பாலை ருசித்தது.

அந்த ஊரை விட்டு விட்டு அடுத்த ஊருக்கு நடந்தார்கள் கந்தனும் மீனுவும். பிழைக்க வந்த ஊரில் குழந்தையை விட்டுப்பிரிந்த வருத்தம் ஒரு புறமிருப்பினும், அதாவது நிம்மதியாக இருக்கட்டும் என்னும் திருப்தி மற்றொருபுறம் இருந்தது. கந்தன் மனதில் மட்டும், தான் ஒரு ஆண்பிள்ளையாகப் பிறந்து ஒரு சிசுவையும் மனைவியையும் போஷிக்க இந்த அகண்டப் பிரபஞ்சத்தில் ஒரு சிறிய இடமு மில்லாமல், இப்படித்தடுமாறி இருக்கிறோமே என்னும் வருத்தம் மிகப் பெரிதாக இருந்தது. அதை எப்படி நினைந்து உருகுவது? விதியின் மேல் பழியைத் தூக்கிப் போடலாமா? அல்லது தன்னுடைய செயலற்றதனமா? இல்லையேல் உலகமே புறக்கணிக்கும் தான் ஒரு துர்பாக்கிய மனிதனா ?—அவன் சிந்தனை பலவாறாக சுழன்றது.

2

கந்தனும் ஒரு தொழிற்சாலையில் வேலைபார்த்து ஏதோ கால்வயிற்றுக் கஞ்சியாவது நிம்மதியாகக் குடித்து வந்தவன் தான். ஆனால் 'ரிட்ரேச்மெண்டு' என்பார்களே—ஆளைக்குறைத்தல்-அதில் அவனும் ஒருவனானன். அதையே கதி என எதிர்பார்த்து வாழ்ந்த அவனுக்கு அதுவும் இல்லாது போகவே வேறு என்ன செய்வது? வேறு ஒரு இடமும் கிடைக்கவில்லை. குடியிருந்த அந்தச் சிறுகுடிலையும்—விட்டு விட்டு இப்போது வேற்றூரில் பாதையின் ஓரத்தில் கைக் குழந்தையை மத்தியில் போட்டுகொண்டு அப்பனும், அம்மையும் படுத்திருக்க நேரிட்டது.

நினைத்து வந்தபடி வேலை கிடைக்கிறதா? வேலையில்லாமல் எத்தனை நாள் மதுரையில் திரியமுடியும்! வருவாயில்லையே என வயிற்றுப் பசி பார்த்துக் கொண்டிருக்கிறதா?

மீனா குழந்தையை ஏந்தி கடைத் தெருவில் பிச்சை எடுத்துப்பார்த்தாள். அதற்குள் அவள் அடைந்த ஏச்சு

பேச்சு, அப்பா! அவைகளைத் தன் விதிப்பயன் எனநினைத்து சகித்துக்கொண்டாள்.

"என்னடா, முறட்டுத் தடிராமனா இருக்கே ஒரு வேலே கீலே கிடையாதோ? வந்துட்டான் ஐய்யா, சாமி! என" என்று எத்தனை வாழ்த்துதலைக் கந்தன் அடைந்தான்! என்றாலும் பிச்சைக்காக வெளியேறியபின் அவைகளைப் பொருட்படுத்த முடியுமா?

கந்தன் ஒருநாள் தன் மனைவிக்கும் குழந்தைக்கும் விஷம் வைத்து விட்டுத்தானும் இந்தப் பொல்லாத உலகத்திலிருந்து விடுதலை பெற்றுவிடலாமா வெனக்கூட நினைத்தான். என்றாலும் அவ்விதம் செய்யத் துணிவு வரவேண்டுமே" அந்தக்குழந்தையின் பால் முகம் அவ்விதக் கொடூர எண்ணத்தை உடனே மாற்றி விடும்.

அன்று இரவு பேயிரைச்சலுடன் கொட்டிய மழை மிகவும் கடுமையாக இருந்தது. வானத்தை கூரையாகக் கொண்டு வழிப்பாதையில் படுத்திருந்தது கூட தெய்வத்திற்குப் பொறுக்காமல் அவர்களை மிகவும் திண்டாடச் செய்தது. கனத்தமழையில் மீனா என்ன செய்வாள்? கந்தல் துணியும் அவளுடைய கைகளும் சிசுவை அந்த மழையிலிருந்து தடுக்க முடியுமா! "ஐயோ என் பிள்ளை நனையுதே" என்று தன் மார்போடு அணைத்து மறைத்தாள். "இந்தா இதையும் போட்டுப் போத்திக்கோ" எனத் தன் மேல் துண்டை எடுத்துக் கந்தன் அந்தச் சிசுவை போத்தினான்.

மழையில் நனைய நனைய அவர்களுடைய உடல் மரமரக்கச்செய்தது. ஒருபக்கம் 'பளிச்' செனு மின்னலும் 'திடும்' எனப்பேரிடியும் அவர்களை நிலை கலங்கச் செய்தன. நடுநடுங்கினார்கள்.

"அடி மீனு, வருகிறாயா; அதோ அந்தவீட்டுப் பக்கமாவது போய் ஒண்டிக்கொள்ளலாம்" எனக் கந்தன் தடுமாறித் தடுமாறிச் சொன்னான். "எப்படிப் போகிறது என் பிள்ளையைவைத்துக்கொண்டு" என இன்னும் இறுக்கமாக அந்தக் குழந்தையை அணைத்தாள்.

"வா ; என்பின்னுலே!" எனச்சொல்லிக் கொண்டே கந்தன் நடந்தான். அந்த பயங்கர இருளேயே பிளந்து கொண்டு போவதுபோல் மீனு பின் தொடர்ந்தாள். மழைக்கு ஒண்டப்போன வீட்டிலேயே குழந்தையை வளரவிட்டு விட்டு இப்போது வேருேர் ஊருக்கு நடந்தார்கள்.

3

ஒரு ஆலமரத்தடியில் மீனுவும், கந்தனும் வழிநடை ஆயாசம் தீர உட்கார்ந்தார்கள். ஒரு பக்கம் தண்ணீர் நிறைந்து தளதள வென்றிருக்கும் கண்மாயும், மற்ருேர் புறம் பச்சைப் பசேலென்றிருக்கும் வயல்களுக்கும் ஊடே இருந்த ஒருவழி நடைப் பாதையில் அந்த ஆலமரம் இருந்தது. அதனடியில் நிலக்கடலே, கொய்யாப்பழம் முதலியவைகளே வைத்து ஒரு கிழவி விற்றுக்கொண்டிருந்தாள். கந்தன் அவளிடத்தில் காலணுவிற்கு நிலக்கடலே வாங்கி வந்தான். இருவரும் அதைக் கொரித்தார்கள்.

மீனுவின் சிந்தனேகளும், கந்தனுடைய நோக்கமும் சுயநினேவே இல்லாமல் இருந்தன. கடலேயை அவள் மென்றபோது ஏதோ 'மெஷின்' மாதிரி வாய் அசைந்து கொண்டிருந்ததே தவிர அதன் தேவையையும் ருசியையும் உணரவில்லே. திடீரென்று மீனுவிற்கு ஒரு நினேவு வந்தது. இந்த நிலக்கடலே எப்படிக் கிடைத்தது? குழந்தையை விற்றபணத்திலிருந்து தானே? இப்படி நினேத்ததும் அவள் மனதில் வேல்கொண்டு சொருகியதுபோல் இருந்தது. பக்கத்திலிருந்த கழனியின் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினுள். ஒரு உழவன் மனேவி தன் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருப்பது அவள் கண்களில் பட்டது.

மீனுவிற்கு நிலக்கடலே தின்ன ஓடவில்லே. மேலே நிமிர்ந்து பார்த்தாள். குரங்குக் கூட்டம் 'கீச்சு பூச்' சென ஒரு கிளேயிலிருந்து மற்ருேர் கிளேக்குத் தாவிக் கொண்டிருந்தது. ஒரு குரங்கு எத்தனே தடவை தாவினுலும் இருகத் தழுவிக்கொண்டிருந்த தன் குட்டியை விட்டபாடில்லே.

அந்தப் பாதையில் ஒரு மனிதன் பசுமாடு ஒன்றை இழுத்துக்கொண்டு போனுன். அதனுடைய கன்று அதைப் பின் தொடர்ந்தே ஓட்டமும் நடையுமாகச் சென்றது.

மீனு இந்தக் காட்சிகளை கவனித்தபோது தன்னுடைய பொறுப்பற்ற தனத்தில் பெரிய தவறுதல் இருப்பதாக உணர்ந்தாள். "இந்தாங்க!" என கந்தனைக் கூப்பிட்டாள்.

எதையோ நினைத்துக்கொண்டு கடலையை உரித்து வாயில் போட்டு மென்று கொண்டிருந்த கந்தன் "ஏன்?" என்று கேட்டான்.

"என் பிள்ளை......" என்ருள் மீனு. அவள் வார்த்தை மிகவும் பதட்டமாக இருந்தது.

"உன் பிள்ளையா? அதுதான் தரித்திரத்திலிருந்து விடுதலை அடைந்திருக்கிறதே!"

"அதோ அழுகிறதே!" என்று மீனு மெய்ம்மறந்து கூறினுள்.

"என்ன மீனு! பயித்தியமா உனக்கு? உன் குழந்தையை மறந்துட்டு எழுந்து நட நாம் போவோம்" என பேச்சை மாற்றி எழுந்து நடந்தான்.

"நான் என் பிள்ளையைவிட்டு விட்டுத் தனியாக வர முடியாது. வாங்க திரும்பி" எனக் கூவினுள்.

கந்தன் ஒன்றும் சொல்ல முடியாமல் பேசாமல் நின்ருன்.

"ஐயோ! நிற்காதீங்க; வாங்க போவோம். இன்னும் எக்கேடு கெட்டாலும் குழந்தை நம்முடன்தான் இருக்க வேண்டும். இப்போது அது என்ன செய்யுதோ! வாங்க, ஐயோ! வாங்களேன்!......" படபடப்புடன் கூறிக்கொண்டே வந்த திக்கை நோக்கி நடந்தாள். கந்தன் மௌனமாகப் பின் தொடர்ந்தான். அந்த வீட்டு வாயிற்புறத்தை அடைந்ததும் "அம்மா!" என்று ஆவேசத்துடன்

கூப்பிட்டாள் மீனு. கோமதி அப்பொழுதுதான் குழந்தைக்கு நல்ல உடை உடுத்தி முகத்திற்கு மாவு தடவி ஊஞ்சலில் கிடத்தித் தாலாட்டுச் சொல்லிக் குழந்தையை தூங்கப் பண்ணிக்கொண்டிருந்தாள். தெருப்பக்கத்தில் திரும்பத் திரும்ப "அம்மா!" என்னும் கூக்குரல் எழுந்து கொண்டே இருந்தது. கூர்ந்து கவனித்த கோமதி "யார் அது?" என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தாள்.

"அம்மா! என் பிள்ளையைக் கொடு. இதோ உன் பணம்" என்று திண்ணையின்மீது ரூபாய் முடிப்பை அவிழ்த்துக் கொட்டினாள்.

"என்னம்மா! விற்ற உன் பிள்ளையையா?" என்று வியப்புடன் கேட்டாள் கோமதி.

"ஆமாம்! அதை என்னால் மறந்திருக்கக்கூடவில்லை" என்றாள் மீனாட்சி.

"வேண்டுமானால் பார்த்துவிட்டுப் போ" என்று கூறியவண்ணம் உள்ளே சென்று குழந்தையை எடுத்து வந்தாள் கோமதி.

மீனுவின் உள்ளமும், உணர்ச்சியும் குழந்தையின்மீது ஒரே சமயத்தில் சென்றன. அப்படியே தாவி குழந்தையை வாங்கி மார்புடன் அணைத்துக்கொண்டாள். இரு விழிகளிலும் வழிந்தோடிய கண்ணீர் அருவி குழந்தையின் உடம்பை நனைத்துவிட்டது.

"அம்மா! உங்கள் பணத்தை எடுத்துக்கொள்ளுங்கள்! குழந்தையைத் தரமுடியாது" என்று கூறியபடி குழந்தையுடன் நடந்தாள் மீனு.

"என்னப்பா கந்தா! உன் மனைவி செய்வது சரிதானா?" எனக் கேட்டாள் கோமதி, கந்தனை நோக்கி.

"பெத்த மனம் பொறுக்குமா குழந்தையைப் பிரிந்திருக்க? தெரியாத்தனமா இந்த வழிக்குச் சம்மதித்த எங்களை மன்னிச்சுடுங்க" என்றான் கந்தன்.

சற்றுமுன் தனக்குக் குழந்தையில்லாக் குறையை நிவர்த்தித்து விளங்கிய அந்தச் சிசுவைப் பிரிந்த ஏக்கத்தில் இரு கண்கள் வழியாலும் நீர் அருவிலயப் பெருகவிட்டாள் கோமதி. அதைப்பார்த்து நின்ற கந்தன் கண்களும் கண்ணீரைக் கக்கின. தூரத்திலே சென்றுகொண்டிருந்த மீனு மட்டும் கண்ணீர் உகுக்கவில்லையா? ஆம்! அவள் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சோரவிட்டுக் கொண்டிருந்தன. காரணம்? உயிருடன் இழந்த தன் குழந்தையை மீண்டும் பெற்றுவிட்டாளல்லவா?

முற்றிற்று.

கலைஞன் தேடிய பொக்கிஷம்

ஆசிரியர் ப. நீலகண்டம் எழுதியவை

கோசலைச் செல்வன்	0	12
மிதிலைச் செல்வி	1	8
இரண்டும் கம்பராமாயண விரிவுரை		
இன்பப் பொழில்	0	14
தமிழறிஞர் எழுவரின் சொற்பொழித் திரட்டு		
மல்லிகைத் தோட்டம்	1	4
சிறுகதைத் தொகுதி		
இன்ப வாழ்வு	0	10
இனிய கட்டுரைத் தொகுதி		

கற்பு அல்லது நாகரிகப் பெண்	1	0
திரு. ரா. வெங்கடாசலம் எழுதிய நாடகம்		
புலமை வித்தக போதினி	1	8
திரு. சு. அ. இராமசாமி எழுதியது. தமிழ் இலக்கணங்களின் சாரம்		

ஒவ்வொன்றுக்கும் தபாற் செலவு அணா 4. விற்பனை ஏஜண்டுகள் தேவை. எங்களிடம் ஜோதி நிலய வெளியீடுகள் மற்ற பிரசுரங்களும் கிடைக்கும். உங்களுக்கு என்ன புத்தகம் தேவையானாலும் எங்களுக்கு எழுதுங்கள்.

கிடைக்குமிடம் :

கலைவாணிக் கழகம்

தமிழ் நூற்பிரசுராலயம்

புதுக்கோட்டை, (திருச்சி.)

"நாட்டில் சிறந்த தெது?"

"தமிழ் நாடு!"

"மொழியில் சிறந்தது?"

"தமிழ் மொழி!"

"தற்கால நூல்களில் எது சிறந்தது?"

"..........?..........?..........?"

"என். 'பெண்கள் சிறுகதைத் தொகுதி'தான்!"

மூன்ருவது கேள்விக்கு இப்படித்தான்
நீங்கள் பதில் சொல்லப்போகிறீர்கள்!

அரிய கற்பனை! அற்புத சிருஷ்டி!

தமிழ் இலக்கியத்தில் புது சகாப்தம்!

நம்நாட்டுப் பெண் எழுத்தாளர்கள் மட்டும் எழுதியது!

எங்கள் அடுத்த வெளியீடு!

'பெண்கள் சிறுகதைத் தொகுதி'

விரைவில் வெளிவரும்!

தொண்டன் பிரசுராலயத்தார்,

வேளுக்குடி.

Commercial Printing & Publishing House, G. T., Madras